பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா: 14.00 பக்கங்கள்:-(16+10) Registered as a News paper in Sri Lanka




வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 பங்குனி 27 புதன்கிழமை (10.04.2002) தொலைபேசி 3378 ஒலி 112

## சர்வதேசத்தை ஈர்த்துள்ள

# தலைவர் பிரபாகரன் சந்திக்கும்

# பத்திரிகையாளர் மாநாடு இன்று

### உள்ளூர் வெளியூர்ச் செய்தியாளர்கள் வன்னிக்குப் படையெடுப்பு

(கிளிநொச்சியில் இருந்து நமது நிருபர்)



**அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நிரந்தர யுத்த நிறுத்தத்திற்கு அடித்தளமிடும் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தானபின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முதலாவது செய்தியாளர் மாநாட்டை தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இன்று மாலை பெயர் குறிப்பிடப்படாத வன்னிப் பிரதேசம் ஒன்றில் நடத்தவுள்ளார்.**

**இன்று மாலை நடைபெறவுள்ள இச் செய்தியாளர் மாநாட்டுக்கு உலகின் பல வேறு பாகங்களிலும் இருந்து நூற்றுக்கணக்கான செய்தியாளர்கள் வன்னியில் வந்து குவிந்துள்ளனர். இம் மாநாட்டில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் கலந்துகொள்கிறார்.**

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து வன்னிக்கான பொருளாதாரத் தடை நீக்கம் ஏ9 கண்டி வீதி பாதைதிறப்பு என்பன ஏற்பட்ட பின்னர் விடுதலைப்புலிகள் பத்திரிகையாளர்கள் மாநாட்டுக்கு பத்திரிகையாளர்களை அழைத்திருப்பது சர்வதேச உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது. ஏ9 கண்டிவீதி திறந்து வைக்கப்பட்டதையடுத்து பயணிகள் போக்குவரத்து மற்றும் உணவுப் பொருட்களை கொழும்பிலிருந்து எடுத்து வருவதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் தொடர்பாகவும் கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து அவர்களின் யாழ் குடாநாட்டுப் பிரவேசம் அங்கு விடுதலைப் புலிகள் மேற்கொள்ளவுள்ள அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாகவும் இப்பத்திரிகையாளர் மகாநாட்டில் தலைவர் பிரபாகரன் தனது கருத்துக்களை வெளியிடுவார்

### மீன்பிடித்தடை விரைவில் நீக்கப்படும்

(யாழ். வந்த அமைச்சர் உறுதி)

(மந்திகை)

யாழ் குடாநாட்டுக்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு வருகைதந்துள்ள கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் மகிந்த விஜயசேகர மற்றும் 22 உயரதிகாரிகள் நேற்று வடமராட்சிக்கு விஜயம் செய்துள்ளனர்.

வடமராட்சிக் கடற்றொழிலாளர் சங்கங்கள் அமைச்சருக்கு பூரண கும்பம் வைத்து பெரும் வரவேற் பளித்தனர் அமைச்சரை வரவேற்று மாவட்ட கடற்றொழில் நீரியல் வள உதவிப் பணிப்பாளர் எஸ்.ஜேசப் தலைமையில் கூட்டம் நடைபெற்றது

(2ம் பக்கம் பார்க்க)

### தனியார் போக்குவரத்துச்சங்க தலைவருக்கு புலிகள் அழைப்பு

(கொழும்பு)

ஏ9 யாழ்ப்பாணம் கண்டிவீதி திறந்து வைக்கப்பட்டதை அடுத்து தனியார் பஸ் உரிமையாளர்கள் பஸ் போக்குவரத்துச் சேவையை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவரை விடுதலைப்புலிகள் வன்னிக்கு வருமாறு அழைப்பு

புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன், பஸ் உரிமையாளர் சங்கத்தலைவர் கெமுனு விஜயரட்னாவுக்கு தொலைபேசி மூலம் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

கிளிநொச்சியில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள இச்சந்திப்பின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ளவுள்

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து வன்னிக்கான பொருளாதாரத் தடை நீக்கம் ஏ9 கண்டி வீதி பாதைதிறப்பு என்பன ஏற்பட்ட பின்னர் விடுதலைப்புலிகள் பத்திரிகையாளர்கள் மாநாட்டுக்கு உள்ளூர் சர்வதேச பத்திரிகையாளர்களை அழைத்திருப்பது சர்வதேச உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது. ஏ9 கண்டிவீதி திறந்து வைக்கப்பட்டதையடுத்து பயணிகள் போக்குவரத்து மற்றும் உணவுப் பொருட்களை கொழும்பிலிருந்து எடுத்து வருவதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் தொடர்பாகவும் அரசுடன் விடுதலைபுலிகள் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து அவர்களின் யாழ் குடாநாட்டுப் பிரவேசம் அங்கு விடுதலைப் புலிகள் மேற்கொள்ளவுள்ள அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாகவும் இப்பத்திரிகையாளர் மகாநாட்டில் தலைவர் பிரபாகரன் தனது கருத்துக்களை வெளியிடுவார்

(2ம் பக்கம் பார்க்க)

பஸ் போக்குவரத்துச் சேவையை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தனியார் பஸ் உரிமையாளர் சங்கத தலைவரை விடுதலைப்புலிகள் வன்னிக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர்

யரட்ணாவுக்கு தொலைபேசி மூலம் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

கிளிநொச்சியில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள இச்சந்திப்பின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (வ)

## மலையக அமைச்சர்கள்

# ஆறுமுகம்- சந்திரசேகரன் தலைவர் பிரபாவை சந்திப்பர்

(கொழும்பு)

மலையக் அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு அழைப்பு விடுத்துள்ளது. எதிர்வரும் 14ம் திகதி தம்முடன் பேச்சுவார்த்தை நடத்த வருமாறு விடுதலைப்புலிகள் அழைப்பு விடுத்துள்ளதாக மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன்தெரிவித்துள்ளார் இவ்வழைப்பு ஆறுமுகம் தொண்டமானுக்கும் விடுக்கப்பட்டுள்ளது. நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தமிழ்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் புலிகளுடன் பேச்சு நடத்தவுள்ளனர்.

ஸ்ரீ.மு.காங்கிரஸ் எதிர்வரும் சனிக்கிழமை புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இச்சந்திப்புக்களில் தலைவர் பிரபாகரன் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது (வ)

## விடுதலைப் புலிகளுக்கு இன்று யாழ் பல்கலையில் வரவேற்பு

யாழ்ப்பாணம் வருகை தந்திருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கு யாழ் பல்கலைக்கழக சமூகம் இன்று வரவேற்பளிக்க உள்ளது.

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று முற்பகல் 10மணிக்கு இவ்வரவேற்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பல்கலைக்கழக சமூகத்தினர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. (இ)

## தபால் திணைக்களம் அரசிடமே இருக்கும்

தபால் கதிணைக்களத்தை தனியார் மயப்படுத்தும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை என மக்கள் தொடர்பாடல் அமைச்சர் தெரிவித்துள்ளார். - இத்திணைக்களம் மேலும் திறமையாகச் செயற்படும் ஒன்றாக மாற்றப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

# 106 இலங்கையர்களை இத்தாலி திருப்பியனுப்பும்

(கொழும்பு)

இத்தாலியில் சட்டவிரோத குடியேற்ற வாசிகளாக சென்ற 106இலங்கையர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் அவர்களிடம் கடவுச்சீட்டு இல்லை எனவும் இவர்களை இலங்கைக்கு அனுப்புவதற்காக அவசர சான்றுகளை வழங்க றோமில் உள்ள இலங்கைத்தூதரகத்தின் உதவி நாடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இவர்களுக்கான சான்றிதழ்கள் கிடைத்ததும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இவர்களை வாடகை விமானம் மூலம் இலங்கைக்கு அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படுவதாக இத்தாலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (த)

## புலிகள் திருமலைக்கு நேற்று சென்றனர்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் பொருட்டு விடுதலைப்புலிகள் நேற்றயதினம் தமது அலுவலகம் ஒன்றை திறந்துள்ளனர்.

திருகோணமலை மாவட்ட அரசியல்த்துறைப்பொறுப்பாளர் ஐங்கரன், கலையரசன், உட்பட நான்கு போராளிகள் திருகோணமலை நகருக்கு சென்றனர். அங்குசென்ற புலிகளுக்கு திருமலை நகரில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது. (வ)

## யாழ் மாநகர சபையின் பொன்விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையின் பொன்விழா இன்று பிற்பகல் 2மணிக்கு யாழ் மேயர் செ. கந்தையன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் யாழ் மாநகர முன்னாள் முதல்வரும் பாராளுமன்ற உறுப்பினருமான என்.இரவிராஜ் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ். மாவட்டத்தில் மீன்பிடித் துறையை நவீனமயப் படுத்துவேன்

## கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மீன்பிடித்துறையில் நவீன நடைமுறைகளைப் புகுத்தி அதன் மூலம் கடற்றொழிலாளர்களின் வாழ்வை உயரச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டு மீனவர்களும் இத்திட்டத்தில் இணைக்கப்படுவர்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வருகை தந்த கடற்றொழில், கடல்வள அமைச்சர் மகிந்த விஜயசேகர பிற்பகல் செயலகத்தில் இடம்பெற்ற மாநாட்டில்இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்:

ஏ-9 கண்டிவீதி திறக்கப்பட்டுள்ளமையானது மீனவர்களுக்கு நல்லதோர் வாய்ப்பாகும்.

குடாநாட்டில் இன்னமும் அபிவிருத்தியடையாத நிலையிலுள்ளமீன் பிடித்துறையை மேலும் விருத்தி செய்து, இங்கே பிடிக்கப்படும் மீனை தென்பகுதிக்கோ அன்றி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய சரியான ஒருதேசிய மீன்பிடிக் கொள்கையை வகுக்கத் திட்டமிட்டுள்ளோம்.

இது விடயம் பிரதமரின் கவனத்திற்கும்கொண்டுசெல்லப் படும்.

தற்போது நாட்டிற்கு மீன்பிடிமூலம் கிடைக்கும் 2வீத வருமானத்தை 4வீதமாக அதிகரிக்கவும்,

விவசாயத்துறை போன்று நாட்டுக்குத் வருமானம் தரும் துறையாக மீன்பிடித் துறையை மாற்றவும்.

அதிக வேலை வாய்ப்புக்களை வழங்கும் துறையாக மீன்பிடித்துறையை மாற்றவும் நடவடிக்கை எடுத்திருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன், மூன்று மாத காலத்தில் கடற்றொழிலாளர்களுக்கான 100 வீடுகள் அமைப்புத் திட்டமொன்றினை சாவற்காட்டில் நடைமுறைப்படுத்த விருப்பதாகவும் தெரிவித்தார். (உ-19)

## நூல் கொள்வனவு

(மண்டைதீவு)

தீவுப்பகுதி தெற்கு பிரதேச சபை நூல் நிலையத்திற்கு இரண்டரை இலட்சம் ரூபா விற்குபுத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

அடுத்த வாரமளவில் கொழும்பிலிருந்து அப்புத்தகங்கள் இங்கு வந்து சேரும் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## தொண்டர் ஆசிரியர் கலந்துரையாடல்

(செம்பியன்பற்று)

யாழ் மாவட்டத்தில் உள்ள தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் எதிர் வரும் வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-42)

## அமைச்சர் ஆறுமுகம் மலையக தலைவர்களை இன்று சந்திப்பார்

(கொழும்பு)

இந்திய வம்சாவளி மலையக மக்களின் பிரச்சினைகளை ஆராயும் பொருட்டு, மலையகத்தின் தலைவர்கள் அனைவரையும் வீடமைப்பு பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் அமைச்சு அலுவலகத்தில் இன்று சந்திக்கவுள்ளார்.

எதிர்வரும் 14 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திக்குமாறு நோர்வே மூலம் விடுக்கப்பட்ட அழைப்பினை அமைச்சர் ஏற்றுக் கொண்டதனையடுத்தே இச்சந்திப்பு இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரபாகரனை சந்திப்பதற்கு முன்னர் மலையக மக்களின் பிரச்சினை தொடர்பாக தலைவர்களை சந்தித்து மக்களின் குறைபாடுகளையும் கொள்கைகளையும் கேட்டறிவதற்காகவே இக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சின் இணைப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார். (உ-8)

## தொடர்பு சாதன சட்டங்களில் மாற்றம்

(கொழும்பு)

தொடர்பு சாதனங்களை தொடர்புபடுத்திக் கொள்ளுவதற்கு இடையூறாகவுள்ள சட்ட திட்டங்கள் திருத்தியமைக்கப்படும் என்று ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

மக்கள் தொடர்பாடல் அமைச்சின் நிதி ஒதுக்கீடு பற்றி பாராளுமன்றத்தில் நடைபெற்று வரும் குழுநிலை விவாதத்தின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பதிலாக சுயாதீனமான தகவல் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும்,

ஊடகத்துறை செய்தியாளர்களுக்கு ஓய்வூதியம்வழங்குவது தொடர்பான சட்ட மூலம் தற்போது சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவியேற்றபின், அரச தொடர்பு சாதனங்களுக்கு முன்னர் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் நீங்கி அவைமக்களுடன்ஒன்றிணைந்...

## தகனம் செய்வதற்கு நியாயமான கட்டணம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பிரதேசசபைக்குட்பட்ட கனத்தை மரத்தடி இந்து மயானம், திருநெல்வேலி இந்து மயானம் என்பவற்றில் தகனம் செய்வதற்கான கட்டண ஒழுங்குகளில் காணப்பட்ட குறைபாடுகள் நீக்கப்பட்டுள்ளன.

இவ்வளவு காலமும் அந்த மயானத்தில் தகனக்கிரியை செய்வதில் தரகர் தொல்லை அதிகளவு கட்டண அறவீடு ஆகிய குறைபாடுகள் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி விடயங்கள் சம்பந்தமான அறிவுறுத்தல்களை பிரதேச செயலரிடம் பெறலாம் எனவும் மக்கள் விழிப்பாக நடந்து கொள்ளுமாறும் அப்பிரதேச சபைத் தலைவர் செ.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (எ-19)

## இராசி பலன்

10-04-2002

(பங்குனி 27, புதன்.)

திரயோதசி மு.இ 9.43வரை

பூரட்டாதி மு.இ 10.49வரை

ராகுகாலம் 12.06-1.36

நல்லநேரம் 4.36- 6.06

அமிர்தசித்தம்,

பிரதோசவிரதம்.

### மேடம்

அமைதிக்குறைவு, காரிய தாமதம்,பிரயாணம், தந்தை வழி உறவு.

### இடபம்

காரியஅனுகூலம், தெய்வ சிந்தை, பொருள்சேர்க்கை மனமகிழ்ச்சி.

### மிதுனம்

கடினஉழைப்பு, உற்சாகம் தூரதேசச்செய்தி, முயற்சி கைகூடும்.

### கடகம்

கட்டுப்பாடு, வீண்பயம், தொழிலில் திருப்பம், காரிய தாமதம்.

### சிங்கம்

உடல்வியாதி, உறவினர் மனஸ்தாபம், காரியதாமதம் போசன சுகம்.

### கன்னி

திடீர்பயணம், நல்லவரவேற்பு, முயற்சி கைகூடும், சிநே...

## மீன்பிடி

இக்கூட்டத்தில் அமைச்சர் மகிந்த உரையாற்றுகையில்.

மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை மிகவிரைவில் நீக்கப்படும் அத்துடன் மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகளும் தீர்க்கப்படும்.

கடந்த இருபது வருடங்களாக நாட்டில் நடைபெற்ற யுத்தத்தினால் அமைதி சீர்குலைந்துவிட்டது.இவ் யுத்தம் காரணமாக அமைச்சர்...

## வெற்றிக்கு வழிவகுத்த முரளி

நேற்று முன்தினம் சார்ஜாவில் இடம்பெற்ற ஒரு நாள் முதல் போட்டியில், இலங்கை 40 ஓட்டங்களால் பாகிஸ்தானை வெற்றி கொண்டது.

இலங்கை 241 ஓட்டங்களையும், பாகிஸ்தான் 201 ஓட்டங்களையும் இப்போட்டியில்பெற்றன.

3விக்கெட்டுகளை வீழ்த்தி இலங்கையின் வெற்றிக்கு முத்தையா முரளிதரன் வழி வகுத்தார்.

சனத் ஜெயசூரிய 81ஓட்டங்களைப் பெற்றார். (உ- 206)

## தலைவர்

என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

12 வருடங்களுக்குப் பிந்திய மாநாடு

1990ம் ஆண்டு இந்திய அமைதிப்படையின் வெளியேற்றத்தின் பின் அதாவது சுமார் 12 வருடங்களின்பின் இப் பத்திரிகையாளர் மாநாடு நடைபெறவிருப்பதால், பல்வேறு கஷ்டங்களையும் அனுபவித்த தமிழ் மக்களுக்கு ஆறுதலும், சமாதானத்தில் நம்பிக்கையும் ஏற்படுத்தக் கூடிய வகையில் பிரபாகரன் கருத்துக்களை முன்வைப்பார் என்று சர்வதேச சமூகம் எதிர்பார்த்து நிற்கின்றது என்று அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சர்வதேச பத்திரிகையாளர் படையெடுப்பு

இதேவேளை இப்பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொள்ளவென பிரசித்தி பெற்ற சர்வதேச செய்தி நிறுவனங்களான ராய்ட்டர், ஓ.பி, ஏ.எப்.பி உட்பட சர்வதேச நிறுவனங்கள் தமது செய்தியாளர்களை வன்னிக்கு அனுப்பி வைத்துள்ளனர். இவர்களுடன் இந்தியச் செய்தியாளர், கொழும்புச் செய்தியாளர், உள்ளூர்ச் செய்தியாளர்களென பலரும் வன்னிக்கு படைஎடுத்துச்சென்றுள்ளனர்

வவுனியாவில் இருந்து வன்னிக்குச் செல்லவுள்ள செய்தியாளர்களின் போக்குவரத்து நன்மைகருதி புளியங்குளத்தில் அமைந்துள்ளவிடுதலைப் புலிகளின் சோதனைச்சாவடியூடாக காலை10மணிமுதல் மாலை 3மணிவரை வாகனப் போக்குவரத்துக்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் வவுனியா அலுவலகத்தில் பதிவுசெய்தபத்திரிகையாளர்கள்

செய்தியாளர் மாநாட்டில்...

…துள்ளார்.

மக்கள் தொடர்பாடல் அமைச்சின் நிதி ஒதுக்கீடு பற்றி பாராளுமன்றத்தில் நடைபெற்று வரும் குழுநிலை விவாதத்தின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போது ஊடகத்துறைகளில் நடைமுறையில் இருக்கும் பத்திரிகைச் சபைக்கு … பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவியேற்றபின், அரச தொடர்பு சாதனங்களுக்கு முன்னர் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் நீங்கி அவை மக்களுடன் ஒன்றிணைந்தவையாக காணப்படுகிறது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-8)


## யாழ் மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம்

## 2002ம் ஆண்டு

### பொதுக்கூட்டமும் நிருவாகசபைத் தெரிவும்

யாழ் மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனத்தின் 2002ம் ஆண்டுப் பொதுக்கூட்டமும் நிருவாகசபைத் தெரிவும் 28. 04. 2002 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 30 மணிக்கு (புதியநேரம்) இல. 165 மானிப்பாய் வீதியிலுள்ள யாழ்ப்பாணம் வணிகர் கழகப் பணிமனையில் நடைபெறும். சகல வர்த்தக சங்கங்களினதும் தலைவர், செயலாளர், பொருளாளர், உப தலைவர். உப செயலாளர், நிருவாக சபை உறுப்பினர்களும் இப் பொதுச் சபைக் கூட்டத்தில் பங்குபற்றி வலுவான நிருவாக அமைப்பை ஏற்படுத்தி வளமான எதிர்காலம் அமைப்பீர்.

**யாழ் மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம்**
165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-3942)


**சிங்கம்**

உடல்வியாதி, உறவினர் மனஸ்தாபம், காரியதாமதம் போசன சுகம்.

**கன்னி**

திடீர்பயணம், நல்லவரவேற்பு, முயற்சி கைகூடும், சினேகிதர் உதவி.

**துலாம்**

சத்துரு ஜெயம், செய்தொழில் விருத்தி, காரியநன்மை, சந்தோசமான நிகழ்வு.

**விருச்சிகம்**

வியாபாரநன்மை, மனச்சஞ்சலம், காரியதாமதம், குடும்பச்சச்சரவு.

**தனுசு**

நம்பிக்கைகுறைவு முயற்சி தாமதம், நண்பர்கள் உதவி இலட்சுமிகரம்.

**மகரம்**

கூட்டுமுயற்சி, அன்னியர் சந்திப்பு, குடும்பத்தில் மகிழ்ச்சி, காரியஅனுகூலம்

**கும்பம்**

மாதர்நட்பு, கௌரவக் குறைவு, தனவிரயம், திடீர் நன்மை.

**மீனம்**

புதிய பொருள் சேர்க்கை, நல்லமுயற்சி, போசன சுகம் செல்வாக்கு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**

…வர்கள் தொடர்பான பிரச்சினைகளும் தீர்க்கப்படும்.

கடந்த இருபது வருடங்களாக நாட்டில் நடைபெற்ற யுத்தத்தினால் அமைதி சீர்குலைந்துவிட்டது. இவ் யுத்தம் காரணமாக அமைச்சர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருவதில்லை. ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள அமைதி சூழ்நிலை காரணமாக அமைச்சர்களும் தற்போது யாழ் வருகின்றனர்.

இந் நிலையில் கடற்றொழில்நீரியல் வள அமைச்சர் என்றவகையில் நான் யாழ்ப்பாணம் வந்து உங்களைச் சந்திந்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் இங்குவந்ததால் மீனவர் குடும்பங்கள் படுகின்ற துன்பங்களை என்னால்உணர முடிகிறது.

மீனவர் குடும்பங்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்குச் செல்ல நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.

அரசாங்கம் எனது அமைச்சுக்கு 100மில்லியன்ரூபாவை ஒதுக்கியுள்ளது. இந்நிதியில் 50மில்லியன் ரூபாவை வடக்கு கிழக்கு மாகாண கடற்றொழில் அபிவிருத்திக்கு செலவிடவுள்ளேன் என்று அமைச்சர் தெரிவித்தார். (இ-23)

…யூடாக காலை10மணிமுதல் மாலை 3மணிவரை வாகனப் போக்குவரத்துக்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

**புலிகளின் வவுனியா அலுவலகத்தில் பதிவுசெய்தபத்திரிகையாளர்கள்**

செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக நூற்றுக்கணக்கான செய்தியாளர்கள் தமது பெயர்களை விடுதலைப்புலிகளின் வவுனியா அரசியல்அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார்கள் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

சர்வதேச செய்தியாளர்களின் முழுக்கவனத்தையும் ஈந்துள்ள இச் செய்தியாளர் மாநாட்டை இலங்கை ரூபவாஹினி ஒளிபரப்புக் கூட்டுத்தாபனமும், மற்றும் தனியார் ஒலிஒளிபரப்புக்கூட்டுத் தாபனமும் நேரடியாக ஒளிபரப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன

இது இவ்வாறிருக்க பல்வேறு செய்தித் தாபனங்களில் இருந்து வவுனியாவிலும், வன்னியிலும் விடுதிகளிலும், தனியார் வீடுகளிலும் தங்கியுள்ள செய்தியாளர்கள் மாநாடு முடிவடைந்ததும் உடனடியாகவே வவுனியா திரும்பி தத்தமது செய்தி நிறுவனங்களுக்குசெய்திகளை அனுப்பிவைக்க இருப்பதாகவும் எமது செய்தியாளர்அறிவிக்கிறார் (வ)

### புனர்வாழ்வு அமைச்சர் விரைவில்

# ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிராக

# ஐ. நா. மனிதவுரிமைக் குழுவுக்கு முறைப்பாடு

(கொழும்பு)

புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன ஜனாதிபதி குமாரதுங்கவுக்கெதிராக ஐ. நா. மனிதவுரிமைகள் குழுவுக்கு முறைப்பாடு செய்யவிருக்கிறார்.

அமைச்சர் ஜயவர்த்தன எதிர்க்கட்சியிலிருந்த காலத்தில் அவருக்கெதிரான பொய் குற்றச்சாட்டுகளை சுமத்திய தன்மூலம், அவரையும், அவரது குடும்பத்தவரையும் அரசியல் துன்புறுத்தல்களுக்கும், மரண அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாக்கியிருந்தார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அமைச்சர் இதுபற்றி ஏற்கனவே 2000 ஆம் ஆண்டு பெப்ரவரியில் ஜெனீவாவிலுள்ள ஐ. நா. குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

விடுதலைப்புலிகளுடன் ஜயவர்த்தனவுக்கு இரகசியமான கொடுக்கல் வாங்கல்கள் இருந்ததாகவும், அவர் ஐ. தே. க. வுக்கும் புலிகளுக்குமிடையே ஒரு இணைப்பாக இருந்ததாக 1998 இலிருந்தே குற்றச்சாட்டுகளை சுமத்தி வந்ததும் அரச ஊடகங்கள் அதற்கு முன்னுரிமைவழங்கி பிரசுரித்ததும் தெரிந்ததே.

இந்நிலையில், ஜனாதிபதி சட்டத்தின்முன் விசாரணை செய்யப்படக்கூடியவரல்ல என்பதால்தான் இதனை இலங்கைக்கு வெளியேஐ. நா. குழுவிடம் முறையிடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (உ)

## அடிக்கடி பழுது

(செம்பியன்பற்று)

பருத்தித்துறையில் இருந்து மானிப்பாய் ஊடாக நவாலி செல்லும் 767 ஆம் இலக்க பேருந்து அடிக்கடி பழுதடைவதால் பயணிகள உரிய நேரத்தில் உரியஇடத்திற்கு போய்ச்சேர முடியாமல் பெரும் சிரமத்தை எதிர் நோக்கி வருகின்றனர்.

அத்துடன்,வேலைத்தளத்திற்கும் உரிய நேரத்திற்கு போக முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (உ-42)

## சிறைச்சாலையில் நிலவும் குறைகளை அறிய குழு

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் நிலவும் குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கான திட்டங்களை வகுக்கக்கூடிய விசேட ஆலோசனைகுழுவொன்றுநியமிக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் ஜோன்அமரதுங்கா தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலையில் இருந்து பலதரப்பட்ட குறைபாடுகள் பற்றி முறைப்பாடுகள் கிடைப்பதாகவும் இவ்வாலோசனைக்குழுநியமிக்கப்பட்டதும் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (உ-5)

# வன்னிச் சிறாரின் போஷாக்கு நிலைபற்றி எண்ணிப் பார்ப்பாரில்லை

(வவுனியா)

கொழும்பில் அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் திணித்த பொருளாதாரத் தடை, இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்தல், நிர்க்கதிநிலை காரணமாகவும் வன்னியில் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் பாரிய போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பிராந்தியத்தில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள்,உதவி அமைப்புக்கள் இருந்தும் இப்பிரச்சினைக்கு உள்ளூர்அமைப்புக்களே தீர்வு தேட வேண்டியுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் மன்றச் செயலாளர் டாக்டர் கே.சிவபாலன் இவ்வாறுதெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின்போஷாக்கின்மை நிலை குறித்து சர்வதேச அரசசார்பற்றநிறுவனங்கள் எதுவுமே கூறுவதில்லை.

அவர்கள் ஏதாவது கூறினாலும் அதன் உள்ளடக்கமும் சந்தர்ப்பமும் நேரடியாக அல்லது மறைமுகமாக இலங்கை அரசினதும் அதன் யுத்தக் கொள்கைகளை ஆதரிக்கும் சக்திகளினதும் நலன்களுக்கு அனுசரணையானதாகவே அமைந்திருக்கும் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, தாய்- சேய் ஊட்டம் குறித்த பொதுமக்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் இந்தவாரம் வன்னிப் பிராந்தியத்தின்சகல பகுதிகளிலும் இடம்பெறவுள்ளதாக வடக்கின் மிகப்பெரிய அரசசார்பற்ற நிறுவனமாகிய தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடத்தவுள்ளது. (உ)

## குடியமர அனுமதி கோரி அரச அதிபருக்குகடிதம்

(செம்பியன்பற்று)

தனங்கிளப்பு, மறவன் புலோ, கைதடி, நாவற்குழி ஆகிய கிராம சேவையாளர் பிரிவு மக்கள் ஒன்றிணைந்து தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை ஊடாக யாழ். மாவட்ட அரச அதிபருக்கு தமது மீள் குடியேற்றம் தொடர்பாக கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளனர்.

அக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ள விடயங்களாவன,

மேற்படி மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளில் வாழும்மக்கள் 12.12.1999ல் இடம் பெயர்ந்து வலிகாமம், வடமராட்சிப்பகுதிகளுக்குச் சென்று வாழ்ந்து வருகின்றனர். தென்மராட்சியில் முதலில் இடம் பெயர்ந்தவர்கள் இப்பிரிவுகளில் வசிக்கும் மக்கள் இவர்களின் 2000 ஆண்டு நெல் அறுவடை செய்யாமலும், கடற்றொழில் உபகரணங்களை இழந்தும் வீட்டு உடைமைகளை விட்டும்வெளியேறி இன்று வரைக்கும் தமது வீடுகளை பார்க்க முடியாதுள்ளனர்.

தென்மராட்சியில் ஏனைய பிரிவு மக்கள் தமது வீடுகளுக்கு சென்று வரும் வேளையில், மேற்குறித்த மூன்று பிரிவு மக்களும் இதுவரை தமது வீடுகளை பார்ப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. 521 பிரிகேட்டுக்கு உட்பட்டு இருக்கும் இப்பகுதிகளை மக்கள் சென்று பார்வையிட அனுமதி பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இப்பகுதியில் ஏனைய பிரிவுகளில் வசித்தவர்கள் மறைமுகமாக சென்று வருகின்றனர் அத்துடன் உடைமைகளையும் எடுத்து வருகின்றனர். வீட்டுக்குரிய உரிமையாளர்கள் போக முடியாத நிலையில் உள்ளார்கள். இதனை தங்களினால் 521 பிரிகேட்டுடன் தொடர்பு கொண்டு அனுமதி பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-42)

## நெடுந்தீவு மக்கள் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய கோரிக்கை

(நெடுந்தீவு)

தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கோரி நெடுந்தீவு 6,7,8,9,10 ஆம் வட்டார மக்கள் அண்மையில் ஊர்வலமாகச் சென்று நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை, நெடுந்தீவு பிரதேச சபை ஆகியவற்றில் மகஜர்களைக் கையளித்தனர்.

வீடமைப்புத் திட்டத்தில் இணைத்தல் மணல்கிணற்றுப் பகுதியில் மண் அகழ்வதைத் தடுத்தல்,

இந்திய மீன் பிடிப்படகுகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தல்,

மின்சாரம், பஸ் சேவை என்பவற்றை ஒழுங்கமைத்தல் ஆகிய கோரிக்கைகளை ஊர்வலத்தில் சென்ற மக்கள் முன்வைத்தனர். (உ-250)

# ஜனநாயகம் தழைத்தோங்க நீதித்துறை நிச்சயமாக பாடுபடும்

### நீதிபதி இ. த. விக்னராஜா உறுதியுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் ஜனநாயகம் தழைக்கவும் மக்கள் ஜனநாயகத்துடன் வாழவும் நீதித்துறை நிச்சயமாகப் பாடுபடும்.

இவ்வாறு யாழ். மாவட்ட நீதிபதி இ. த. விக்னராஜா தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ...

நீதிமன்றங்கள் செயற்படுகின்றன. நீதிமன்றங்களுக்கும் பத்திரிகைகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அந்தவகையில் பத்திரிகைகளும் செய்திகளை அச்சமின்றி துணிவுடன் வெளியிடவேண்டும்.

உண்மையை உள்ளபடி உரைப்பவைகளாக பத்திரிகைகள் இருக்க வேண்டும்.

இளைஞர்களில் அபார ஆற்றல் படைத்தவர்கள் இருக்கிறார்கள்.

உலகவல்லரசானஅமெரிக்கா இன்று இந்தியாவில் தங்கி நிற்கிறது. அதற்குக் காரணம் அதன் தொழில் நுட்பத் திறமையும் தொடர்பாடல் துறையில் அது படைக்கும் சாதனைகளுமாகும்.

## குமுதினிப் படகில் பொதிகள் ஏற்றத் தடை

ணங்களை இழந்தும் வீட்டு உடைமைகளை விட்டும்வெளி

கேட்டுக் கொள்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-42)

# குமுதினிப் படகில் பொதிகள் ஏற்றத் தடை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு-குறிகட்டுவான் சேவையில் ஈடுபடும் வீதி அபிவிருத்திஅதிகார சபைக்கு சொந்தமான குமுதினிப் படகில் மோட்டார் சைக்கிள், மற்றும் பொதிகள் ஏற்றுவது தடை செய்யப்பட்டுள்ளதாக நிறைவேற்றுப் பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை யாழ்ப்பாணம் என முத்திரை இடப்பட்டு அறிவுறுத்தல் விளம்பரங்கள் துறைமுகப் பகுதிகளிலும் படகிலும் காணப்படுகின்றது.

1)மோட்டார் சைக்கிள்கள் பொதிகள்ஏற்றுவதும்,புகைத்தலும் தடை செய்யப்பட்டுள்ளது.

2)அனுமதிச்சீட்டு இன்றிப் பிரயாணம் செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும் ஆகிய வாசகங்கள் காணப்படுகின்றன. (உ.249)

நாயகம் தழைக்கவும் மக்கள் ஜனநாயகத்துடன் வாழவும் நீதித்துறை நிச்சயமாகப் பாடுபடும்.

இவ்வாறு யாழ். மாவட்ட நீதிபதி இ. த. விக்னராஜா தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் பிரிவு செயலர் எஸ். மயில்வாகனம் தலைமையில் பத்திரிகையாளர் பயிற்சிநெறி மாணவர்களால் நடத்தப்பட்ட முத்தமிழ்விழாவில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது;

ஜனநாயகத்தைக் காப்பாற்றும் காவல் தெய்வங்களாக

திரிகைகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அந்தவகையில் பத்திரிகைகளும் செய்திகளை அச்சமின்றி துணிவுடன் வெளியிடவேண்டும்.

உண்மையை உள்ளபடி உரைப்பவைகளாக பத்திரிகைகள் இருக்க வேண்டும். அதனை விடுத்து பக்கச்சார்பாக மனச்சாட்சியை விலை பேசிஅடகு வைத்து பத்திரிகை நிறுவனங்கள் செயற்படுமாயின் அது மக்களைத் தவறான பாதையில் நடத்துவதுடன் பத்திரிகை தர்மத்தை மீறியதாகவே அமையும்.

பத்திரிகைகளைப்பொறுத்தவரையில் ஒருஅரசாங்கத்தைக் கூட பதவியில் இருந்து தூக்கியெறியக்கூடிய வல்லமை பொருந்தியவையாக காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில்பணியாற்றுகின்ற நீதிபதிகள் அனைவரும் உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்கினேஸ்வரனிடம் பயின்றவர்கள்.

அவர் உயர் நீதிமன்ற நீதியரசராக கொழும்பில் பதவியேற்றுக்கொண்ட பொழுது தமிழில் உரையாற்றியமை வரலாற்றில் தடம் பதித்த ஒரு நிகழ்வாகும்.

அதுமட்டுமன்றி அவர் அந்த நிகழ்வில் ஆற்றிய உரையானது இலங்கை அரசாங்கத்தை மட்டுமன்றி சர்வதேசத்தையே உலுப்பிவிட்டது.

எமது தமிழ் தலைமையிடம் திறன் இருக்கிறது. தொழில் நுட்பம் இருக்கிறது. எமது

றார்கள்.

உலகவல்லரசான அமெரிக்கா இன்று இந்தியாவில் தங்கி நிற்கிறது. அதற்குக் காரணம் அதன் தொழில் நுட்பத் திறமையும் தொடர்பாடல் துறையில் அது படைக்கும் சாதனைகளுமாகும்.

அதேபோன்று எமது நாட்டில் சமாதானம் உருவாகுமானால் அமெரிக்கா மட்டுமன்றி ஜப்பானும் கூடஎமதுதொழில் நுட்பங்களில் தங்கிநிற்கவேண்டிய ஒரு காலம் உருவாகும்.

எமது சமுதாயம் இவ்வளவு இக்கட்டான சூழ்நிலைகள் வந்த பொழுதும் தளராது நின்று நிலைக்கிறது. அதனை விட எமது மக்கள் இன்றைய கால கட்டத்தில் நூலில் நடப்பதைப்போன்று நடக்கிறார்கள்.மதிநுட்பத்தைப்பாவித்து நடக்க வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

எமது இனம் சுதந்திரத்துடனும் பூரணத்து வத்துடனும் வாழ்வதற்கு,எமது இளம் சிங்கங்களை எந்தவொரு சக்தியாலும் வெற்றிகொள்ளமுடியாத சமுதாயமாக உருவாக்குவதற்கு நாம் திடசங்கர்ப்பம் பூண வேண்டும்.

அதனை நாம் அடைவதற்கு பத்திரிகைகள் தமதுஅளப்பரிய பங்கினை தகுந்தவாறு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். (த)

# வேலையற்ற பட்டதாரிகளின் மறியல் போராட்டம் ஒத்திவைப்பு

## சாதகமான பதில் வழங்க 25ஆம் திகதிவரை அவகாசம்

(யாழ்ப்பாணம்)

வேலைவாய்ப்பு வழங்கக் கோரி யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளால் யாழ். செயலகம் முன்பாக மேற்கொள்ளப்பட்டு வந்த மறியல் போராட்டம் 25 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் புதிய உயர் கல்லூரியில் ஒன்றுகூடிய நூற்றுக்கணக்கான வேலையற்ற பட்டதாரிகள், ஊர்வலமாக யாழ்.செயலகத்திற்குச் சென்று மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கத்திடம் மகஜர் ஒன்றினைக் கையளித்துள்ளனர்.

இம்மாதம் 25 ஆம் திகதிக்குள் தமக்கு சாதகமான பதில் தரப்படாவிட்டால்,போராட்டம் தொடரும், என்பது அம் மகஜர் மூலம் வலியுறுத்தப்பட்டது.

இதேவேளை, மேற்படி விடயத்தை உடனடியாக உரிய இடத்தின் கவனத்துக்கு கொண்டுவருவதாகவும்,

இன்னும் இரு தினங்களில் சாதகமான பதில் தரப்படும் எனவும் மேலதிக அரச அதிபர் உறுதியளித்தார். (உ)

# பிரபாவின் பத்திரிகையாளர் மாநாட்டிற்கு ஜே.வி.பி.-சிஹல உறுமய கண்டனம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் இன்று நடத்தவுள்ள பத்திரிகையாளர் மாநாட்டுக்கு இனவாதக் கட்சிகளான ஜே.வி.பீ. மற்றும் சிஹல உறுமய ஆகியன பலத்த கண்டனம் தெரிவித்துள்ளன.

தனிநாடு ஒன்றிற்கான அறிகுறியாகவே இப் பத்திரிகையாளர் மாநாடு விளங்குவதாகவும் இதன் மூலம் உள்ளுர் மற்றும் சர்வதேச சமூகத்தின் கண்களில் தனிநாட்டு மனப்பான்மையை உருவாக்குவதற்கு புலிகள் விரும்புவதாகவும் ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார். இது குறித்து சிஹல உறுமயவின் தலைவர் திலக் கருணாரட்ண கருத்துத் தெரிவிக்கையில்:-

வன்னிக்கு உள்ளுர் வெளியூர் பத்திரிகையாளர்களை வரவழைப்பதன் மூலம் பிரபாகரன் தனிநாட்டு உணர்வொன்றை தெரிவிக்க முற்படுகிறார் என்று கூறினார். (இ-5)

## தியாகி சிவகுமாரின் சிலை திறப்பு இன்று

(உரும்பிராய்)

தியாகி பொன் சிவகுமாரனின் உருவச்சிலை இன்று மாலை 4 மணிக்கு உரும்பிராய் மத்திய சந்தையில் வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம் தலைமையில் திறந்து வைக்கப்பட உள்ளது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண ஈ.பி.டி.பி. அமைப்பாளர் கே.வி. குகேந்திரன் பிரதம விருந்தினராகவும், நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன், வலி. கிழக்கு பிரதேச சபை உபதலைவர் யு.எல்.ஏ. ரவி மற்றும் தியாகி சிவகுமாரின் தாயார் திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரை ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(இ-125)

## சென். பீற்றஸ் அணி யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

கொழும்பு சென். பீற்றஸ் கல்லூரியின் உதைபந்தாட்ட அணி யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வணபிதா பேணாட் அடிகளாரின் அழைப்பின் பேரில் இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது.

இங்குவரும் உதைபந்தாட்ட அணியினர் நாளை வியாழக்கிழமை பி.ப. 4மணிக்கு சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியுடன் பாடசாலை மைதானத்திலும்,

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணிக்கு இளவாலை சென். ஹென்றிஸ் அணியுடன் ஹென்றிஸ் மைதானத்திலும், சனிக்கிழமை பி.ப. 4 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி அணியுடன் பாடசாலை மைதானத்திலும் விளையாடவுள்ளது. (த-110)


## PATRICIAN INSTITUTES

### பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

ஆரம்பம் 15.04.2002

I. A) ADVANCED DIPLOMA IN COMPUTER PROGRAMMING — DURATION 1 YEAR
B) DIPLOMA IN MICRO SOFT OFFICE — DURATION 6 MONTHS
C) DIPLOMA IN TYPE SETTING — DURATION 3 MONTHS
D) DIPLOMA IN COMPUTERISED ACCOUNTING — DURATION 4 MONTHS
E) DIPLOMA IN DESK-TOP PUBLISHING — DURATION 6 MONTHS
F) DIPLOMA IN ACCESS INCLUDING S.Q.L. — DURATION 5 MONTHS
G) DIPLOMA IN HARDWARE ENGINEERING — DURATION 1 YEAR

II. CERTIFICATE COURSES:-

i) MS WORD - 2000
ii) MS EXCEL - 2000
iii) MS ACCESS - 2000
iv) MS POWER POINT
v) VISUAL BASIC VER. 6.5
vi) PASCAL
vii) d BASE III+
viii) PAGE MAKER
ix) WINDOWS 95
x) COREL DRAW
xi) d BASE FOR WINDOWS
xi) PRINT SHOP DELUXE
xii) ADOBE PHOTO SHOP

III. இவற்றுடன் சிறுவர்களுக்கான பயிற்சிகளும் ஆரம்பமாகின்றன

1) YEAR 3 - YEAR 5
CHILDREN COMPUTER STUDIES - I
CHILDREN GAMES - I

2) YEAR 6 - YEAR 10
CHILDREN COMPUTER STUDIES - II
CHILDREN GAMES - II

IV. சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (ஆங்கிலம்) — காலம் 6 மாதங்கள்
V. சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (தமிழ்) — காலம் 6 மாதங்கள்
VI. மோட்டார் வாகனம் திருத்துதல் (Petrol, Diesal வாகனங்கள்) — காலம் 6 மாதங்கள்
VII. ஜெனரல் எலெக்ரிஷன் (மின்சார இணைப்பு, மோட்டார் றிவைண்டிங்) — காலம் 6 மாதங்கள்
VIII. வானொலி, தொலைக்காட்சி பெட்டி திருத்துதல் — காலம் 8 மாதங்கள்
IX. கடைச்சல் இயந்திர தொழிற்பயிற்சி — காலம் 3 மாதங்கள்
X. மின் ஒட்டுநர் பயிற்சி — காலம் 3 மாதங்கள்
XI. மரவேலை (With use of Machinery) — காலம் 6 மாதங்கள்
XII. குளிர்சாதனப் பெட்டி திருத்துதல் — காலம் 6 மாதங்கள்

எமது நிறுவனத்தில் கணணிகள் சம்பந்தமான சகல திருத்த வேலைகளும், வானொலி, தொலைக்காட்சி பெட்டிகளில் ஏற்படும் எல்லாவிதப் பழுதுகளும் திருத்தம் செய்து கொடுக்கப்படும்.



### வேலணை பிரதேச சபை நடாத்தும் தேவா திறந்த வெளி அரங்க திறப்பு விழாவும் முத்தமிழ் விழாவும்

காலம்
10.04.2002 புதன்கிழமை ~ 11.04.2002 வியாழக்கிழமை

இடம்
தேவா திறந்த வெளி அரங்கு வங்களாவடி, வேலணை

தலைவர்
திரு. ந. கருணாகரகுருமூர்த்தி ஜே.பி.யு.எம்.
(தலைவர், வேலணை பிரதேச சபை)

முதல்நாள் நிகழ்வுகள்
இன்று (10.04.2002) புதன்கிழமை பிற்பகல் 4.30 மணி

பிரதம விருந்தினர் : பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

* விழா நாயகர்களை பெருங்குளம் முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்திலிருந்து மங்கள வாத்திய சகிதம் விழா அரங்கிற்கு அழைத்துவரல்
* புதிதாக அமைக்கப் பெற்ற தாய் சேய் நிலையத்தை திறந்து வைத்தல் - திரு. ரி.வி. கிருஸ்ணசாமி (பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்)
* பேருந்து தரிப்பிடத்தை திறந்து வைத்தல் கே.வி.கே. குகேந்திரன் (முன்னாள் பா.உ., பிரதம அமைப்பாளர், ஈ.ம.ஜ. கட்சி, யாழ். மாவட்டம்)
* தேவா திறந்த வெளியரங்கை திறந்து வைத்தல் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை (துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)
* நாதஸ்வர, தவில் கச்சேரி - ஈழ நல்லூர் பிச்சையப்பா குழுவினர்

கலை நிகழ்ச்சிகள்

* தீப நடனம் - செல்வி தனபாலசிங்கம் சோபிகா
* நாடகங்கள்

நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட மகாவித்தியாலய மாணவ மாணவிகள் வழங்கும் விசேட கூத்து
"சுந்தரர் தடுத்தாட்கொள்வல்"
ரஞ்சன் ஆட்ஸ் வழங்கும் (ம. பாலனின்

X. மின் ஒட்டுநர் பயிற்சி — காலம் 3 மாதங்கள்
XI. மரவேலை (With use of Machinery) — காலம் 6 மாதங்கள்
XII. குளிர்சாதனப் பெட்டி திருத்துதல் — காலம் 6 மாதங்கள்

எமது நிறுவனத்தில் கணணிகள் சம்பந்தமான சகல திருத்த வேலைகளும், வானொலி, தொலைக்காட்சி பெட்டிகளில் ஏற்படும் எல்லாவிதப் பழுதுகளும் திருத்தம் செய்து கொடுக்கப்படும்.

**Note:-** 1) பயிற்சிக் கட்டணங்களை தவணை முறையில் செலுத்தலாம்.
2) வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் போதிய ஆதாரம் காட்டி பங்குக் குருவானவரின் (Parish Priest) சிபாரிசின் பெயரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெற்றுக்கொள்ளலாம்.
3) எமது நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும்.
4) பயிற்சி நெறிகள் சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**PRODUCTION AND REPAIRING ON ORDER......!**
**கட்டமைத்தலும் திருத்துதலும்**

சகல விதமான இரும்புகள் உற்பத்திப் பொருள்களும், ஒட்டு வேலைகளும், மரத் தளபாடங்களும், உறுதியான தொழில்சார் அறிவு மூலமும் ஓடருக்கு மிக விரைவாகவும் திறமையாகவும் செய்து கொடுக்கப்படும்.

**வாகனத் தகுதிச் சான்றிதழ் - 2002**
**FITNESS CERTIFICATE FOR MOTOR VEHICLE**

2002ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் எமது நிறுவனத்தினால் வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன என்பதனை சகல வாகன உரிமையாளர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் மோட்டார் சைக்கிள்களுக்கான ENGINE NO. பொறித்துக் கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு

REGISTRAR
PATRICIAN INSTITUTE,
59, ST. PATRICK'S ROAD,
JAFFNA.

(C/3936)

* தீப நடனம் - செல்வி தனபாலசிங்கம் சோபிகா
* நாடகங்கள்

நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட மகாவித்தியாலய மாணவ மாணவிகள் வழங்கும் விசேட கூத்து
**"சுந்தரர் தடுத்தாட்கொள்ளல்"**
றஞ்சன் ஆட்ஸ் வழங்கும் மு. பாலனின்
**"தாலி" (சமூக நாடகம்)**

வேலணை துறையூர் ஐயனார் கலாமன்றம் பெருமையுடன் வழங்கும் பொ. நகுலதாசனின்
**"கிழக்கு வெளிக்குமா?" (சிறுவர் நாட்டிய நாடகம்)**

**இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்**
நாளை (11.04.2002)வியாழக்கிழமை பிற்பகல் 4.30மணி

பிரதம விருந்தினர்
திரு க. சண்முகநாதன் (அரச அதிபர், யாழ்ப்பாணம்)

**கலை நிகழ்ச்சிகள்**
அகில இலங்கை அமுதசுரபி கலாமன்றம் பெருமையுடன் வழங்கும்
பட்டி மண்டபம்
**"சீதனத்தால் பெரிதும் பாதிக்கப்படுவது ஆண்களா? பெண்களா?"**

* தமிழ்க் கலைக் காவலன் செல்லையா மெற்றாஸ்மயிலின் நெறியாள்கையில்
**வள்ளி திருமணம் (இசை நாடகம்)**

* ஈழ நல்லூர் உதயன் இசைக்குழுவினரின்
**உதய கீதங்கள்**

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

- விழாக் குழுவினர் -

(C/4956)

இப் பெருவிழா வேலணை பிரதேச மக்களினதும், வர்த்தகப் பெருமக்களினதும், வேலணை பிரதேச சபை ஒப்பந்தகாரர்களினதும், பொதுச் சங்கங்களினதும் அனுசரணையுடன் நடைபெறுகிறது.

## இன்று ஒரு தகவல்

# பெண்டாட்டி தாசர்கள்

தாம் சொல்ல வந்த கருத்துக்களை எளிய கதைகளின் மூலம் மக்கள் முன்பு வைத்த பெருமை ஸ்ரீராமகிருஷ்ணருடையது. அவர் உலகமக்களை எவ்வளவு தூரம் தெளிவாகப் புரிந்து வைத்துக் கொண்டிருந்தார் என்பதைப் பின்வரும் நிகழ்ச்சியும் கதையும் தெரிவிக்கின்றன. ஒரு முறை ஒரு கனவான் ஸ்ரீராமகிருஷ்ணரைத் தரிசிப்பதற்காக வந்திருந்தார். கனவான் நவீன கல்வி கற்றவர். ஸ்ரீ ராமகிருஷ்ணரோடு அவர் பேசிக் கொண்டிருந்த போது 'இல்லற வாழ்க்கையில் ஒருவன் இருந்த போதிலும் உலகப் பற்றுக்குள் அகப்பட்டுக் கொள்ளாமல் இருக்கமுடியும்' என்ற ஒரு அற்புதமான கருத்தைச் சொல்லி விவாதித்தார். ஸ்ரீராமகிருஷ்ணர் அதற்குப் பதிலிறுத்தார்.

'நீங்கள்குறிப்பிடுகிற நவீன காலத்தைச் சேர்ந்த உலகப் பற்றுக்கு ஆளாகாத இல்லறத்தவன் எப்படிப்பட்டவன் என்பது உங்களுக்குத் தெரியுமா? வீட்டு விவகாரங்களை எல்லாம் அவன் மனைவியே கவனித்துக் கொள்வாள். குடும்ப நிர்வாகம் முழுவதும் அவளிடம்இருக்கும். இல்லறத்தானுக்கோ பணவிசயத்தில் சுதந்திரமே இருக்காது. காரணம், அவன் தான் உலகப் பற்று இல்லாதவன் ஆயிற்றே! எல்லா விஷயத்திற்கும் அவன் எஜமானியம்மாளின் கையை எதிர்பார்த்தே ஆகவேண்டியிருக்கும்.

ஓர் ஏழை அந்த இல்லறத்தவனிடம் வந்து ஏதாவது கொஞ்சம் பண உதவி கேட்டால் 'அப்பா நான் பணத்தைக் கையாலும் தொடுவதில்லை. என்னிடம் யாசகம் கேட்டு வீணாக உன் காலத்தைக் கழிக்க வேண்டாம்' என்று உன்னுடைய இல்லறத்தவன் பதில் சொல்வான். அப்படியும் அந்த ஏழை யாசகம் கேட்டுப் பிடிவாதமாக நின்றால், இல்லறத்தவனுக்கு இரக்கம் வந்து, ஏதாவது கொடுத்து அனுப்பும் எண்ணத்துடன் 'நல்லது, அப்பா! நாளைக்கு வா. ஏதாவது தருகிறோம்' என்று சொல்கிறான். பிறகு அவன்உள்ளே சென்று மனைவியிடம் 'அன்பே! ஓர் ஏழை மிகவும் கஷ்டத்தில் இருக்கிறான். நாம் அவனுக்கு ஒரு ரூபாய் கொடுக்கலாம்' என்கிறான். 'ரூபாய்' என்ற வார்த்தையைக் கேட்டவுடனே அவனது மனைவி சீறி விழுகிறாள். கோபத்துடன் அவள் 'ஆகா! நீங்கள் பெரிய தர்மப்பிரபு தான்! கல்லையும் மண்ணையும் போல யோசனையில்லாமல் எடுத்தெறியக்கூடிய பொருளா ரூபாயும்?' என்று வெடிக்கிறாள். மீண்டும் இல்லறத்தவன் அவளிடம் மன்னிப்புக் கேட்கும் குரலில் மன்றாடுகிறான். 'அன்பே, அவன் பாவம். பரம ஏழை. ஒரு ரூபாய்க்கும் குறைவாக நாம் அவனுக்குக் கொடுக்கக் கூடாது' என்று அழமாட்டாத குறையாகச் சொல்லிக் கெஞ்சுகிறான். அவன் மனைவி, 'அவ்வளவு தரமாட்டேன். இதோ இரண்டணா இருக்கிறது. வேண்டுமானால் கொண்டுபோய்க் கொடுங்கள்' என்று நறுக்குத் தெறித்தாற் போல திட்டவட்டமாகச் சொல்லிவிடுகிறாள்.

இல்லறத்தவனுக்கு உலகப் பற்றே இல்லாதபடியால் தன் விருப்பப்படி செய்யமுடியவில்லை! மனைவி சொற்படி நடக்க வேண்டியவனாகின்றான். ஆகவே, அடுத்தநாள் யாசகம்கேட்டுவரும் ஏழைக்கு இரண்டணாதான் கிடைக்கிறது. உலகப்பற்று இல்லாதவர்கள் என்று சொல்லப்படும் இல்லறத்தவர்கள் கேவலம் பெண்டாட்டிகள் சொல்கிறபடியெல்லாம் கூத்தாடுகிறவர்களே ஆவர். அடிமைகளாக வாழும் அவர்களுக்குக் குடும்ப விவகாரங்களில் எந்த ஒரு சுதந்திரமும் கிடையாது. இருந்தபோதிலும் அவர்கள் தங்களைப் பெரிய மகான்கள் என்றும் நல்லவர்கள் என்றும் நினைத்துக் கொள்கிறார்கள். உண்மையில் இந்த இரண்டு தன்மைகளுமே அவர்களிடம் இருப்பதில்லை.

பொதுவாக உலகமக்களின் குடுமி எங்கே இருக்கிறது என்பதை இந்தச் சிறிய கதையின் மூலம் ஸ்ரீராம கிருஷ்ணர் சுட்டிக்காட்டுகிறார். பரமஹம்ச தேவர் நம்மைச் சிரிக்க வைப்பதற்காக இந்தக் கதையைச் சொல்லவில்லை. சிந்திக்க வைப்பதற்காகச் சொல்லியிருக்கிறார். ●

நன்றி

ஸ்ரீ ராம கிருஷ்ணர் சொன்ன கதைகள்.

# பாதுகாப்பு செயலரின் கைது குறித்து பிரதமருக்கு நான்கு பக்க கடிதம்

## ஜனாதிபதி அலரிமாளிகைக்கு அனுப்பிவைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதிபாதுகாப்புசெயலர் நிகால் கருணாரத்னகைது செய்யப்பட்டிருப்பது பற்றி ஜனாதிபதி நான்கு பக்கக்கடிதத்தில் பிரதமருக்கு தனது கவலையை தெரிவித்திருக்கிறார்.

அலரி மாளிகைக்கு வியாழனன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ள அக் கடிதத்தில்,

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க முற்றிலும் தவறான முறையில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்நிகால் கருணாரத்னவை கைது செய்துள்ளார்.

கருணாரத்ன ஒரு சத்திர சிகிச்சைக்குதயாராகிக்கொண்டிருந்த வேளையில் கைவிலங்கிடப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கைதுசெய்யப்பட்டிருந்த அவருடன் பிரதமரின்செயலாளர் சுதத் சந்திரசேகர நான்கு தடவைகள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தம்முடன்ஒருஉடன்பாட்டுக்கு வருமாறு கோரியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவிக்கையில், கருணாரத்ன நீதிமன்றத்தின் உத்தரவுகளை மீறி சரணடைய மறுத்திருந்தார்.

அதன் காரணமாக அவர் கைது செய்யப்பட்டிருந்தார். ஜனாதிபதியின் பணிப்பின் பேரிலேயே அவர் நீதிமன்றத்தில் சரணடையாதிருந்தார் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, நிகால் கருணாரத்னவை கண்டி நீதிவான் நீதிமன்றத்தில் ஏப்ரல் 22 ஆம் திகதி ஆஜர் செய்யும்படி கண்டி மேலதிக நீதிவான் பிரதீப் ஹெட்டியாராச்சி சிறை அதிகாரிகளை பணித்துள்ளார்.

சமுர்த்தி அமைச்சர் எஸ் பீ.திசாநாயக்காவை கொலை செய்ய முயற்சித்த விசாரணைகளில் ஈடுபட்டிருந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிக்குகொலை மிரட்டல் விடுத்தமை, சட்டவிரோதமாக கூட்டம் கூடி வாகனங்களுக்கு சேதம் விளைவித்தமை, தனக்கெதிரான விசாரணைகள் நடைபெற்ற தினத்தன்று நீதிமன்றத்திற்கு சமுகமளிக்காதிருந்தமைஆகிய குற்றச்சாட்டுகள் கருணாரத்ன மீது சுமத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(உ)

# அம்புலன்ஸ் சேவை சீரில்லை

(புத்தூர்)

அச்சுவேலி வைத்தியசாலையில் ஒரேயொரு அம்புலன்ஸ் சாரதி மாத்திரமே கடமையாற்றுவதால், அம்புலன்ஸ் சேவையினைப் பெறுவதில் பொதுமக்கள்பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டுவருகின்றனர்.

மேற்படி சாரதியினுடைய விடுமுறை தினங்களில், அவசர தேவைகளுக்குக் கூட அம்புலன்ஸ் சேவையினைப்பெற முடியாதுள்ளமை குறித்து பாதிக்கப்படும் மக்கள் கவலை வெளியிட்டு வருகின்றனர்.

(உ-235)

# நடமாடும் செயலக சேவை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக நடமாடும் செயலகசேவை

## கூடைப் பந்தாட்ட

# மூத்த உறுப்பினர்கள் 7பேர் கௌரவிக்கப்படுவர்

(வல்வெட்டித்துறை)

இலங்கைக் கூடைப்பந்தாட்ட சம்மேளனம் நீண்டகால கூடைப்பந்தாட்ட அனுபவமுள்ள 7பேரைக் கௌரவிக்கவுள்ளது.

கலாநிதி ஹோம்ஸ், ராம்சுந்தரலிங்கம், ஆர்.நவராஜா, வீ.சோமசுந்தரம், என்.சண்முகரட்ணம், பி. விக்னேஸ்வரலிங்கம், ஜி எஸ்·சாந்திகரன் ஆகியோரே கௌரவிக்கப்படவுள்ளனர். (உ-217)

# நெடுந்தீவில் வெள்ளியன்று முப்பெரும் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி. ப 4.30 மணிக்கு முப் பெரும் திறப்புவிழா நடைபெறவுள்ளது.

தமிழ்தூது தவத்திரு தனிநாயக அடிகள் உருவச்சிலை திறப்பு மாவலிதுறைமுகத்தில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர்ஜே. எக்ஸ். செல்வநரயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபைபேராயர் அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

தேவாகலாசார மண்டபம் திறத்தல் யோகேந்திரா சதுக்கத்தில்நெடுந்தீவுபிரதேசசபை தலைவர் எ. டபிள்யு அரியநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி யாழ். மாவட்ட பொறுப்பாளர் கே. வி. குகேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

தமிழ்த்தூது தவத்திரு தனிநாயக அடிகள் திறந்தவெளி அரங்கு திறப்பு விழா நா.ம. எட்வேட் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் பங்குத்தந்தை பேராலயம் எ. சி. கிறிஸ்தோப்பர்கலந்து கொள்ளவுள்ளார்.

(உ-3)

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை

## பிரதமர் பணிப்புரை

நாளைக்கு வா. ஏதாவது தரு கிறோம்' என்று சொல் கிறான். பிறகு அவன் உள்ளே சென்று மனைவியிடம் 'அன்பே! ஓர் ஏழை மிகவும் கஷ்டத்தில் இருக்கிறான். நாம் அவனுக்கு ஒரு ரூபாய் திக்க வைப்பதற்காகச் சொல் லியிருக்கிறார்.

நன்றி

ஸ்ரீ ராம கிருஷ்ணர் சொன்ன கதைகள்.

(உ-235)

## நடமாடும் செயலக சேவை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செய லக நடமாடும் செயலகசேவை நாளை காலை 9.00 மணிக்கு சண்டிலிப்பாய் கமநலசேவை கேந்திர நிலையத்தில் நடை பெறவுள்ளது.

தேசிய/விசேட அடையாள அட்டை, பொதுசனமாதாந்த உதவிப்பணம், உணவு முத் முத்திரை, ஒய்வூதியம், காலம் கடந்த பிறப்பு-இறப்பு, விவாக அத்தாட்சிப் பத்திரம், ஆகியன பெறுவது தொடர் பான பிரச்சினைகளுக்கு அன் றைய நடமாடும் செயலக சேவைமூலம் தீர்வளிக்கப்பட வுள்ளது. (உ-120)

தேவாகலாசார மண்டபம் திறத்தல் யோகேந்திரா சதுக் தோப்பர்கலந்து கொள்ளவுள் ளார். (உ-3)

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை

## பிரதமர் பணிப்புரை

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட் டத்தின் கீழ் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்குரிய நடவடிக் கைகளை உடனடியாக மேற் கொள்ளுமாறு பிரதமர்ரணில் விக்கிரம சிங்கா பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க பிரதம ருடன் தொடர்பு கொண்ட போதே அவர் இப்பணிப் புரையை விடுத்துள்ளார்.

இதேவேளை களுத்துறைக் கைதிகள் இன்றுமுதல் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்திருந் தமை குறிப்பிடத்தக்சது. (செ)

# சமாதான நிலை பற்றி தேரருக்கு விளக்கம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவும் ஐ.தே.க.தலைவர் மலிக் சமரவிக்கிரமவும் மல் வத்தை மற்றும் அஸ்கிரிய மகா நாயக்கர்களை கடந்த திங்கட்கிழமை சந்தித்து சமா தான பேச்சுகளின் இன்றைய நிலைபற்றி விளக்கினர்.

இன்றைய அரசியல் சூழ் நிலைபற்றியும் இவர்கள் விப ரமான முறையில் அஸ்கிரிய பீடத்தலைவர் உடுகம ஸ்ரீ புத்தரசித்த தேரருக்கும், ரம் புக்வெல்ல ஸ்ரீ விபசி மகா நாயக்க தேரருக்கும் எடுத்து விளக்கியுள்ளனர். (உ)

# திரைப்பட தயாரிப்பிற்கு எழுநூறு இலட்சம்

(கொழும்பு)

உள்நாட்டு திரைப்படத் தயாரிப்பிற்காக 700இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் ஒருதிரைப்படம் மாத்திரமே தயாரிக்கப்பட் டுள்ளது என்று ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரவீந்திர ரந்தெனிய நேற்று முன்தினம் பாராளுமன்றத் தில் பேசுகையில் குறிப்பிட் டார்.

மேலும் அவர் பேசுகையில்; திரைப்பட விநியோகத்தில் முறைகேடுகள் நிலவுகின்றன. இறக்குமதி செய்யப்படும் படங்களில் 98 வீதமானவை வயதுவந்தவர்களுக்கானவை.

எனவே, உள்நாட்டுத் திரைப்படத்துறையின் வளர்ச் சிக்கு நேரடியான ஆக்கபூர்வ பங்களிப்பு வழங்க வேண்டும் என்று கூறினார். (எ-9)

## பிரிவுபசார விழா

(யாழ்ப்பாணம்)

பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலையை விட்டு வெளி யேறும் ஆசிரிய மாணவர் களுக்கான பிரிவுபசார விழா நேற்று முதல் இடம் பெற்று வருகின்றது.

இவ்விழா நாளைவரை இடம் பெறவுள்ளது. (உ-19)

## கவிதைத் தொகுதி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அ. யேசுராசாவினால் மொழி பெயர்க்கப்பட்ட 'பனிமழை' கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா நாளை பி.ப. 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவி யியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கவிஞர் சோ. பத்மநாதன் தலைமையில்நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக ஆங்கிலத் துறையைச் சேர்ந்த வை. சுந்தரேசன், ந. சத்தியபாலன், நுண் கலைத் துறையைச் சேர்ந்த பா. அகிலன் ஆகியோர் ஆய் வுரை நிகழ்த்துவார்கள். (எ)

## சிந்தனைக்கு விருந்து

### புல்லின் கீழ்மறைந்து ஊரும் பாம்புகள்

'உள்ளன இல்லை இல்லன உண்டென் (று)
உரைப்பவர் அலகைகள்' என்றே
வள்ளுவர் சொன்னார் வாய்மை ஈ தாகும்
மனத்தினிற் கறைபடிந் தோர்கள்
கள்ளமாய் மொட்டைக் கடிதங்கள் எழுதிக்
களிக்குவர் பிறரது துன்பில்
துள்ளுவர் புல்லின் கீழ்மறைந் தூர்ந்து
துயர்தரும் பாம்புகள் ஆவார்.

-பழையவன்

அலகைகள் - பேய்கள்

# பிறந்தநாளைவிட சமாதான முயற்சிகளுக்கே முக்கியத்துவமளித்துள்ளார் பிரதமர் ரணில்

பிறந்த நாள் கொண்டாட்டத்தைவிட சமாதான முயற்சிக்குமுக்கியத்துவம்கொடுத்த பிரதமர்ரணில்விக்கிரமசிங்க.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் 53-வது பிறந்த நாள் கொண்டாட்டத்தை அடக்கமானமுறையில்கொண்டாடுவதற்கானஏற்பாடுகளை பிரதமரின் மனைவி மைத்ரி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டிருந்தார்.

பிரதமரின் பிறந்த நாளில் அவருக்கு நல்வாழ்த்துக் கூற பல் துறைசேர்ந்த முக்கியஸ்தர்கள் நூற்றுக்குமேல் அலரி மாளிகைக்கு வந்திருந்தனர். பலர் தொலைபேசியில் தமது நல்வாழ்த்துக்களைதெரிவித்த வண்ணம் இருந்தனர்.

நோர்வேப் பிரதிநிதி

சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கும் நோக்கில் அந்த முக்கியநாளில்நோர்வே நாட்டு பிரதிநிதி சோல்ஹேய்ம் கொழும்பு வந்திறங்கி மாலை 6.30 மணிக்கு சகா வெஸ்ற்போர்க் உடன் அலரி மாளிகைக்கு விஜயம் செய்தார்.

பிரதமரின் பிறந்தநாளுக்கு ஜனாதிபதி சந்திரிக்கா விஜயதுங்க தொலைபேசியில் நல்வாழ்த்துக்களை தெரிவித்ததுடன், மலர்ச்செண்டு ஒன்றினையும் அனுப்பிவைத்திருந்தார்.

வாழ்த்துரைக்க வந்தவர்கள்

கரு ஜயசூரிய, எஸ்.பி. திசாநாயக்க, ஜோன் அமரதுங்க, மிலிந்தமொறகொட கலாநிதி ஜயலத் ஜயவர்த்தனா, ஜோன்ஸ்ரன் பர்ணாந்து, உபாலி பியசோம, கயந்த கருணாதிலக, வீ. ஆனந்தசங்கரி, ரமபுக வெல்ல ஆகியோர் உட்பட பல பிரமுகர்கள் விழாக் கூட்டத்தில் சமுகம் அளித்திருந்தனர். முதலீட்டுச்சபைத் தலைவர், அர்ச்சுன மகேந்திர இளைஞர் சேவைத் தலைவர்

கே. கார்த்திகேசு,

அரியாலை.

நிமல் வெல்கம ரஞ்சித் விஜயவர்த்தன, திலங்க சுமதிபால சுயாதீன ரூபவாஹினிகூட்டுத்தாபன தலைவர் கயிறிக்க ஜேரூசிங்க ஆகியோரும் சமுகம் அளித்திருந்தனர்.

பிறந்த நாள் வரவேற்பு

சொல்ஹெயிம் உடன்உரையாடுவதற்காக தனது முழுக்கவனத்தையும் செலுத்திய பிரதமரால் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு வந்தோரை வரவேற்க இயலவில்லை. மேலும் விழாக்கூடத்திற்கு முழுமையாகசமுகமளிக்கவும் இயலவில்லை. பிரதமரின் மனைவியே விருந்தினரைவரவேற்றார்.

உரையாடல் முடிந்த பின் சொல்ஹெய்ம், நோர்வே தூது வரையும் பிறந்த நாள் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு பிரதமர் அழைத்தார். இரண்டு மணித்தியாலம் உரையாடலின்பின்னரே பிரதமரும்நோர்வே நாட்டு பிரதிநிதிகளும் பிறந்த நாள் நிகழ்வில் கலந்து கொண்டனர். அப்போது நேரம் இரவு 8.30 வந்திருந்த அனைவருமே அரசின் சமாதான முயற்சிகள், நடவடிக்கைகள் குறித்தே உரையாடினர். எல்லோருடைய பேச்சும் சமாதானம் பற்றியதாக இருந்தது;

இரவு 9.00 மணியளவில் இலங்கை கிரிக்கெட் அணி தலைவர் சனத் ஜயசூரிய வந்திருந்தார். சனத் வந்த உடன் அவரை தம்மிடத்திற்கு அழைத்த பிரதமர் வடமாகாணத்தில் கிரிக்கெட் விளையாட்டு மிகவும் ஜனரஞ்சகமானது. கிரிக்கெட் விளையாட்டு ஊடாக அரசின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு கொடுக்க முடியும்.

கிளிநொச்சியில் முன்னோடி நிறுவனம் ஒன்றின் ஆதரவுடன் கிரிக்கெட் விளையாட்டு போட்டி நடத்தப்பட இருக்கின்றது என பிரதமர் தெரிவித்தார். அவர் அமைச்சர் ஜயலத், பர்னாண்டோவை அழைத்து, சனத் உடன் கதைத்து, கிரிக்கெட் போட்டிக்கான ஒழுங்குகளை விரைவில் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

கிளிநொச்சி விஜயம்

மறுநாள் திங்கட்கிழமை கிளிநொச்சியை நோக்கி சொல்ஹெய்ம் புறப்பட்டார்.

கனடா விமானிகளால் செலுத்தப்பட்ட விமானத்தில் திங்கள் காலை 10.30 மணிக்கு அன்ரன் பாலசிங்கம் இரணைமடுக் குளத்திற்கு வந்து சேர்ந்தார். மூன்று வருடங்களுக்கு பின் விடுதலைப் புலிகள் இயக்கதத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கத்தின் இலங்கை வருகை அரசின் சமாதான முயற்சிகளுக்கு உந்து சக்தியாகும்.

விடுதலைப்புலிகள் அமைப்பின் செய்திப் பரிமாற்றங்களை லண்டனில் இருந்து கையாண்டு வந்த அன்ரன் பாலசிங்கம் விடுதலைப் புலிகள் தலைமைக்கும் அரசிற்கும் இடையிலான பேச்சுவார்த்தையினை விரைவில் ஆரம்பிக்கவும், நெறிப்படுத்தவும் நடுநாயகமாக விளங்குவார் என நம்பப்படுகின்றது. ●

## கூலிக்கான கேள்வி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையினால் 2002ம் ஆண்டுவேலைத் திட்டங்களுக்கான கூலிக்கான கேள்வி கோரப்பட்டுள்ளது.

மேற்படி வேலைத்திட்டங்கள் நல்லூர் பிரதேசசபையின் நிதியிலிருந்து நடைமுறைப் படுத்தப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். (உ-19)

## ஆசிரிய கலாசாலை பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரிய கலாசாலையின் முதலாம், இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சைகள் இம்மாதம் ஆரம்பமாகவுள்ளன.

முதலாம் வருடப் பரீட்சைகள் 29,30ஆம் திகதிகளிலும் இரண்டாம் வருடப் பரீட்சைகள் மேமாதம் 2ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளன. (உ-19)

## படகுச் சேவை இடைநிறுத்தம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு - குறிகட்டுவான் இடையிலான குமுதினி படகுச் சேவை புத்தாண்டிற்குப் பின்னர் இடைநிறுத்தப் படவுள்ளதாக தெரியவருகின்றது.

மேற்படி படகில், எஞ்சின் பராமரிப்பு, நீர்க்கசிவுவேலைகள் இடம்பெறவுள்ளமையினாலேயே படகுச் சேவை இடை நிறுத்தப்பட வுள்ளது. (உ-249)

## வெளிநாட்டு கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்?

(கொழும்பு)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் கண்காணிப்பாளர்களின் தொகையை அதிகரிக்கும் வகையில் மேலும் பல வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை சேர்த்துக்கொள்வது தொடர்பாக நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் அரசாங்கத்துடனும், விடுதலைப் புலிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றார்.

கண்காணிப்பாளர்களுக்குள்ள வேலைப்பளுவைக் கருத்திற்கொண்டே அவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் தற்போது வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் 18 பேர் மாத்திரமே உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## வர்த்தக அபிவிருத்தி அதிகாரிகளை நியமிக்க

## பொதுஜன ஐக்கிய முன்னணி வீண் முயற்சிகளில் ஈடுபடுகின்றது

### ஐ. தே. க. பேச்சாளர்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற ஊழல்கள் தொடர்பில் பல அதிகாரிகள் கைது செய்யப்பட்டு வருவது, ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பழிவாங்கும் முயற்சியென்பதை நாடறியச் செய்வதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி வீண்முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது என்று ஐ. தே. கட்சியின் பேச்சாளர் ஜயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

இவ்வாறான செயல்களில் பொதுஜன ஐக்கிய முன்னணி கைது செய்யப்பட்டுள்ளமை,

கடன் அட்டை மோசடி தொடர்பாக முன்னாள் அமைச்சர் மங்களசமரவீர லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகுமாறு பணிக்கப்பட்டமை,

பொ. ஐ. மு. பாராளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராய்ச்சி மீது இரத்தினபுரி நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளமை, ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு தலைவர் நிஹால் கருணாரட்ண நீதிமன்ற பணிப்பின் பேரில்கைது செய்யப்பட்டமை.

இந்த நடவடிக்கைகள் யாவும் முன்னைய அரசாங்கத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் செய்து கொண்ட குற்றங்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளாகும் என்று குறிப்பிட்டுள்ளார். (உ-8)

## கையடக்கத் தொலை பேசி

நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் அரசாங்கத்துடனும், விடுதலைப் புலிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றார்.

புக் குழுவில் தற்போது வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் 18 பேர் மாத்திரமே உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பழிவாங்கும் முயற்சியென்பதை நாடறியச் செய்வதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி வீண்முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது என்று ஐ. தே. கட்சியின் பேச்சாளர் ஜயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

இவ்வாறான செயல்களில் பொதுஜன ஐக்கிய முன்னணி ஈடுபடுவதை தவிர்த்து தமக்கு எதிராக சுமத்தப்பட்டிருக்கும் குற்றச் செயல்களினை நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்க வேண்டும்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் உடத்தலவின்ன படுகொலை தொடர்பாக

ஆஜராகுமாறு பணிக்கப்பட்டமை,

பொ. ஐ. மு. பாராளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராய்ச்சி மீது இரத்தினபுரி நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளமை, ஜனாதிபதி

கத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் செய்து கொண்ட குற்றங்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளாகும் என்று குறிப்பிட்டுள்ளார். (உ-8)

## வர்த்தக அபிவிருத்தி அதிகாரிகளை நியமிக்க அமைச்சர் ரவி நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் சுதந்திர பொருளாதார உடன்படிக்கை ஒன்று உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதனுடன் சம்பந்தமான ஆவணங்கள் எதிர் வரும் 16 ஆம் திகதி கொழும்பில் வைத்து கைச்சாத்திடப்படும்.

இதற்காக பாகிஸ்தானில் இருந்து வர்த்தக தூதுக்குழு ஒன்றும் இலங்கைக்கு வரவுள்ளது.

இதைவிட, சீனா, ஜப்பான், ரஷ்யா, பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளில் வர்த்தக அபிவிருத்தி அதிகாரிகளை நியமிப்பதற்கு வர்த்தக அமைச்சர் ரவிகருணாநாயக்க நடவடிக்கை எடுத்துள்ளார். (உ-5)

## விடுதலைப் புலிகளின் மட்டு அலுவலகம் வெள்ளியன்று திறப்பு

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் தமது அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் பொருட்டு எதிர் வரும் வெள்ளிக்கிழமை மட்டக்களபபு மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்குச் செல்லவுள்ளனர்.

தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வரும் 14 பேர் கொண்ட புலிகள் குழு, பட்டிருப்புப்பாலம் வழியாக வந்து மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்குப் பிரிந்து செல்வர் என்றும்,

அவர்களது மட்டக்களப்பு மாவட்ட. அலுவலகம் அன்றைய தினமும், அம்பாறை மாவட்ட அலுவலகம் அடுத்த நாளும் திறந்து வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## வீருவீடாக பொங்குதமிழ் பிரசாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள பலர் அரியாலையை அண்டிய பகுதிகளுக்கு வாகனங்களில் வீடு வீடாகச் சென்று பொங்கு தமிழ் நிகழ்வு தொடர்பான பிரசாரங்களில் ஈடுபடவுள்ளனர்.

அத்துடன், வீதி அலங்கரிப்பு போன்ற பல செயற்பாடுகளிலும்ஈடுபட்டுவருகின்றனர்.

இவர்கள் பொங்குதமிழ் நிகழ்வை சிறப்பிப்பதற்காக பல கலை நிகழ்வுகளை பல்கலைக் கழக மாணவர்களுடன் இணைந்து செய்வதற்கு திட்டமிட்டு இருப்பதும்குறிப்பிடத்தக்கது. (உ)

## கையடக்கத் தொலை பேசி கட்டணத்தை குறைக்குக ஆணைக்குழு உத்தரவு

கையடக்க தொலைபேசிக் கட்டண அதிகரிப்பை உடன் நிறுத்துமாறு இலங்கை தொலைத் தொடர்புகள் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

உத்தேசகட்டண அதிகரிப்பு குறித்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஆர்.டி. சோமஸ்ரீ கூறியுள்ளதாக ஆணைக்குழு விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கையடக்கத் தொலைபேசிக் கட்டணங்களை உயர்த்துவதற்கு இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஆணைக்குழு அனுமதி அளிக்கவில்லை எனவும் அதில் மேலும்குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-9)

### இனிவரும் தேர்தல்களின் போது

## வாக்காளர் அ. அட்டை சமர்ப்பிப்பது அவசியம்

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்களில் வாக்களிக்கச் செல்லும் போது வாக்குச் சாவடிஅதிகாரியிடம் அடையாளஅட்டை சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் ஆலோசனை கூறியுள்ளார்.

இத்தகைய திட்டத்தின் மூலம் தேர்தல்கள் நீதியாகவும் நேர்மையாகவும் நடைபெறவழிவகுக்கும்அதேநேரத்தில் வாக்காளர் அட்டையில் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (உ-5)

### கலந்துரையாடல்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கடந்தகாலச் செயற்பாடுகள் குறித்த கலந்துரையாடல் ஒன்று நாளை பி. ப.3 மணிக்கு நல்லூர் பிரதேச சபையில் நடைபெறவுள்ளது. (உ-19)

# யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற

# பொன் விழா

❄இடம்:- மாநகர சபை அலுவலகம், நல்லூர்
❄காலம்:- 10.04.2002 புதன்கிழமை பி.ப. 2.00மணி
❄தலைவர்:- திரு.செ.கந்தையன் (மாண்புமிகு மாநகர முதல்வர்)
❄பிரதம விருந்தினர்:- திரு.திருமதி. நடராஜா இரவிராஜ் (யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்)
❄மங்கள இசை:- P.S. பிச்சையப்பா குழுவினர்
❄வரவேற்புரை:- திரு.இ.இராமலிங்கம் (மாநகர ஆணையாளர்)
❄தலைமையுரை
❄பிரதமவிருந்தினர் உரை
❄சிறப்பு விருந்தினர்கள் உரை:

பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை (துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்)
திரு.க.சண்முகநாதன் (யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்)
திரு.வே.பொ, பாலசிங்கம் (உள்ளூராட்சி ஆணையாளர், வ.கி.மாகாணம்)
திரு.ரி.வி.கிருஷ்ணசாமி (பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்)
திரு.R.T.விக்னராஜா (மாவட்ட நீதிபதி)
திரு.K.P.S.வரதராஜா (உயர் நீதிமன்ற நீதியரசர்)

❄கௌரவ உறுப்பினர்கள் உரை:-

கௌரவ க.கிங்ஸ்லி கணேசன் (மாநகரசபை அங்கத்தவரும், பொன்விழா அமைப்பாளரும்)
கௌரவ த.முகுந்தன் (மாநகரசபை அங்கத்தவர்)
கௌரவ த.சுபத்திரன் (மாநகரசபை அங்கத்தவர்)
கௌரவ மு.தவநாதன் (மாநகரசபை அங்கத்தவர்)
கௌரவ ம.மங்களநேசன் (மாநகரசபை அங்கத்தவரும், சுகாதாரக்குழு தலைவரும்)
கௌரவ மா.கனகரத்தினம் (மாநகரசபை அங்கத்தவர்)
கௌரவ செல்லையா விஜயரட்ணம் (மாநகரசபை அங்கத்தவர்)

❄பொன்விழா மலர் வெளியீடு:

*வெளியீடும் மதிப்பீடும்:* கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்)

❄முதற்பிரதி பெறுபவர்: செல்வி ப.மயூரதி
❄நீண்டகாலம் சேவையாற்றிய மாநகரசபைப் பணியாளர்களைக் கௌரவித்தல்
❄பரிசில் வழங்கல்: பிரதம அதிதி திருமதி சசிகலா இரவிராஜ்
❄நன்றியுரை: திரு.இ.இரத்தினசிங்கம்
❄கலைநிகழ்ச்சிகள்:

பட்டிமண்டபம்:
**மனிதனை நன்னிலைப் படுத்துவது அவனது எண்ணங்களா? சூழ்நிலைகளா?**
(மாநகரசபை ஊழியர்கள், உறுப்பினர்கள்)

மாநகரசபை இசைக்கலைஞர்கள் வழங்கும்
**"பொன்மாலைப் பொழுது"**
(இசை நிகழ்ச்சி)

ஜனாதிபதி விருது பெற்ற
நடனப்புயல் **கே.எஸ்.பாஸ்கரன்**
குழுவினர் வழங்கும்
'நடன விருந்து'

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

# பாதைதிறப்பு காட்சிகள்







மாநகரசபை இசைக்கலைஞர்கள் வழங்கும்
"பொன்மாலைப் பொழுது"
(இசை நிகழ்ச்சி)

ஜனாதிபதி விருது பெற்ற
நடனப்புயல் கே.எஸ்.பாஸ்கரன்
குழுவினர் வழங்கும்
'நடன விருந்து'

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

—மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்



தக்க தலைவரின் வழி நின்று தாயக மீட்புக்காய் களமாடும் புலி வீரர்களை வருக! வருக! என வரவேற்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

நியூ நகுலா ஜுவல்லறி
74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

நியூ லலிதாஸ் ஜுவல்லறி
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

நகுலா நகை மாடம்
241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்



(C/3935)

# இந்தியாமீது அணுக்குண்டுவீசுவோம் முஷாரப் எச்சரிக்கை விடுப்பு

இந்தியாவுடன் போர் மூண்டால் கடைசிக் கட்டமாக அணுக்குண்டு வீசுவோம் என்று பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

போர் நடக்கும் பட்சத்தில் பாகிஸ்தான் மீது நிர்ப்பந்தம் அதிகரித்தால்நாங்கள் அணுக்குண்டை வீச தயங்கமாட்டோம் என்று ஜெர்மன் நாட்டு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நல்ல ஆட்சிக்கு ஒரே அதிகார ஆணையம்தான் இருக்க வேண்டும்.

அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதில் தனக்கு நம்பிக்கையில்லை என்றும் தெரிவித்துள்ளார். (உ-2)

# இஸ்ரேல் தாக்குதல் தொடரின் பொருளாதாரத் தடை விதிப்பு

## ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்

(ஜெருசலேம்)

மேற்குக்கரை நகரங்களில் இஸ்ரேல் தொடர்ந்தும் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டால், அந்த நாடு மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கும் வகையில் அமைச்சரவைக் கூட்டம் ஒன்றை கூட்ட நேரிடும் என ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் ஸ்பெயின் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 15 நாடுகள் இஸ்ரேல் மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்ற நிலைக்கு இதுவரை வரவில்லை.

எனினும் இஸ்ரேலிய பிரதமர் ஏரியல்சரோன் மீது அழுத்தத்தை விதிக்கும் வகையில் ஐரோப்பிய ஒன்றியம் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளதாக இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேல் மீது பொருளாதார தடையை விதிக்கவேண்டும் என்ற அச்சுறுத்தலை ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழுவின் தலைவர் றொனான்டோ போர்வே தெரிவித்துள்ளார். (எ-9)

# இஸ்ரேல் பலஸ்தீன தாக்குதல்கள் பரஸ்பரம் தொடர்கின்றன

(இந்தியா)

இஸ்ரேல் படைகளுக்கும் பலஸ்தீன இராணுவத்தினருக்கும் இடையில் சண்டை தொடர்ந்த வண்ணம் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

பலஸ்தீன அகதிகள் தங்கி இருக்கும் பல முகாம்கள் மீதும் இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தியுள்ளன.

அரபாத் தங்கியிருக்கும் றமழ நகரக் கட்டடங்கள் இயந்திரத் துப்பாக்கிகளின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. எனினும் அரபாத்துக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை.

இத்தாக்குதலில் அவரின் மெய்ப்பாதுகாவலர்கள் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த மாதம் 29 ஆம்திகதி முதல் இஸ்ரேலியப் படைகளின் தாக்குதலில் 200 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவத் தளபதி கூறியுள்ளார். (உ-5)

# அமெரிக்காவில் கல்வி கற்க செல்வதற்கு கடும் சட்டம்

(வாஷிங்டன்)

ஐக்கிய அமெரிக்காவில்கல்வி பயில்வதற்காக விசாவிற்கு விண்ணப்பிக்கும் வெளிநாட்டு மாணவர்கள் விடயத்தில் கடுமையான சட்டங்களைப் பின்பற்றப் போவதாக அமெரிக்க குடிவரவு, குடியேற்ற சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக சட்ட விதிகளில் உடனடி மாற்றங்கள் கொண்டுவரப்படும் எனவும் இதன்படி அமெரிக்காவில் கல்விகற்க விரும்பும் வெளிநாட்டுமாணவர்கள் தமது கல்வியை ஆரம்பிக்க முன்னரே விசாக்களைப் பெறும் நடைமுறை அமுல்படுத்தப்படும் என்றும் அத்திணைக்களம் அறிவித்துள்ளது.

முன்புபோல் உல்லாசப்பயணிகள் விசாபெற்று அமெரிக்கா சென்ற பின்னர் மாணவர்களுக்கான விசாபெறும் நடைமுறை இனிமேல் இருக்காது என்றும்.

கடந்த வருடம் செப்டெம்பர் 11 ஆம்திகதி அமெரிக்கநகரங்கள் மீதுநடைபெற்றதாக்குதலுடன் தொடர்புடைய இருவருக்கும் மாணவர் விசா வழங்கப்பட்டமை தொடர்பாகசர்ச்சைவலுப் பெற்றதை அடுத்தே மேற்படி நடைமுறைகொண்டு வரப்படவுள்ளது என்றும் மேலும்தெரிவித்துள்ளது. (எ-9)

# பாதுகாப்புநிலைவரம்பற்றிய புதிய தீர்மானம் பேரவையின் கவனத்திற்கு

(வாஷிங்டன்)

மத்திய கிழக்கு பாதுகாப்பு விவகாரம் தொடர்பாக ஐ, நா. பாதுகாப்பு பேரவை புதிய தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும் என்ற யோசனையை பேரவை முன்வைப்பது என அரபு நாடுகள் முடிவெடுத்துள்ளன.

இவ்விடயத்தில் அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்திருந்த போதிலும் அரபு நாடுகள் தம் முடிவை முன்னெடுத்துச் செல்லவுள்ளதாக பலஸ்தீன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீன நகரங்களில் இருந்து இஸ்ரேலிய படைகள் வாபஸ் பெறவேண்டும் என அரபு நாடுகள் வலியுறுத்தியுள்ளதுடன் எதிர்கால ஒப்பந்தங்களை மேற்பார்வையிட மூன்றாம் தரப்புமத்தியஸ்தம் அவசியம் எனவும் கோரியுள்ளன. (உ-9)

## தீவிரவாதிகளால் ஐந்து பேர் சுட்டுக் கொலை

(ஸ்ரீநகர்)

ஜம்முகாஷ்மீரில் இரண்டு பெண்கள் உட்பட ஐந்து பொதுமக்கள் தீவிரவாதக் குழுக்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த நான்கு பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (செ)

# 'பிரம்மோஷ்' ஏவுகணைகள் அடுத்த ஆண்டில் பாவனை

(புதுடில்லி)

இந்தியாவும் ரஷ்யாவும் இணைந்து தயாரித்துள்ள 'பிரம்மோஷ்' ஏவுகணைகள் அடுத்த ஆண்டுமுதல் இரு நாடுகளினதும் படை நடவடிக்கைகளில் இணைத்துக் கொள்ளப் படவுள்ளன.

இந்தியா பலதடவைகள் ரஷ்யாவிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்துள்ள போதிலும் இப்பொழுதுதான் முதற்தடவையாக இரு நாடுகளும் கூட்டாக ஏவுகணைத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளன.

இந்தஏவுகணை கடந்த வருடம் யூன்மாதம் வெற்றிகரமாகச் சோதனை செய்யப்பட்டது.

இது மிகப்பெரிய விமானந் தாங்கிக் கப்பல்களையும் தாக்கியழிக்கக் கூடியதுடன், முந்நூறு மீற்றர் தொலைவிற்கப்பால் உள்ள கப்பலைக் கூடத் தாக்கியழிக்கக்கூடியது என்பது குறிப்பிடத்தக்கது. (செ)

# மனுதாக்கல் செய்தவருக்கு

# உலக தரிசனம்

## அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளுக்கு எண்ணெய் ஏற்றுமதி தடை

(பக்தாத்)

அமெரிக்காவிற்கும் ஏனைய மேற்கு நாடுகளுக்குமான மசகு எண்ணெய் ஏற்றுமதியை முப்பது நாட்களுக்கு நிறுத்திவைக்கப் போவதாக ஈராக்கிய அதிபர் சதாம் ... தனர்.

இவ் எச்சரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே சதாம் ஹுசேன் மேற்படி அறிவிப்புச் செய்துள்ளார்.

பலஸ்தீனப் ...

## குண்டு வெடிப்பில் மூவர் பலி

(ஸ்ரீநகர்)

ஜம்முகாஷ்மீர் ரஜோரி மாவட்டத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் மூன்று பேர் கொல்லப்பட்டதுடன், பதினைந்து பேர் காயமடைந்துள்ளனர்.

இவர்களில் இருவரின் நிலைமை மிகவும் கவலைக்...

# இஸ்ரேல் பலஸ்தீன தாக்குதல்கள் பரஸ்பரம் தொடர்கின்றன

(இந்தியா)

இஸ்ரேல் படைகளுக்கும் பலஸ்தீன இராணுவத்தினருக்கும் இடையில் சண்டை தொடர்ந்த வண்ணம் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

பலஸ்தீன அகதிகள் தங்கி இருக்கும் பல முகாம்கள்மீதும் இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தியுள்ளன.

அரபாத் தங்கியிருக்கும் ரமழா நகரக் கட்டடங்கள் இயந்திரத் துப்பாக்கிகளின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. எனினும் அரபாத்துக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை.

இத்தாக்குதலில் அவரின் மெய்ப்பாதுகாவலர்கள் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த மாதம் 29 ஆம்திகதி முதல் இஸ்ரேலியப் படைகளின் தாக்குதலில் 200 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவத் தளபதி கூறியுள்ளார். (உ-5)

ஐ. நா. பாதுகாப்புப் பேரவை புதிய தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும் என்ற யோசனையை பேரவை முன் வைப்பது என அரபு நாடுகள் முடிவெடுத்துள்ளன.

இவ்விடயத்தில் அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்திருந்த போதிலும் அரபு நாடுகள் தம் முடிவை முன்னெடுத்துச் செல்லவுள்ளதாக பலஸ்தீன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீன நகரங்களில் இருந்து இஸ்ரேலிய படைகள் வாபஸ் பெறவேண்டும் என அரபு நாடுகள் வலியுறுத்தியுள்ளதுடன் எதிர்கால ஒப்பந்தனர். ... (உ-9)

## தீவிரவாதிகளால் ஐந்து பேர் சுட்டுக் கொலை

(ஸ்ரீ நகர்)

ஜம்முகாஷ்மீரில் இரண்டு பெண்கள் உட்பட ஐந்து பொதுமக்கள் தீவிரவாதக் குழுக்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த நான்கு பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (செ)

## 'பிரம்மோஷ்' ஏவுகணைகள் அடுத்த ஆண்டில் பாவனை

(புதுடில்லி)

இந்தியாவும் ரஷ்யாவும் இணைந்து தயாரித்துள்ள 'பிரம்மோஷ்' ஏவுகணைகள் அடுத்த ஆண்டுமுதல் இரு நாடுகளினதும் படை நடவடிக்கைகளில் இணைத்துக் கொள்ளப் படவுள்ளன.

இந்தியா பலதடவைகள் ரஷ்யாவிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்துள்ள போதிலும் இப்பொழுதுதான் முதற்தடவையாக இரு நாடுகளும் கூட்டாக ஏவுகணைத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளன.

இந்தஏவுகணை கடந்த வருடம் யூன்மாதம் வெற்றிகரமாகச் சோதனை செய்யப்பட்டது.

இது மிகப்பெரிய விமானந்தாங்கிக் கப்பல்களையும் தாக்கியழிக்கக் கூடியதுடன், முந்நூறு மீற்றர் தொலைவிற்கப்பால் உள்ள கப்பலைக் கூடத் தாக்கியழிக்கக்கூடியது என்பது குறிப்பிடத்தக்கது. (செ)

# உலக தரிசனம்

## அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளுக்கு எண்ணெய் ஏற்றுமதி தடை

(பக்தாத்)

அமெரிக்காவிற்கும் ஏனைய மேற்கு நாடுகளுக்குமான மசகு எண்ணெய் ஏற்றுமதியை முப்பது நாட்களுக்கு நிறுத்திவைக்கப் போவதாக ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசேன் தெரிவித்துள்ளார்.

கடந்தவார இறுதியில் அமெரிக்க ஜனாதிபதி புஷ் பிரித்தானியப் பிரதமரும் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது ஈராக்கிற்கு எதிரான எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

இவ் எச்சரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே சதாம் ஹுசேன் மேற்படி அறிவிப்புச் செய்துள்ளார்.

பலஸ்தீனப் பகுதிகளில் இருந்து இஸ்ரேலியப் படைகள் முற்றாக விலக்கப்பட்டால் மாத்திரமே முப்பது நாட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த இத்தடையை நீக்க முடியும் எனவும் சதாம் தெரிவித்துள்ளார். (செ)

## குண்டு வெடிப்பில் மூவர் பலி

(ஸ்ரீ நகர்)

ஜம்முகாஷ்மீர் ரஜோரி மாவட்டத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் மூன்று பேர் கொல்லப்பட்டதுடன், பதினைந்து பேர் காயமடைந்துள்ளனர்.

இவர்களில் இருவரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாகவுள்ளது. (செ)

## மனுதாக்கல் செய்தவருக்கு அபராதம் விதிப்பு

(புதுடில்லி)

முஸ்லிம் மக்கள் பொது இடங்களில் தொழுகை செய்வதை தடைசெய்ய வேண்டும் என உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இம்மனுவைத் தாக்கல் செய்திருந்த நபருக்கு பத்தாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார். (செ)

## மின்னல் தாக்கியதில் இருவர் பலி

(சென்னை)

கன்னியா குமரிக்கு அருகில் மின்னல் தாக்கியதில் இரண்டு பேர் பலியாகியுள்ளனர். (செ)

## பேருந்துகள் மோதியதில் பதினாறு பேர் உயிரிழப்பு

(புதுடில்லி)

திருச்சியில் இரண்டு பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் ஏற்பட்ட விபத்தில் பதினாறு பேர் உயிரிழந்துள்ளனர்.

இதில் இரண்டு குழந்தைகளும் ஏழு பெண்களும் அடங்குவர்.

இவ்விபத்தில் முப்பத்தி ஆறு பேர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (செ)

## ஜோர்ச் மன்னரின் சமாதிக்கு அருகில் ராஜமாதா அடக்கம்

(லண்டன்)

பிரிட்டனில் 101 வயதில் காலமான அன்னை ராணியின் பூதவுடல் கணவரான ஜோர்ச் மன்னரின் சமாதிக்கு அருகில் நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

பெரியசனிக்கிழமை அன்று காலமான அன்னைராணியின் இறுதிச் சடங்கில் பூதவுடலுக்கு 21 நாடுகளின் ராஜ குடும்ப உறுப்பினர்களும், ஆயிரக்கணக்கான பிரிட்டன் பிரஜைகளும் கலந்து கொண்டனர்.

இரண்டாவது உலகப் போரின் போதுபிரிட்டனுக்கு தலைமை வகித்த வின்சன் சேர்ஜ்சில் 1965 இல் மரணமாகியபோது அவருக்கு வழங்கப்பட்ட இராஜ மரியாதை இவருக்கும் வழங்கப்பட்டன.

2 வது உலகப்போரின் போது அன்னை ராணியின் உயிரைப்பாதுகாத்துக் கொள்ள பாதுகாப்பான இடத்திற்குசெல்லுமாறுகூறப்பட்டபோதும் அவர் உலகப் போரினால் சிதைவுற்ற இடங்களைப் பார்வையிட்டதுடன் பாதிப்படைந்த மக்களுக்கு நேரடியாகச்சென்று ஆறுதல் கூறினார்.

இத்தகைய துணிச்சல் மிக்க ஒரு சீமாட்டியின் மறைவினால் துவண்டு போயுள்ள லட்சக்கணக்கான பிரிட்டன் மக்கள் ஒரு வாரகாலத்திற்கும் மேலாக தமது அஞ்சலியை செலுத்திவந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

## கௌரவிப்பு

(கொழும்பு)

இசைமேதை பண்டித அமரதேவாவிற்கு ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்கா 10 இலட்சம் ரூபா நிதியை வழங்கி நேற்று முன்தினம் கௌரவித்துள்ளார்.

அரை நூற்றாண்டிற்கு மேலாக இசைத்துறைக்கு பணியாற்றியமைக்கா கவே ஜனாதிபதி நிதியிலிருந்து இத்தொகை நிதிவழங்கப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தினால் பத்மஸ்ரீ விருது பெற்ற தேவாவை பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவும் பாராளுமன்றத்தில் நேற்று கௌரவித்தார்.

இவருக்கு முக்ஷாதே விருதும் கிடைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்பிற்கு இந்திய அரசு தடைவிதிப்பு

(புதுடில்லி)

அமெரிக்காவினால்தீவிரமாகத்தேடப்பட்டுவரும்ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்பிற்கு இந்திய அரசு போடோ சட்டத்தின்கீழ் தடை விதித்துள்ளது.

இச்சட்டத்தின் கீழ் இந்திய அரசுஇதுவரைஇருபத்தி எட்டு அமைப்புக்களை தடைசெய்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (செ)

மதி நுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம் யாஉள முன்நிற்பவை.

- குறள்

## வலம்புரி

### அளந்து பேசுவது அவசியம்

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் சமாதானத் தடைகளை வெட்டி வருவது மகிழ்வுக்குரியது. அவ்வொப்பந்தம் யாழ்-கண்டி வீதியினைத் திறப்பதற்கு வழி வகுத்தது. இஃது வரலாற்றில் முக்கியமான பதிவு என்பதைப் பலரும் பல இடங்களில் கூறியுள்ளனர்.

ஒரு காலத்தில் சிங்கள தேசம் பற்றியும் சிங்கள மக்கள் பற்றியும் நாம் வெளிப்படையாகப் பேசிய காலம் உண்டு. ஆனால் இன்றைய சூழ்நிலையில் அத்தகைய பேச்சுக்கள் மறக்கப்பட வேண்டிய ஒன்றாகவே யுள்ளது. விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் என்றுமே நிதானமாக - ஆழ்ந்த சிந்தனையோடு - வரையறுக்கப்பட்ட எல்லையுடன் பேசுவதையே நாம் கண்டிருக்கிறோம். ஒரு போதும் அவர்கள் எல்லை மீறி வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தியது கிடையாது.

விடுதலைப் புலிகள் அமைப்பு இன்று உலகம் முழுவதும் போற்றும் அளவிற்குவியாபித்துள்ளதெனில் அதற்கு அவர்களின் நாவன்மை - சொல்லாட்சி - எண்ணியதை எண்ணியாங்கு உரிய முறையில் முன்வைக்கும் திறன் போன்றவையும் முக்கிய காரணங்கள் எனலாம்.

அவ்வாறு விடுதலைப் புலிகள் தமது பாதையை

# மாற்று சக்தி வளங்களைப் பயன்படுத்துவதால் உற்பத்திகளைப் பெருக்கி முன்னேற முடியும்

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு நாள் நிகழ்வு கடந்த 5 ஆம் திகதி யாழ் பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ. குமாரவடிவேல் தலைமையில் நடைபெற்றபோது. விஞ்ஞான சங்கத்தின் சமூகவிஞ்ஞானப் பிரிவின் தலைவரும் புவியியல் துறைத் தலைவருமான பேராசிரியர் இரா. சிவசந்திரன் ''வடகீழ் மாகாணத்தில் மாற்றுச் சக்தி வளம்'' என்ற தலைப்பில் ஆற்றிய உரையிலிருந்து எடுக்கப்பட்ட முக்கிய விடயங்கள்.

வடகீழ் மாகாணத்தில் மாற்றுச் சக்தி வளம் பற்றி சிந்திப்பதற்கு இப்பிரதேசத்தின் புவியியல் எவ்வாறு இந்நோக்கத்திற்குப் பொருத்தப்பாடாக இருக்கிறது என்பது பற்றி நோக்க வேண்டும். எமது பிரதேசத்தில் முக்கிய சக்தி வளங்களாக சூரிய சக்தி (சோலர்), காற்றுச் சக்தி, உயிரியல் திணிவு சக்தி, கடல் வளம், மீதேன் வாயு உற்பத்தி, புவி வெப்பசக்தி, அணு சக்தி என்பன இனங்காணப்பட்டுள்ளன.

### சூரிய சக்தி

இன்று உலகளாவிய ரீதியில் மாற்றுச் சக்தி வளத்தின் தேவைப்பாடு முக்கியமாக உணரப்பட்டுள்ளது. சக்தியின் மூலாதாரம், சூரியன் ஆகும். எமது பிரதேசம் அயன வலயத்தினுள் வருவதால் சூரிய சக்தியை பெற்றுக்கொள்ளக் கூடியவாய்ப்புகள அதிகமாக உள்ளன. செறிவு கூடிய அளவுகளில் சூரியக் கதிர்கள் இப்பிரதேசத்தை மோதுவதால் சூரிய சக்திமூலமே நாம் அதிகளவு பயனைப் பெற்றுக் கொள்ள முயல வேண்டும். வருடத்தில் 57 தினங்கள் மட்டுமே இங்கு மழை நாட்களாக இருக்கின்றது.

சூரிய சக்தியை நாம் இரு வழிகளில் பயன்படுத்திக் கொள்ளலாம், ஒன்று சூரிய வெப்பத்தை நேரடியாகப் பயன்படுத்தல் இம் முறை மூலம் உணவுவகைகள உலர்த்தப்பட்டுபாதுகாக்கப் படுகின்றன. மற்றும் சூரிய அடுப்புக்கள் பயன்பாட்டை நடைமுறைப்படுத்தலாம். கண்ணாடி வில்லைகளின் குவிவை பயன்படுத்தி அமைக்கப்படும் இவ் அடுப்புகள் அரைமணி நேரத்தில் 140 சென்ரிகிறேற். வெப்பத்தை தரக் கூடியன. இவ்வாறான அடுப்புகளின் பாவனை இந்தியாவில் பெருமளவு நடைமுறையில் உள்ளது.

இரண்டாவது முறை சூரிய சக்தியை மின்சக்தி ஆக்குவதன் முலம் அதைப் பல்வேறு தேவைகளுக்கு உபயோகித்தல், இந் நடைமுறை 1939 இல் பிரான்ஸில் கண்டுபிடிக்கப்பட்டது சோலர் பனல்கள் சிலிக்கன் உபயோகித்து தயாரிக்கப்பட்டன. இவ்வாறான சூரியகலங்களை புல்மோட்டையில் உள்ள வெண்மணலிலிருந்துபெறப்படும் சிலிக்கன் மூலம் தயாரிக்கலாம்.

### மின் பாவனை

1960 இல் விண்வெளியுகம் ஆரம்பமான போது ரஷ்யா அமெரிக்கா போன்ற நாடுகளும் சூரிய கலத்தை பெருமளவு அறிமுகமாக்கின 1970 இற்குப் பின்னர் மரபு சார்ந்த வலுப்பற்றாக்குறை ஏற்பட்டது. அப்போது சூழல் மாநாட்டு தீர்மானத்தில் சூழல் நட்பார்ந்த வளங்களை பயன்படுத்தி உலகின் சக்தி தேவையை பூர்த்தி செய்யும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கையில் 52% வீதமான கிராம மக்கள் மின்சார வசதி இல்லாது இருக்கிறார்கள். சூரிய சக்தியே அவர்களின் உடனடி விடிவுக்கு வழிகாட்ட கூடியது. ஒரு வீட்டின் பாவனைக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒளியூட்டலுக்கு சூரிய கலங்களில் உருவாகும் மின் சாரத்தை பற்றறிகளில் சேமித்து பயன்படுத்தலாம். மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கும், கிராம வைத்திய சாலைகளில் குளிரூட்டுவதற்கும், கடற்கரைகளில்வெளிச்ச வீட்டு மின் குமிழுக்கும் தொலைத் தொடர்பு சாதனங்களிலும், வீதி விளக்கு அமைக்கவும் இம் மின் சாரத்தை உபயோகப் படுத்தலாம். சூரிய சக்தி மண்ணெண்ணெய் மற்றும் எரிபொருள் செலவை விட இலபகரமானது.

### காற்று சக்தி

காற்றுச்சக்தியைகொலன்ட் போன்ற நாடுகளில் அற்புதமாகப் பயன்படுத்துகிறார்கள் ஜேர்மன், டென்மார்க் போன்ற நாடுகளிலும் காற்றின் மூலம் பெருமளவு மின் சாரம் பெறப்படுகிறது. அமெரிக்கா இந்திய போன்ற நாடுகளும் காற்றாலை உற்பத்தியில் தற்போது அதிக கரிசனை காட்டி வருகின்றன. எமது பிரதேசத்திலும் காற்றாலைகள் அமைக்கக் கூடிய வாய்ப்பு உள்ளது வடக்கு கிழக்கில் கரையோர வீதிகள் முழுவதும் காற் றாலைகளை அமைத்தால் அதிலிருந்து கூடியளவு பயனைப் பெறமுடியும்.

உயிர்ச்சுவட்டு எரிசக்தியே இன்று வரை 70% மான மக்களின் தேவையைப் பூர்த்தி செய்துவந்துள்ளது. மரபு ரீதியாக விறகை உபயோகித்து வந்தமக்கள் தமது பிரதேச தென்னை, பனை வளத்திலிருந்தும் எரிபொருளை பெற்று வருகின்றனர். மரத்தூள், உமி போன்றனவற்றை மக்கள் பயன்படுத்துவது குறைவு இவற்றின் மூலம் எமது சக்தி தேவையை ஓரளவு பூர்த்தி செய்ய முடியும்.

### உயிரியல் வாயு

உயிரியல் வாயு பாவனை எமதுமக்களிடம் அதிகம் பரவவில்லைஇதற்குஉரிய தொழில் நுட்ப அறிவு இன்மையும் முதலீடுப்பிரச்சினையும் காரணமாக இருப்பினும் இவை பற்றிய பிரசாரங்கள் இங்கு எடுபடுவதும் இல்லை. சீனா இந்தியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் பண்ணைகளில் பெறப்படும் கழிவுகளை பயன்படுத்தி உயிரியல் வாயுவை உற்பத்தி செய்கிறார்கள், பின் அக்கழிவுகள் விவசாய நிலங்களில் இடப்படும் போது கூடிய உற்பத்தியையும் பெற்றுக் கொள்ள முடிகின்றது. அங்கு பண்ணைகளில் ஒரு சூழற்சி முறையில் கழிவுகள் பயன்படுத்தப்பட்டு சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது.

கடல் வளத்தால் சூழப்பட்ட எமது பிரதேசததில் கடல் சக்தி வளத்தை 3 வழிகளில் பயன்படுத்தலாம். கடல் வற்றுப் பெருக்கு அலைச் சக்தி, கடல் நீரோட்டம் மூலம் அது சாத்தியமாகின்றது. வற்றுப் பெருக்கை சாதமாக உபயோகித்து அணைகளை அமைத்து சூழலிகள் மூலம் மின்சார உற்பத்தியை மேற்கொள்ளலாம் யப்பான், சிங்கப்பூர் இந்த அலைச்சக்தியை முழுமையாகப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் நாம் கடல் வளத்தை பயன்படுத்துவதில் அக்கறை காட்டவில்லை.

புவி வெப்ப சக்தி என்பது புவி அடி நீர் ஆவியாகி மேல் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது மேலை நாடுகளில் இதற்கான படிமுறைகளை அமைத்து அதன் மூலமாக மின் சக்தி பெறப்படுகிறது. வடக்கு கிழக்கு மாகாணத்தில் மயோசின் சுண்ணாம்பு படிவு மற்றும் பெற்றோலியம் எடுக்கக் கூடிய சாத்தியங்களும் இருக்கின்றன. தெற்கில் நீர் வீழ்ச்சிமூலம் சக்தியை பெற்றாலும் வடகிழக்கில் மாற்று சக்தி மூலம் எமது பொருளாதார வளத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

சமாதான சூழ்நிலை ஒன்று உருவாகி வடக்கு கிழக்கில் நிரந்தர அமைதி ஏற்படுமாயின் எமது வளங்களைப் பயன்படுத்தி எமது மண்ணை அபிவிருத்தி செய்யக் கூடிய வாய்ப்புகள் அதிகளவு உண்டு. எனவே அறிஞர்கள், தொழில் நுட்ப வியலாளர் அதற்குரிய திட்டங்களை வகுத்து மாற்றுச் சக்தி மூலம் பயனடையக் கூடிய வழிவகைகள் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

சூழல் மாசடையாவண்ணம் சக்தி உற்பத்தி செய்யப்பட வேண்டியது முக்கியமாகும்.

தொகுப்பு:

**எம். எஸ். எஸ். கீர்த்தி**

முறையில் முன்வைக்கும் திறன் போன்றவையும் முக்கிய காரணங்கள் எனலாம்.

அவ்வாறு விடுதலைப் புலிகள் தமது பாதையை முன்னெடுத்துச் செல்லும் போது அவர்களுக்கு ஆதரவாக இருக்கும் என்ற கோதாவில் சிலர் பேசுகின்ற வார்த்தைகள் சில வேளைகளில் அவர்களையேபெரும் சிக்கல்களில் மாட்டிவிடக்கூடும். எனவே பொதுக் கூட்டங்களில் பொதுப் பிரதிநிதிகளாக உரையாற்றுகின்றவர்கள். பொறுப்போடு உரையாற்ற வேண்டும். சிங்கள மக்களையோ அன்றி புதிய அரசையோ அன்றி படையினரையோ கீழ்த்தரமாகப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். அதேவேளை பெரும் தியாகம் படைத்த வேங்கை வீரர்கள் அமைதியாக இருக்க பொது அமைப்புப் பிரதிநிதிகள் வீராப்புப் பேசி சமாதானத்தைக் குலைக்க முயற்சிககக் கூடாது.

றன. மற்றும் சூரிய அடுப்புகள் பயன்பாட்டை நடைமுறைப்படுத்தலாம். கண்ணாடி வில்லைகளின் குவிவை பயன்படுத்தி அமைக்கப்படும் இவ் அடுப்புகள் அரை மணி

சேமித்து பயன்படுத்தலாம். மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கும், கிராம வைத்திய சாலைகளில் குளிரூட்டுவதற்கும், கடற்கரைகளில்வெளிச்ச வீட்டு மின் குமிழுக்கும்

களில் பெறப்படும் கழிவுகளை பயன்படுத்தி உயிரியல் வாயுவை உற்பத்தி செய்கிறார்கள், பின் அக்கழிவுகள் விவசாய நிலங்களில் இடப்

கள் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

சூழல் மாசடையாவண்ணம் சக்தி உற்பத்தி செய்யப்பட வேண்டியது முக்கியமாகும்.

## தினசரி தியானம்

### நிறை பொருள்

எத்தனையோ அண்டத்து
இருந்தவர்கள் எத்தனைபேர்
அத்தனைபேர் உண்டாலும்
அணுவுங் குறையாண்டி.

- பட்டினத்தார்

இறைவா, உன்னை நான் சார்ந்திருக்குமளவு நிறை நிலை எனக்கு வந்து விடுகிறது.

கடலினின்று மேகமாக நீரை எவ்வளவு மொண்டெடுத்தாலும், கடலின் நிறைவு குறைவதில்லை. எத்தனை நதிகள் வந்து அதனுள் புகுந்தாலும் அதில் மாறுதல் ஒன்றும் வருவதில்லை. அண்டங்களனைத்தும் சிதாகாசத்தில் தோன்றவும், ஒடுங்கவும் செய்கின்றன. அதனால் அதன் பூரணத்தில் ஒருமாறுதலும் வருவதில்லை. மனத்தின் கண் வரும் எல்லாமாறுதல்களுக்கிடையில் மனத்தகத்துள்ள சிதாகாசம் மாறாது நிறை பொருளாய் நிலவுகிறது.

ஸ்ரீமத் சுவாமிசித்பவானந்தர்

# கடலுணவை சந்தைப்படுத்த இரண்டு வாகனங்கள்

(ஆனைக்கோட்டை)

சாவல் கட்டு 100 வீட்டுத் திட்டத்தைப் பார்வையிட்ட நீரியல்வள அமைச்சர் மகிந்த விஜயசேர,

பயனாளிகளுக்கு2ஆயிரத்து 500ரூபாவை வழங்கவுள்ளதாகவும்,

இங்கு பிடிக்கப்படும்இறால் நண்டு என்பவற்றுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு வசதியாக 2 வாகனங்களை வழங்கவுள்ளதாகவும் உறுதியளித்துள்ளார்.

(உ-201)

# உலகக் கிண்ண றகர் போட்டியில் இலங்கையணி பங்கு

(கொழும்பு)

2003 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள உலகக்கிண்ண றகர் போட்டிகளின் இறுதிச் சுற்றில் இலங்கையணி பங்குபற்றவுள்ளது.

இலங்கை சீனா- நாடுகளின் றகர் அணிகளுக்கிடையிலான போட்டி இன்று நடைபெறவுள்ளது.

பின்னர் எதிர் வரும் 21 ஆம் திகதி கஸகிஸ்தான் நாட்டின் றகர் அணியுடன் இலங்கை றகர் அணி மோதவுள்ளது.

இலங்கையில் றகர் விளையாட்டு அறிமுகமாகி மிக நீண்ட காலமாகி விட்ட போதிலும் இம் முறை தான் முதல் தடவையாக றகர் உலகக் கிண்ண இறுதிச் சுற்றில் பங்குகொள்ள இலங்கையணிக்கு தகுதி கிடைத்துள்ளது.

(உ-3)

## ஒப்பந்த மீறல்கள் குறித்து 40 முறைப்பாடுகள் பதிவு

அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்த மீறல்கள் தொடர்பாக இதுவரை 50முறைப்பாடுகள பதிவுசெய்யப்பட்டுள்ளதாக யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர்தெரிவித்துள்ளார். மார்ச் மாதம் வரை 30 முறைப்பாடுகளும் கடந்த இருவாரத்தில் 10 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். (த)


324,பலாலிவீதி, யாழ்ப்பாணம்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பமாணி

BITதெரிவுப் பரீட்சைக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

BIT

விண்ணப்ப முடிவுத் திகதி 20-04-2002



சத்து நிறை நல் உணவை கர்ப்பவதி உண்டால் நிறை மாதம் வரும்போது பன்னிரண்டு கிலோ கூடும். கர்ப்பவதி போஷாக்கு மேம்படுவதாலே குழந்தைகளும் மூன்று கிலோ குறையாது பிறக்கும். (C/3937)



# திறப்பு விழா அழைப்பிதழ்




## ஸ்ரீ வரதராஜா பேக்கரி

பிரதான வீதி

தொல்புரம், சுழிபுரம்

**10-04-2002**

நிகழும் மங்களகரமான விஷ வருஷம் பங்குனித் திங்கள் 27ஆம் நாள் புதன்கிழமை காலை 9.15 மணி முதல் 10.45 மணி வரை வரும் அமிர்தசித்த யோகமும் புரட்டாதி நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தை திரு தாமோதரம்பிள்ளை சிவராஜா (இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதி) அவர்கள் திறந்து ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆசீர்வதித்தும் மதிய போசனத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்

திரு இராசலிங்கம் ஸ்ரீராம் (ஸ்ரீ)
உரிமையாளர்

(C/3938)


## அறிவித்தல்

### நல்லூர் ஸ்ரீசட்டநாதர் ஆலய பரிபாலன சபை ஆண்டுப் பொதுக்கூட்டம் 2002

இடம் :- ஆலய மண்டபம்

காலம் :- 28-04-2002 ஞாயிற்றுக்கிழமை

நேரம்:- காலை 10.00 மணி

தயவு செய்து பிரேரணைகளை 25~04~2002க்கு முன்னர் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். பின்வருவோர் இக்கூட்டத்தில் பங்குபற்றிப் புதிய நிர்வாகசபையைத் தெரிவு செய்யத் தகுதியுடையவராவர்.

* தொடர்ந்து திருவிழாக்களில் உபயகாரர்களாக இருப்பவர்கள்.
* தினப்பூசைகள், விசேட பூசைகளில் உபயகாரர்களாக இருப்பவர்கள்.
* ஆயுட்கால உறுப்பினர்கள், முந்திய ஆயுட்கால உறுப்பினர் கள் 25.04.02க்கு முன்னர் தங்கள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

தயவுசெய்து இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று மேற்குறிப்பிடப்பட்டவர்கள் அனைவரையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இ. ஏகாம்பரம் — தலைவர்

க. இராசலிங்கம் — செயலாளர் (4955)


# இன்று முதல்

## யாழ். நகரில் உங்களுடன்



# SKY ELECTRONIC SYSTEM

## ஸ்கை எலக்ரோனிக் சிஸ்டம்

# ஸ்கை எலக்ரோனிக் சிஸ்டம்

இன்று (10.04.2002) காலை 10 மணிக்கும் 12 மணிக்கும் இடையே உள்ள சுப வேளையில் இல. 01, C, ஸ்ரான்லி வீதியில் எமது ஸ்தாபனம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நீங்கள் எமது ஸ்தாபனத்தில் கணனிகள், கணனிகளுக்கான சகலவிதமான உதிரிப் பாகங்களும் கொள்வனவு செய்யும்பொழுது ஒரு வருட உத்தரவாதத்துடனும் மூன்று வருட பராமரிப்பு சேவையுடனும் வழங்கப்படும்.

அத்துடன் உங்கள் கணனிகளில் ஏதாவது பழுதுகள் ஏற்படும்போது எம்முடன் தொடர்புகொண்டால் உடனுக்குடன் திருத்திக் கொடுக்கப்படும்.

மற்றும் தொலைக்காட்சி பெட்டிகள், றேடியோக்கள் என சகலவிதமான எலக்ரோனிக் பொருட்களையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

(C/3940)






14.04.2002 புது வருடத் தினத்தன்று
ஒரே சமயத்தில் இந்தியாவிலும் "நாகம்ஸ் சினிமா" சுன்னாகத்திலும்
டொப் ஸ்டார் பிரசாந்த், சிம்ரன்

நடித்த

தமிழ்

இது ஒரு L.P.L. வெளியீடு

(C/3941)




இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 10 .04.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரியின் வாரமலர் **Sankunatham** பக்கங்கள் - 16

# சங்கு நாதம்

சங்கு:~ 03 வள்ளுவர் ஆண்டு 2033 பங்குனி:~ 27 புதன்கிழமை (10.04.2002) தொலை பேசி 3378 நாதம்:~ 07

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
துறைப் படிப்பகம்

### சமாதான முயற்சி வெற்றிப் பாதையில்

# முஸ்லிம் தலைவர்கள் தடம் புரள்கிறார்கள்!





நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் வாரமலர்

# சமாதான முயற்சி வெற்றிப் பாதையில்......

# முஸ்லிம் தலைவர்கள் தடம் புரள்கிறார்கள்

**விதுரன்**

சமாதான முயற்சியில் மக்கள் அதிகம் நம்பிக்கை கொள்ளவில்லை மக்கள் நம்பிக்கை வைத்த பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்தன. மக்கள் நம்பிக்கை வைக்காத சமாதான முயற்சிகள் வெற்றிப் படிகளில் ஏறுவதைக் காணமுடிகின்றது எது.




அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் இனப்போர் விவகாரத்தில் பாரியமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

வன்னிக்கான பொருளாதாரத் தடைநீக்கம் அம்மாற்றங்களில் முதலிடம் பெற்ற முக்கிய திருப்பமாகும். அதனைத் தொடர்ந்து யாழ்-கண்டிவீதி (ஏ9) பாதை திறக்கப்பட்டது சமாதான பேச்சு வார்த்தை கடந்தகாலங்களில்



தோல்வியில் முடிவுற்றதனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணிக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெறும் வார்த்தைக்கு நடுவராக- ஏற்பாட்டாளராக நோர்வேயின் தூதுக்குழுவினர் செயற்படுகின்றனர் இக் குழு அரசுக்கோ விடுதலைப்புலிகளுக்கோ சார்புடையதல்ல. மாறாக இலங்கை நாட்டில் எப்படியும் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நன் நோக்குடன் இக்குழு செயற்படுகின்றது. இதனால் பேச்சுவார்த்தையில் ஓர் தெளிவும் வலுவும் ஏற்பட்டது. அத்தோடு நோர்வே தூதுக்குழுவினர் அரசின் உயர் மட்டத்துடனும் விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தினர் இதனால் சிக்கலான பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்மானங்களை எடுக்க முடிந்தது.

இரண்டாவது வேறுபாடு கடந்த கால சமாதான முயற்சியில் இரு தரப்பும் நேரடியாகத் தலையிட்டு இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து பேச்சு நடத்தினர் இங்கு தீர்க்கப்பட வேண்டிய அடிப்படைப்பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இனப் பிரச்சினை குறித்துப் பேசப்பட்டமையால் பேச்சுக்கள் தோல்வியில் முடிவுற்றன.

ஆனால் இன்றைய சமாதான முயற்சிகள் குறித்த அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்ட பின் அதனூடே மேலே சென்று இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து பேசுவதாகும்.

இதன் காரணமாக தற்போதைய சமாதான முயற்சி பல படிகளில் முன்னேற்றங்களைக் கண்டுள்ளதெனலாம்.

## இனப்பிரச்சினைத் தீர்வில் முஸ்லிம் மக்களின் பங்களிப்பு

இலங்கை இனப்பிரச்சினையில் சிங்களவர்களும், தமிழர்களும் மட்டுமே பாதிக்கப்பட்டார்கள் என்று கூறிவிடமுடியாது. முஸ்லிம் மக்களும் அதனால் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். எனினும் அவர்கள் தமிழர்கள் செறிந்து வாழும் இடங்களிலும் சிங்களவர்கள் வாழுகின்ற இடங்களிலும் வாழ்வதனால் முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு இரு தரப்பினருக்கும் உண்டு அந்த வகையில் முஸ் சாராது நின்று தமது உரிமைகளை வென்றெடுக்கப் போகிறார்கள் என்பது கேள்விக்குரியது.

## முஸ்லிம்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்

இலங்கை இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமாயின் சகல மக்களும் சம உரிமையோடு சுதந்திரமாக வாழக்கூடிய சுமுகமான சூழ் நிலை ஏற்பட வேண்டும் - ஏற்படுத்தப்பட வேண்டும் 1948களில் நாட்டின் சுதந்திர உரிமையை ஆங்கிலேயர்கள் சிங்களவர்களிடம் கையளித்த போது தமிழ் மக்கள் பற்றி சிந்தித்திருப்பார்களாயின் ஆயிரக்கணக்கான மனித உயிர்களின் அழிவை இலங்கையில் தடுத்திருக்க முடியும். அன்று விட்ட தவறு இன்று இலங்கைத் தீவையே உருக்குலைத்து விட்டது. அத்தகையதோர் நிலை இனப்பிரச்சினைத் தீர்வுக்குப் பின்னரும் செயற்படாதிருக்க வேண்டுமாயின் முஸ்லிம் மக்களின் உரிமைகள் குறித்தும் பேசுவது மிக மிக அவசியமாகும்.

முஸ்லிம் மக்களின் உரிமைகள் குறித்தோ அன்றி அவர்களின் நலன்கள் குறித்தோ இன்று ஆராயப்படாவிடின் எதிர் காலத்தில் மீண்டும் ஓர் தீவிரவாதம் ஏற்பட வாய்ப்புண்டாகும். அத்தீவிரவாதம் முஸ்லிம் மக்களை உள்ளடக்கியதாக அமையும்.

அத்தகையதோர் துர்ப்பாக்கிய நிலை ஏற்படாமல் இருக்க வேண்டுமாயின் சம காலத்தில் இடம் பெறும் பேச்சுவார்த்தையின் போது முஸ்லிம்களின் பங்களிப்பும் அவசியமாகும்.

## பேரியல் அஷ்ரப்பின் அவசரப் போக்கு

முன்னாள் அமைச்சர் அஷ்ரப் மரணமானதன் பின்னர் சந்தர்ப்பவசத்தால் அரசியலுக்குள் பிரவேசித்தவர் அஷ்ரப்பின் மனைவியான திருமதி பேரியல் அஷ்ரப்பின் அரசியல் உள்நுழைவிற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமும் ஆதரவு வழங்கவில்லை ஆயினும் ஹக்கீமை அடக்க நல்லதொரு முஸ்லிம் தலைவராக பேரியல் அஷ்ரப்பை ஜனாதிபதி சந்திரிகா தனது ஸ்திரத்தை நிலைநாட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்

அதன் ஒரு வடிவமே அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தமானது ''முஸ்லிம் மக்களின் முதுகில் எழுதப்பட்ட அடிமை சாசனம்'' எனக் கூறினார். அவரின் இக்கூற்று எதிர்பார்த்த அளவில் எழுச்சி பெறவில்லையாயினும் புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்றி ஏனோ தானோ என்று இருந்த முஸ்லிம் மக்களிடையே சிறிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதெனலாம்.



ஒப்பந்தம் குறித்து பேரியல் விடுத்த செய்தியானது அவரின் அரசியல் அனுபவமின்மையை மட்டுமல்ல நாட்டின் சமாதானத்தில் அவரின் அக்கறையின்மையையும் வெளிக்காட்டியுள்ளது.

## ரவூப் ஹக்கீமின் மௌன நிலை

ஒப்பந்தம் முஸ்லிம் மக்களின் அடிமை சாசனம் எனப் பேரியல் அஷ்ரப் கூறிய போதிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் மௌனமாக இருப்பது இங்கு நோக்குதற்குரியது.

சந்திரிகா அம்மையாரை கைவிட்டு வெளியேறி ரணில் விக்கிரமசிங்காவுடன் இணைந்து கொண்ட ஹக்கீம் பிரதமர் ரணில் முன்னெடுத்துச் செல்லும் சமாதான முயற்சிகளை அவசரப் பட்டு விமர்சிக்க முடியாது. எதிர்த் தரப்பில் இருக்கும் பேரியல் அம்மா கூறுவது போல் ஹக்கீம் ஐயாவால் எதையும் கூறி விட முடியாத சூழ்நிலை இருப்பது அவரின் மௌன நிலைக்குக் காரணமாக இருக்கலாம் அல்லது விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களை சந்

கட்சியில் உள்ள சில எம்பிக்கள் ஆதரவு தருவார்கள் என்ற நம்பிக்கை பிரதமருக்கு உண்டு அதற்கான அறிகுறிகளும் தற்போது தென்படத்தொடங்கியுள்ளது. ஆனால் தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத்திற்குக் கொண்டு வரும் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதனை எதிர்க்கும் ஆயின் அது அரசுக்கு பெருந் திண்டாட்டமாகப் போய்விடும்.

## தமிழர்கள் மீது நம்பிக்கை இல்லை

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் முஸ்லிம் தலைவர்களைப் பொறுத்தவரை அவர்கள் சிங்களவர்களில் வைத்துள்ள நம்பிக்கையை தமிழர்கள் மீது வைக்கவில்லை இதற்குப் பல ஆதாரங்கள் உண்டு குறிப்பாக யாழ்ப்பாணத்



சமாதான முயற்சியில் மக்கள் அதிகம் நம்பிக்கை கொள்ளவில்லை மக்கள் நம்பிக்கை வைத்த பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்தன. மக்கள் நம்பிக்கை வைக்காத சமாதான முயற்சிகள் வெற்றிப் படிகளில் ஏறுவதைக் காணமுடிகின்றது எது. வாயினும் யாழ் கண்டி வீதி திறக்கப்படும் என பொது மக்கள் நம்பிக்கை கொள்ளவில்லை ஆனால் மக்களை பிரமிக்க வைக்கும் வகையில் கடந்த 8ந் திகதி யாழ் கண்டிவீதி திறந்த வைக்கப்பட்டது இது சமாதான முயற்சியில் மிகப்பெரும் முக்கிய திருப்பமாக அமைந்து விட்டது.

## சமாதான முயற்சியின் வேறுபட்ட வடிவங்கள்

இருபது வருடகால இனப் போரின் இடையிடையே சமாதான முயற்சிகளும் இடம்பெற்றே வந்துள்ளது ஆயினும் அன்றைய சமாதான முயற்சிகளுக்கும் இன்றைய சமாதான முயற்சிகளுக்கும் இடையே இரண்டு பெரும் வேறுபாடுகள் உண்டு அதில் ஒன்று கடந்த கால பேச்சுவார்த்தைகள்.

அரச தரப்பின் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கும்இடையே நடைபெற்றது. இங்கு தனித்து முடிவெடுக்கும் அதிகாரம் இருதரப்பு பிரதிநிதிகளிடமும் இருக்கவில்லை இதனால் பேச்சுவார்த்தைகள் ஓர் வலுவற்ற நிலையில், அவரவர் மனநிலைக்கு ஏற்ப முடிவுகள் எடுக்கப்பட்டன.

ஆனால் இன்றைய பேச்சு

னும் அவர்கள் தமிழர்கள் செறிந்து வாழும் இடங்களிலும் சிங்கள வர்கள் வாழுகின்ற இடங்களிலும் வாழ்வதனால் முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு இரு தரப்பினருக்கும் உண்டு அந்த வகையில் முஸ்



லிம் மக்கள் சிங்களவர் பக்கமோ தமிழரின் பக்கமோ சாயாது நடு நிலையோடு தமது உரிமைகளை. காப்பாற்றிக் கொள்ளும் தார்மீக பொறுப்புண்டு எனினும் முஸ்லிம் கட்சிகள் எந்தளவு தூரம் பக்கம்

நுழைவிற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமும் ஆதரவு வழங்கவில்லை ஆயினும் ஹக்கீமை அடக்க நல்லதொரு முஸ்லிம் தலைவராக பேரியல் அஷ்ரப்பை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கருதினார். அதனால் பேரியலுக்கு ஜனாதிபதியின் ஆசியும் இருந்தது. இது பொது ஜன ஐக்கிய முன்னணியில் இணைந்திருந்த ரவூப் ஹக்கீமுக்கு வெறுப்பை ஏற்படுத்தியது. பொது ஜன ஐக்கிய முன்னணியில் இருந்து ரவூப் ஹக்கீம் வெளியேறி ரணில் விக்கிரமசிங்காவுடன் இணைந்து கொள்வதற்கு பேரியலுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான நல்லுறவும் ஒரு காரணமாக அமைந்திருந்தது. அதன் விளைவாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சி கவிழ்வுக்கு வழி கோலியது.

இவை முன்னக் நிகழ்வுகள், இப்போது பேரியலும், ஹக்கீமும் ஒருவருக்கொருவர் எதிரிகள் என்பது வெளிப்பட்டு விட்டது. இத்தகைய ஓர் சூழ்நிலையில் பேரியல் அஷ்ரப் அரசியலில்

முடியாத சூழ்நிலை இருப்பது அவரின் மௌன நிலைக்குக் காரணமாக இருக்கலாம் அல்லது விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களை சந்திக்க இருப்பதால் முஸ்லிம் மக்களின் நிலைப்பாடு குறித்து அவரிடம் பேசி விட்டு அதன் பின்னர் தனது கருத்தை வெளிப்படுத்தலாம் என்ற வகையிலும் ஹக்கீம் மௌனத்தைக் கடைப்பிடிக்கலாம்.

## முஸ்லிம் தலைவர்கள் எந்நேரமும் மாறலாம்

இலங்கையின் ஆட்சி மாற்றங்களில் முஸ்லிம் கட்சிகள் முக்கிய பங்கு வகித்தமை வரலாறு கண்ட உண்மை. அக்கட்சிகளிடம் இருக்கக் கூடிய அடிக்கடி மாறும் தன்மை- அவர்களை நம்பிய அரசுகளின் வீழ்ச்சிக்குக் காரணமாக அனைந்திருந்தது. அவ்வகையில் முஸ்லிம் கட்சிகள் எந்நேரமும் காலை வாரிவிடலாம் என்ற அச்சம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் இருக்கவே செய்கிறது ஏனெனில் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் எட்டப்படுகின்ற தீர்வுத் திட்டங்கள்- சட்டவாக்கங்கள் கட்டாயமாக பாராளுமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தால் நிரூபிக்கப்படவேண்டும் அவ்வாறு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை பெற்றுக் கொள்வதற்கு ஆளுங்



தில் அண்மையில் நடந்த சர்வதேச உதைபந்தாட்டப் போட்டியில் இலங்கை அணியும் பாகிஸ்தான் அணியுமே மோதுவதாக இருந்தது. எனினும் கடைசி நேரத்தில் அது கைவிடப்பட்டது இதற்குக் காரணம் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் குடியிருக்காததே ஆகும். ஆக, முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் மீது நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என்பதையே இது கோடிட்டுள்ளது.

இத்தகையதொரு சூழ் நிலையில் முஸ்லிம் தலைவர்கள் இனப் பிரச்சினை விவகாரத்தில் இறுதி நேரத்தில் தடம் புரளும் வாய்ப்பு உண்டெனலாம்.

எதுவாயினும் இனப்பிரச்சினைத் தீர்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா முன்னெடுத்துச் செல்கின்ற தீர்வுத் திட்டமானது. தமிழ் மக்களை சுதந்திரமாகவும், உரிமையுடனும் வாழ்வதற்கு வழி சமைககுமாயின் அது முஸ்லிம் மக்களின் உரிமைக்கும் சுதந்திரத்துக்கும் வழிவகுக்கும்.

# முரசுக்கட்டிலில் மோசுகீரனார்!

இலக்கிய நயம்

கலைஞர் மு.கருணாநிதி

தும்பை மலர் எடுத்துச் சரம் தொடுத்துத்
தொங்க விட்ட நீர்வீழ்ச்சித் தாடி!

கம்பஞ் சோறுண்ணும் பழக்கத்தால் கடுகளவும்
கட்டுக் குலையாத நெடுநல் மேனி!

அம்பின் முனையும் தோற்றுவிடும்படியாக
அழகான கூர் விழிகள்!

அதோ வருகிறார், அமுதத் தமிழ்மொழியே
அரும்புலவர் உருவெடுத்து வருவது போல்!

மோசுகீரனார் என்பது அவர் பெயர்; அவருடல் தழுவி
வீசுகின்ற தென்றல் கூடத் தமிழாய் மணக்கும்;

மூவேந்தராம் சேர சோழ பாண்டியர்க்கு - இந்தப்
பாவேந்தர் மீது தனி மதிப்பே உண்டென்பர்!

முடியேறியிருக்கும் மும்மன்னர் தலையினிலே - தமிழ்க்
குடியேறியிருக்கும் வரலாறு பல உண்டு இலக்கியத்தில்!

தமிழ் காக்கும் மூவரில் ஒருவன்
தகடூர் எறிந்த சேரமான் இரும்பொறையாம்!

பதிற்றுப்பத்தில் எட்டாம்பத்துப் பாடி - அவனைப்
பாராட்டி மகிழ்வித்த செயலுக்காக - அவன்
ஆண்டிருந்த் நில முழுதும் கொடையாக
அரிசில் கிழார் எனும் புலவருக்குப் பரிசெனவே அறிவித்து
அதனைப் பெற அவர் மறுத்திடவே அவரையே தனக்கு
அறவுரை கூறும் அமைச்சராக ஆக்கிக்கொண்டான்!

செந்தமிழ்பால் வைத்திருந்த பாசத்தாலே
செங்கோல் பிடித்திருந்த அவன் கையில்
சிலவேளை எழுதுகோலும் ஏறிக் கொண்டு
சிறப்புமிகு இலக்கியங்கள் படைத்ததுவாம்!

முதுகவிஞர் மோசுகீரனார்; மலர்க்குடத்தில்
மதுவருந்த வருகின்ற வண்டே போல்
நதிமன்னன் சேரமானைச் சந்திக்க
அதி தொலைவு நடந்து வந்து,
அரசனது மாளிகையை அடைந்து விட்டார்.

அயர்வுடனே மன்னன் உறங்குவது கேள்வியுற்று
அவனைக் காண அரண்மனையில் காத்திருந்தார்.
அவருக்கும் ஓய்வு கொள்ள வேண்டுமென்றோர் உணர்வு;
அதனாலே சுற்றுமுற்றும் பார்க்கலானார்
ஆங்கோர் இடம் படுப்பதற்குக் கிடைக்குமா என்று!

வீர முரசம் வைக்கின்ற கட்டிலொன்று
வெண்மலர்கள் நிறைந்தவாறு இருக்கக் கண்டார்!
குருதி வழியும் போர் முகத்தில்
கொட்டுகின்ற முரசு வைக்கும்
கட்டிலென்று அறியாத புலவர் ஏறு
கண்ணுறங்க வசதியெனப் படுத்துக் கொண்டார்!

வெற்றறிகொள் முரசு வீற்றிருக்கும் கட்டிலமீது
வேறெவரும் படுப்பதெனில் பெருங்குற்றமென
வேந்தர்கள் வெகுண்டெழுந்து தலைதனையே
வெட்டி வீழ்த்தும் காலம் அது!

நீராட்டி எடுத்து வர வீரர் சிலர் - அந்தப்
போராட்டக் கள முரசை அகற்றியதால்
விபரம் தெரியா வித்தகப் புலவர் - அதில்
விழிகளை மூடி உறங்கலுற்றார்!

வெகு தொலைவு நடந்த களைப்பில்
வியர்வை முத்து உடலில் விளைய
மிகு உறக்கம் கொண்டு விட்டார்;
மெய் மறந்து குறட்டை விட்டார்!

மயில் அணைத்து மஞ்சத்தில் கிடந்த மன்னன்,
துயில் களைந்து எழுந்து விட்டான்!

மாளிகையின் முன்புறத்தில் உலவுதற்கு
மாமன்னன் வந்தபோது வியப்புற்று
முரசு கட்டிலருகே விரைந்தான் - ஆங்கு
மோசுகீரனார் உறங்குதல் கண்டான்!

"வாள் எடுத்து வந்திடவோ அரசே?" யென்று
ஆள் ஒருவன் வணங்கி நின்றான்........

போர் முரசம் வைக்கின்ற கட்டில் மீது
யார் ஒருவர் படுத்தாலும் அவரைத்
துண்டித்து உயிர் பறித்தல் - ஒரு
கண்டிப்பு ஆணையென இருப்பதாலே
மண்டியிட்ட வீரன், மன்னனது கண்ணசைவை
மரியாதையுடனே எதிர்நோக்கிக் கொண்டிருந்தான்!

அரசனின் விழிகள் நெருப்பைப் பொழியும்;
அவனது மொழியில் ஆத்திரம் வழியும்;
என்றந்த வீரன் நினைத்ததற்கு மாறாக
"எடுத்துவா விசிறியை!" என்றான் வேந்தன்!

காவலனோடிக் கொண்டுவந்த கவரியினைக்
கைகளில் ஏந்திக் கவிஞர் மீது
கனிவுடன் வீசிப் பணிவிடை புரிந்தான்
தனிமிகு புகழுடன் நாடாண்ட வேந்தன்!

களைப்பு நீங்கிப் புலவர் எழுகின்ற வரையில்
கவரி வீசுதலை மன்னன் நிறுத்திடவில்லை.....
நெடுநேரம் கழிந்தபின்னர் எழுந்த புலவர்;
திடுமெனக் குதித்தார், கட்டிலில் இருந்து! -"மன்னவனே என்ன
இது?எனத்துடித்தார்" "இந்தச்
சின்னவன் பெற்ற பேறு" என்றான், சேரன்!

"அரசு ஆணையை அறிவேன் எனினும்
முரசு கட்டிலென அறியாது படுத்தேன்
ஆவி போக்கிடும் தண்டனையிருந்தும் - எனைக்
கூவியெழுப்பிக் கொல்லுதல் விடுத்து
கொற்றவனே தன் கையால் எனக்குக்
குளிர் சாமரம் வீசுகின்ற காட்சி என்னே?" என்றயர்ந்ததார்
புலவர்!
"தமிழுக்குத் தொண்டு செய்தால் - அந்தத்
தமிழ் உள்ளளவும் வாழ்வோம் என்ற
தன்னலத்தால்; தமிழேவடிவாக
என்னகத்தே வந்துள்ள தங்களுக்கு
நான் செய்த தொண்டு இ∴தெ"ன்றான் சேரன்!
தேன் பெய்த பழச்சாறாய்ப் பாட்டொன்றைப் பரிசாய்த்தந்தார்
புலவர்!



"மாசற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய, மஞ்ஞை
ஒலிநெடும் பீலி ஒண்பொறி, மணித்தார்,
பொலங்குழை உழிஞையொடு, பொலியச் சூட்டிக்,
குருதி வேட்கை உருகெழு முரசம்

மண்ணி வாரா அளவை, எண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
அறியாது ஏறிய என்னைத் தெறுவர,
இருபாற் படுக்குநின் வாய்வாய் ஒழித்ததை
அதூஉம் சாலும், நற் றமிழ் முழுது அறிதல்;

அதனொடும் அமையாது, அணுக வந்து, நின்
மதனுடை முழவுத்தோள் ஓச்சித், தண்ணென
வீசி யோயே, வியலிடம் கமழ,
இவண்இசை உடையோர்க்கு அல்லது, அவணது
உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை

விளங்கக் கேட்ட மாறுகொல்,
வலம்படு குருசில், நீ ஈங்குஇது செயலே?

பொருள் விளக்கம்:

விசித்த = வலித்துப்பிணைத்த. வார்புறுவள்பின் = வாரப்பட்ட வாரையுடைய. மைபடுமருங்குல் கருமரத்தால் = செய்த உறுதி வாய்ந்த முரசின் பகுதி. மஞ்ஞை = மயில். மண்ணி வாரா அளவை = நீராடி வருவதன் முன்னே. மென்பூஞ்சேக்கை = மெல்லிய பூக்களையுடைய கட்டில். தெறு = வெகுளல். இருபாற்படுக்கும் = இரு கூறாகப் பிளக்கும். மதனுடை = வலிமை வாய்ந்த. தண்ணென வீசியோய் = சாமரங்கொண்டு குளிர வீசினாய். வலம்படு குருசில் = வெற்றியுடைய தலைவனே.

மயில் அணைத்து மஞ்சத்தில் கிடந்த மன்னன்,
துயில் களைந்து எழுந்து விட்டான்!

மாளிகையின் முன்புறத்தில் உலவுதற்கு
மாமன்னன் வந்தபோது வியப்புற்று
முரசு கட்டிலருகே விரைந்தான் - ஆங்கு
மோசுகீரனார் உறங்குதல் கண்டான்!



அளவை = நீராடி வருவதன் முன்னே. மென்பூஞ்சேக்கை = மெல்லிய பூக்களையுடைய கட்டில். தெறு = வெகுளல். இருபாற்படுக்கும் = இரு கூறாகப் பிளக்கும். மதனுடை = வலிமை வாய்ந்த. தண்ணென வீசியோய் = சாமரங்கொண்டு குளிர வீசினாய். வலம்படு குருசில் = வெற்றியுடைய தலைவனே.

# இறக்க முடியாத சிலுவை

மறந்துவிடுங்கள்
என்றாய்
இதயத்திற்கு
நான் சொல்லிவிட்டேன்
இயற்கைக்கு
நீ சொல்வாயா?
பாழாய்ப்போன இயற்கை
படுத்துகிறதே பெண்ணே

● பூமிக்கு வெளிச்சம்

ஓ
நீ கண் திறந்துவிட்டாய்

●இருட்டு கட்டுக் குலைந்தது

புரிகிறது
அவிழ்ந்த கூந்தலை
அள்ளி முடிக்கிறாய்

● பூவில் பனித்துளிகள்

இது கூடத் தெரியாதா?
முகம் கழுவுகிறாய்

● கடல் கொப்புளித்துக்
கரைகளில் நுரைகள்

நீ பல் துலக்குகிறாய்

● எங்கோ ஒரு மின்னல்
மின்னி
எவருக்கும் தெரியாமல்
மழை பெய்கிறது

குளிக்கிறாய்
கோதை நீ குளிக்கிறாய்

● நனைந்த மரங்களைக்
காற்று துவட்ட
தீர்த்தம் தெறிக்கிறது

தங்கமே நீ தலை
உலர்த்துகிறாய்



● திடீரென்று

பூமியெல்லாம் பூக்கள்
எப்படி?
உன் புடைவை மடிப்புகள்
பூமி தொடுகின்றன

● மத்தியானத்தில் என்ன
இருட்டு?
பாவை உனக்குப் பகல்
தூக்கம்

சூரியன் சாய்கிறான்
ஓ
நீ புரண்டு படுக்கிறாய்

● மேற்கில் ஒரு வர்ண கலா
சாலை
அறிந்து கொண்டேன்

நீ ஆடை மாற்றுகிறாய்

● கடலோடு செவ்வானம்

அட
தேநீர்க் கோப்பையில்
உன் உதடுகள்

● இரவில்
இரண்டே இரண்டு விண்மீன்கள்

ஓ
நீ மட்டும் என் கவிதை
படிக்கிறாய்

● தென்றல் ஏன் நின்றுவிட்டது?

நீ இமைக்கவில்லை
உறங்கிவிட்டாய்



இப்படியாக...

இயற்கை என்னைக்
கடக்கும் போதெல்லாம்
நீதான்...
நீதான் நினைக்கப்படுகிறாய்

சொல்
நீ என்னை நினைப்பது
எப்போதடி?

ஏதாவது இறுதி ஊர்வலம்
உன்னைக் கடக்கும் போதா?

# கைரேகை சாஸ்திரம்



1. ஆயுள் ரேகை
2. புத்தி ரேகை
3. இருதய ரேகை
4. விதி ரேகை
5. திருமண ரேகை
6. ஆரோக்கிய ரேகை
7. செவ்வாய் ரேகை
8. சூரிய ரேகை

## திருமண ரேகை
## (THE LINE OF MARRIAGE)

### திருமண ரேகை இருக்குமிடம்.

திருமண ரேகை சுண்டு விரலுக்குக் கீழும் இருதய ரேகைக்கும் மேலுமாக அமைந்திருக்கும். அது உருவத்தில் மிகச் சிறிய ரேகையாகும்.

திருமண ரேகை சுண்டு விரலின் அடியில் வளைவில்லாமல் நேராகவும், சுத்தமாகவும் அமைந்திருந்தால் தமது மனத்துக்குகந்த மனைவியை அடைவார்கள். குடும்பத்தில் ஆண் பெண் ஒற்றுமையையும் அது குறிப்பிடும். (படம் -38)



பெறாது. (படம் -40)



40

திருமண ரேகை கீழ்நோக்கித் தாழ்ந்து சூரிய ரேகையைக் கடந்துசெல்லுமானால், திருமணமான பின் முன்னிருந்த பதவியில் மாற்றம் ஏற்படுவதுடன் பாக்கியத்தை வளர்ப்பதாகவும் அத்திருமணம் அமையும். (படம் -41)

மேற்கண்ட இரு கிளைகள் கையில் கீழ்ப்புறமாகச் சாய்ந்திருந்து அவைகளின் மத்தியிலிருந்து ஒரு ரேகை எழுந்து கட்டைவிரலின் வளையத்தையடைந்தால், அத்தகையவர்கள் தம் மனைவியையோ, புருஷனையோ விவாகரத்து செய்வார்கள். (படம் -43)



43

திருமண ரேகையிலிருந்து மற்றொரு சுத்தமான ரேகை மேற்புறமாக எழுந்து சூரிய ரேகையை நோக்கிச் சென்று மோதிர விரல் அடியில் அதனுடன் சேர்ந்தால், திருமணத்தால் செல்வமும் செல்வாக்கும் விருத்தியாகும். உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு மேற்பதவி கிடைக்கும். திருமண வாழ்க்கை சுகமாகவும் வெற்றிகரமாகவும் இருக்கும். (படம் -44)



44

திருமண ரேகையின் தொடக்கத்திலேயே தீவுக்குறியிருந்தால், கல்யாணமாவதற்கு முன்பே ஒரு பெண்ணைக் கற்பழித்து ஏமாற்றுவதில் இன்னல்கள் ஏற்படும். அந்தத்தீவுக் குறியைத்தொடர்ந்து நேராகவும் சுத்தமாகவும் ரேகை செல்லுமாகில் இறுதியில் எல்லாம் நன்மையாகவே முடியும். (படம் -45)



றொரு ரேகை எழுந்து புத்தி ரேகை மீது பாய்ந்தோடினால் அத்தகையவர் கலப்பு மணமோ, காதல் மணமோ செய்து கொள்வார்கள். ஆனால், தம்பதிகளுக்குள் அபிப்பிராய பேதம் ஏற்பட்டு வாழ்க்கை அமைதி கெடும். (படம் - 47)



47

திருமண ரேகை ஒரு தீவுக் குறியுடன் தொடங்கி கீழ்ப் புறமாகச் சாய்ந்தோடுமாகில், அத்தகையவரின் வாழ்க்கைத் துணைவி அல்லது துணைவருக்கு அதிகமான நோய் உண்டாகி ஆயுள் முடியும். (படம் -48)



48

திருமண ரேகையின் இறுதியில் இரு கிளைகள் தோன்றி, அதன் மத்தியிலிருந்து ஒரு உப ரேகை எழுந்து, கீழ்ப்புறமாக சாய்ந்து இருதய ரேகையுடன் கூடியிருந்தால் அத்தகையவர்களுக்குத் திருமண வாழ்க்கை சுகமாக அமையாது. அதற்காகத் தம்பதிகள் விவாகரத்துச் செய்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படாது. ஆனால், திருமண வாழ்க்கையில் ஏதாவது குரூரமான முடிவு வந்துவிடுமோ என்ற பயம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். (படம் -49)



வித நன்மையும் ஏற்படாது. ஏற்கனவே தாம் வகித்துள்ள பதவியும் திருமணமான சில தினங்களுக் குள்ளே பறி போய்விடும். (படம் -50)



50

திருமண ரேகை மீது எழுந்துள்ள சுத்தமான சின்னஞ்சிறிய ரேகைக் கோடுகள் சந்ததியைக் குறிப்பிடும். அழுத்தமான கோடுகள் பிள்ளைகளையும் லேசானகோடுகள் பெண்களையும் குறிப்பிடும்.

### திருமணமாகும் காலம்.

திருமணமாகும் காலத்தை, ரேகையின் அமைப்பையும் அது கையில் உள்ள இடத்தையும் அனுசரித்துச் சொல்ல வேண்டும். அதாவது இருதய ரேகையிலிருந்து சுண்டு விரல் அடி வரை உள்ள இடமானது திருமண வயதைக் குறிப்பிடும்.

### திருமண ரேகை பற்றிய மேலும் சில குறிப்புகள்.

திருமண ரேகை கையின் பக்கவாட்டிலிருந்தும் புதன் மேட்டின் குறுக்காகவும் தோன்றலாம். திருமண ரேகை இரண்டாக உடைந்து கீழ் நோக்கித் திரும்பி இருந்தால், சம்பந்தப்பட்ட மனிதர்களுக்குத் திடீர் மரணம் உண்டாகும்.

ஒரு சிறிய ரேகை திருமண ரேகைக்கு இணையாகத் திருமண ரேகைத் தொட்டுக்கொண்டு சென்றால், கணவனுக்கு அவன் சம்பந்தப்பட்டவர்கள் மூலமாகவும் பெண்ணுக்கு அவள் சம்பந்தப்பட்டவர்கள் மூலமாக வும் அனுதாபமும் ஆதரவும் கிடைக்கலாம்.

புதன் மேட்டின் மீது திருமண



திருமணரேகை, கீழ் நோக்கி வளைந்திருந்தால் ஜாதகருக்கு மனைவியால் உண்டாகும் சுகம் குறையும். மற்றும் இளவயதிலேயே மனைவியின் இழப்பையும் அது குறிப்பிடும். இவ்வாறு பெண்களுக்குள்ள ரேகைகளைக் கொண்டு அவர்களின் கணவர்களுக்கு மேற்கண்ட பலனைச் சொல்ல வேண்டும். (படம் -39)



திருமண ரேகை உருவில் சிறியதாகவும் மேல்பக்கமாகச் சென்று நுனியில் வளைந்துமிருந்தால் அத்தகைய ரேகை அமைப்புள்ளவர்களுக்குத் திருமணம் எக்காலத்திலும் நடை

மான பின் முன்னிருந்த பதவியில் மாற்றம் ஏற்படுவதுடன் பாக்கியத்தை வளர்ப்பதாகவும் அத்திருமணம் அமையும். (படம் -41)



திருமண ரேகையின் இறுதி, இரண்டாக்க் கிளைகள் போல் பிரிந்திருந்தால், அத்தகைய ஆணோ பெண்ணோ ஒருவரையொருவர் விட்டுப் பிரிய வேண்டியிருக்கும். அதனால் தாம்பத்ய சுகம் கெடும். அத்தகைய பிரிவு தாம்பத்ய உறவைக் கெடுக்கும். ஆனால், விவாகரத்தாக இருக்காது. (படம் - 42)



தமாகவும் ரேகை செல்லுமாகில் இறுதியில் எல்லாம் நன்மையாகவே முடியும். (படம் -45)



திருமண ரேகை இரு கிளைகளாகப் பிரிந்து அதன் மத்தியிலிருந்து மற்றொரு ரேகை எழுந்து அதன் முடிவில் ஒரு பெருக்கல் குறியிருந்து, அது விதி ரேகையில் முடியுமாகில் அத்தகையவருடைய திருமண வாழ்க்கை மிக்க துயரத்தில் முடியும். (படம் - 46)



திருமண ரேகையின் இரு கிளைகளின் மத்தியிலிருந்து மற்

விடுமோ என்ற பயம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். (படம் -49)



திருமண ரேகையின் இறுதி கீழ்நோக்கிய இருகிளைகளாகப் பிரிந்து, அக்கிளைகளின் நடுவில் ஒரு தீவுக்குறியுடன் மற்றொரு சிறிய ரேகை புறப்பட்டு, சூரிய ரேகையுடன் (காணப்படும் தீவுக்குறி சூரிய ரேகையின் மத்தியில் அமைந்திருக்க வேண்டும்) சேருமாகில், அத்தகையவர்க்குத் திருமணத்தால் எவ்

சம்பந்தப்பட்டவர்கள் மூலமாகவும் பெண்ணுக்கு அவள் சம்பந்தப்பட்டவர்கள் மூலமாகவும் அனுதாபமும் ஆதரவும் கிடைக்கலாம்.

புதன் மேட்டின் மீது திருமண ரேகை நன்றாக அமைந்திருந்து அதிலிருந்து சில மிகச் சிறிய ரேகைகள் கீழ்நோக்கிப் பாய்ந்திருந்தால், அப்படிப்பட்டவர்களின் கணவன், மனைவியின் உடல் நலக் குறைவாலும் மனைவி கணவனின் உடல்நலக் குறைவாலும் மிக்க சிரமத்தை அடைய வேண்டிவரும்.

திருமண ரேகையின் இறுதி இருதய ரேகையை நோக்கி வளைந்திருந்தாலும், கீழ்நோக்கிப் பாய்ந்திருந்தாலும் சம்பந்தப் பட்டவர்கள், (கணவன் மனைவியருள் யாருடைய கையில் அப்படி உள்ளதோ அவர் மட்டும் என்று கொள்ள வேண்டும்)முதலில் இறப்பார்கள்.

**ஸ்ரீனிவாசன்**

---

**போலீஸ்காரர்**:- *நீ ஏன் ஜெயிலில் இருந்து தப்பினாய்?*

**பிடிபட்ட கைதி**:- *சிறையில் என் மனைவி அடிக்கடி என்னை பார்க்க வந்தாள்.*

*'நீங்க அமைச்சரோட பீ.ஏ - வா...?'*
*'எப்படி டாக்டர் கண்டு பிடிச்சீங்க?'*
*எல்லோருக்கும் இதயம் 'லப் - டப்' னுதான் அடிக்கும். உங்களுக்கு 'ஜிங்-சக்'குன்னு அடிக்குது...!'*

**ஒருவர்**:- *'என்னது... 'கியூவில ஒருவர் பின் ஒருவராக வரவும்..' 'கண்ட இடங்களில் எச்சில் துப்பாதீர்கள்'னு எல்லாம் உன் வீட்டிலே போர்டு போட்டிருக்குது...?"*

**மற்றவர்**:- *'மாமியார், மருமகள் சண்டை அடிக்கடி வரும்... அப்பவெல்லாம் தெரு ஜனங்க வேடிக்கை பார்க்க வீட்டுக்குள்ளே வந்திடுறாங்க...!"*

## காதலர்கள் தலைத் தீபாவளி கொண்டாடலாமா?

க.கற்பகவல்லி பருத்தித்துறை

★ காலம் காலமாக உபதேசம் செய்தும் உலகம் திருந்தாததேன்?

**● உபதேசம் செய்பவர்கள் திருந்தாததால்.**

ச.கவிதரன் சண்டிலிப்பாய்

★ காதலின் வெற்றி காதலனிடமா? அல்லது காதலியிடமா? தங்கியுள்ளது?

**● காதலியிடம்.**

பெ.குணம். யாழ்ப்பாணம்.

★ தமது பிள்ளைகளை நேர் வழியில் சிந்திக்க விடாது குறுக்கு வழிகளை மட்டும் காட்டி வளர்க்கும் பெற்றோர் பற்றி என்ன நினைக்கிறீர்?

**● தங்கள் பின்னடிக்கு கஷ்டப்படப்போகிறார்கள்.**

கார்த்திக் இளவாலை

★ படுத்தவுடன் தூக்கம் வர என்ன செய்ய வேண்டும்?



**● தூக்கம் வந்த பின் படுக்க வேண்டும்.**

இ.சுலோசனா பருத்தித்துறை.

★ 'பெண்ணென்றால் பேயும் இரங்கும்'. என்ற அக்காலத்து கருத்துடன் 'பெண்ணென்றால் பஸ்ஸிலிருந்து இறங்கும்' என்ற இக்கால செய்லை ஒப்பிடுங்களேன்?

**● 'இரங்கும்' என்ற பதத்தை தட்டி விட்டு இப்போது பார்க்கிறார்கள்.**

க.குணரத்தினம் நாவலர்வீதி

பெண்களிற்கு பெண்கள் ஏன் பொறாமைப்படுகிறார்கள்?



**பெண்களிடம் இருக்கும் பலவீனமே அதுதானே!**

S.வருணன் குருசோவீதி

★ ரணில் விக்கிரமசிங்கா வியாசரின் நெருங்கிய நண்பர் என எனக்கு சிலர் சொல்லுகின்றனர். உண்மையா வியாசரே? (முற்பிறப்பிலாவது)

**● மகனே! வருணா கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரித்தறிவதே மெய்.**

J.றொபேட் நாவாந்துறை

★ சமாதானத்திற்கான நோபல் பரிசு ரணில், பிரபா இவர்களுக்கு கிடைக்குமா?

**● நிச்சயம் கிடைக்கும். சமாதானம் ஏற்பட்டால்!**

## இளமைக்காலம் எப்படி இருக்க வேண்டும்?

சுந்தர் தொல்புரம்

★ காதலர்கள் தலைத் தீபாவளிகொண்டாடலாமா?

**● பரவாயில்லை, ''தலைத் தீபாவளி'' கொண்டாடலாம். ஆனால் தலைகீழாக்கொண்டாடக் கூடாது.**

சுதன் யாழ்ப்பாணம்

★ எடுத்த முயற்சியெல்லாம் தோல்வி; வெற்றி பெற என்ன செய்ய வேண்டும்?

**● மாவீரர் நெப்போலியனின் வரலாற்றைப்படிக்க வேண்டும்.**

T.பௌசி யாழ்ப்பாணம்.

★ வியாசரே! நான் ரீயூசன் படித்துவிட்டு வரும் வேளைகளில்ஒரு பெடியன் முடிவு கேட்கிறான். எனக்கோ விருப்பம், ஆனால் என் நண்பிகள் வருகின்றனர் எவ்வாறு முடிவு கூறுவது?

**● கண்ணால் பேசும், காளைபுரிந்து கொள்வான்.**

வினோதரன் ஒட்டுவெளி

★ வியாசர் அவர்களே! கல்வியால் வெல்ல முடியாது என்றபொறாமையால் வீண் கதைகளை கட்டியும் வகுப்பில் நுழையும் போது திட்டமிட்டு 'குபீர்' எனச் சிரித்தும் இம்சிக்கும் கூட்டத்திற்கு ஏதாவது கடியாக புத்திமதி சொல்லுங்கள் 'பிளீஸ்' சகிக்க முடியவில்லை?

**● புத்திமதியல்ல புரியும் படியும் பதில் சொல்லலாம். கொஞ்சம் பொறுமையாக இருங்கள். காலம் கனிகிறது.**

திருமாறன் கல்வியங்காடு

★ வியாசரே! தனியார் கல்வி நிறுவனங்களில் பாடக் கட்டண உயர்வுக்கு முற்றுப் புள்ளி எப்போது வரும்?

**● பாடசாலைக் கல்வியில் என்று நம்பிக்கை வருகிறதோ அன்றுதான்.**

## பெண்களிற்கு பெண்கள் ஏன் பொறாமைப்படுகிறார்கள்?

T.சாருமதி யாழ்ப்பாணம்

★யாழிற்கான A-9 பாதை திறப்பு பற்றி என்ன கூறுவீர்கள்?

**● புதிய பரிமாணம்.**

வீஷ்மர் பளை

கிடைக்கிற ஊதியத்தில் குடும்பத்தை நடத்த முடியவில்லை என்ன செய்வது?

**● ஐயோ வீஷ்மா, இதே கேள்வியைத் தான் நானும் கேட்கிறேன். வாரும் இரண்டு பேருமாய் போய் இராத் திருடர்களிடம் ஆலோசனை கேட்போம்.**

வதனி சங்கானை

★ உறவுக்குள் மணந்து கொண்டால், குழந்தைகள் ஊமைகளாகப் பிறக்கும் என்கிறார்கள்?

**● ஆம்! மருத்துவர்கள் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர்.**

றெ.விஜிதா ஆசீர்வாதப்பர்வீதி

★ பெண்ணுக்கு பெண்கள் தான் எதிரி என்பதை சில பெண்கள் நிருபிக்கிறார்களே?



**● 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்றானே பாரதி. மாதர்கள் தம்மைத் தாமே இழிவு செய்வதைத் தான் அப்படிக் கூறியிருக்கிறான் என்றும் எடுக்கலாம்.**

இளஞ்செழியன் சுன்னாகம்

★ இளமைக்காலம் எப்படி இருக்க வேண்டும்?



**● முதுமை வரும் என்பதை உணரும் பக்குவத்தை புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.**

## வியாசரின் பதில்கள்

ரூபன் இத்தாவில்

★ ஜே.வி.பியினர் எதற்கெடுத்தாலும் வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக அச்சுறுத்துகிறார்களே. வியாசரே அது பற்றி?

**● நீதிமன்றத்திற்கு உபத்திரம் கொடுக்கப் போகிறோம் என எச்சரிக்கிறார்கள்.**

தே.தங்கன் நீராவியடி

★ காதலையும் நட்பையும் எவ்வாறு ஒரு ஆண்டம் அல்லது பெண்ணிடம் தெரிந்து கொள்ளலாம்?

**● சிரிப்பதன் மூலம் ~ அடிக்கடி திரும்பிப் பார்ப்பதன் மூலம்.**

த.ராஜினி தும்பளை

★ தற்கால உலகில் கல்வி, தொழில் ஆகிய இரண்டிலும் எது முக்கியம்?

**● இரண்டும்.**

ங்களேன்?

● 'இரங்கும்' என்ற பதத்தை தட்டி விட்டு இப்போது பார்க்கிறார்கள்.

முடிவு கூறுவது?

● கண்ணால் பேசும், காளைபுரிந்து கொள்வான்.

எப்போது வரும்?

● பாடசாலைக் கல்வியில் என்று நம்பிக்கை வருகிறதோ அன்றுதான்.

தம்மைத் தாமே இழிவு செய்வதைத் தான் அப்படிக் கூறியிருக்கிறான் என்றும் எடுக்கலாம் அல்லவா.

★ தறகால உலகில் கல்வி, தொழில் ஆகிய இரண்டிலும் எது முக்கியம்?

● இரண்டும்.




வாரம் ஒரு காலையிலே
வாஞ்சையுடன் வெளியாகி
வாசகர் புகழ் வெளித்திடவே
வானவெளி தான் பரவி
யாவரையும் சிலிர்க்க வைக்கும்
மழலையரின் கலசங்கள்
சின்னத்திரை என்பனவும்
நாவலுடன் சிறுகதையும்
பூரிக்கும் விடுகதைகள்
இன்னும் என்ன வேண்டும்
அறிவுதனை நாம் வளர்க்க
கலை அம்சம் பொருந்திய
சங்கிற்கேற்ப நாதமே
வாழ்க உன்புகழ் வளர்க அகிலம்
எல்லாம்

*இ.கிருஷ்ணவேணி,*
*நல்லூர்*

வலம்புரி சங்குநாதம்
கவிதைக் கலசத்திலே
காலத்தின் தேவைக்கேற்ப
கவிஞர்கள் கருத்தையெல்லாம்
கவின் பெற வாரம்தோறும்
கரங்களில் தவழவிட்டே
கற்கண்டாய் இனிமையூட்ட
கவிச்சுவை பலதாய்த்தந்து
கவர்ந்திடும் தனிச்சிறப்பை
காலத்தால் அழிந்திடாது
வாழ்ந்திட வாழ்த்துகின்றோம்
வாழ்க வலம்புரி சங்குநாதம்
வாழிய! பல்லாண்டென்றே

*நீர்வை மணி*

வலம்புரி சங்கு என்பது தான் இருக்கும் இடத்தை புனிதப்படுத்தும், அதேபோல் நீயும் இந்த யாழ்குடாநாட்டில் எங்கும் தவழ்ந்து இந்த குடாநாட்டை புனிதப்படுத்துகிறாய். மொத்தத்தில் உன் சகல அம்சமும் சிறந்தது. நீ மென்மேலும் சிறப்பாக திகழ என் வாழ்த்துக்கள். தொடரட்டும் உன் பணி.

சி. காந்தருபன்
சுன்னாகம்

வீறுநடை போடும் சங்கு நாதமே!
உனக்கு எனது இனிய வந்தனங்கள்.
நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் என் மனதை மிகவும் கவர்ந்தவை. உன் சேவை யாழ் மண்ணில் தொடர்ந்து ஒளி விட்டு பிரகாசிக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

*வே. யாழினி*
*நவிண்டில்*

மங்காப் பொலிவுடன் மாமறை போலவே
எங்கும் ஒலிக்கட்டும் சங்கின் நாதமே
சங்குநாதத்திற்கு என் இதயம் கனிந்த
நல்வாழ்த்துக்கள்.

*A. ரஜீவ்,*
*யாழ்ப்பாணம்.*

நடுவுநிலை தவறா "வலம்புரி"யின்
வாரமலர் சங்குநாதமே!
மலரினிலே தேன் நாடும்
வண்டென புதனிலே உன்
இதழினைச் சுவைத்து உன்னில்
தினம் தினம் மனம் மயங்கி
உன்னில் மூழ்குகிறேன் – உன்னை
தினம் வாழ்த்துகிறேன் – பலநாள்
உனக்கு எழுதத் துடித்தேன் ஒரு மடல்
ஆனால் நீயோ ஒரு கடல்!
உன் புகழை என் பேனா முனையால்
வார்த்தையாய் வடிக்கத்தான்
முடியுமோ?
"வாழ்க எந்தன் சங்குநாதமே
சூழ்க உன்னால் இன்பமே"

*S.S. சிவகுமார்*
*மிருசுவில்*

எட்டுத் திக்குகளிலும்
வெற்றி நடை போட்டு வரும்
பல்சுவை நாளிதழே!
பல கோடி வந்தனங்கள்--
அம்சமான உன் இதழ்களில்
ஆபரணமாக எழுத்துகள் தாங்கி
நவயுக நங்கையைப் போல்
நடந்து வரும் அழகென்ன
தாயின் அரவணைப்பில்
தவழ்ந்திடும் குழந்தையைப் போல்
வாசகர் கரங்களிலே
வனப்புடன் திகழ்கின்றாய்
அரசியல் விடயம் முதல்
அனைத்து ஆக்கங்கள் நீ தந்து
பூமியில் உன் நாதம் ஒலித்திட
புகழ் பரப்பிடு சங்கு நாதமே......

*மு. காயத்திரி*
*மிருசுவில்*

இருள் நீக்கி சுடர் ஏந்தி
அகிலத்தில் முழங்கி வரும்
சங்குநாதமே!
என் விழிகளுக்குள்
ஒவ்வொரு நாளும் தடம்
பதிந்துவிட்டனஉன்னுடைய
அழகிய வர்ணச் சொற்கள்

*சி.இன்பராஜ்*
*மந்துவில்*

# அர்த்தமுள்ள இந்து மதம்



"வந்த வினையும் வருகின்ற வல்வினையும் கந்தனென்று சொல்லக் கலங்கும்"

ஆனால், செய்த வினையும் செய்கின்ற தீவினையும், ஓர் எதிரொலியைக் காட்டாமல் மறையமாட்டா.

## புண்ணியம் திரும்ப வரும்

நீ விதைத்த விதைகளை நீயே அறுவடைசெய்த பின்னால் தான் அந்த நிலத்தில் வேறு பயிர்களைப் பயிரிட முடியும்.

கொலை, களவு, சூது அனைத்தையும் செய்து விட்டு "குமரா! முருகா!" என்று கூவினால் குமரன் நீ வரும் கோயிலுக்குக் கூட வர மாட்டான்.

இதிலும் எனக்கோர் அனுபவம் உண்டு.

என்னிடம் படம் வாங்கிய ஒருவர், படத்துக்காக வசூலான கணக்குக் காட்டாமல், பொய்க் கணக்கு எழுதி, நான் அவருக்கு முப்பதினாயிரம் ரூபா தர வேண்டும் என்று கோர்ட்டிலே வழக்குத் தொடர்ந்தார்.

வேறு வழியில்லாமல் வயிற்றெரிச்சலோடு நானும் கொடுக்க வேண்டி வந்தது.

அவர் ஏற்கனவே ஒரு பணக்காரச் செட்டியாரையும் ஆச்சாள்புரத்துக்காரர் ஒருவரையும் ஏமாற்றியவர்.

அவரது மூலதனமே ஏமாற்றுவது தான். ஏமாற்றி என்ன பயன்?

அத்தனை பணமும் போய் நகை நட்டுகளும் போய், அன்றாடச் சோற்றுக்கே இன்று அலை மோதுகிறார்.

அவரை அடிக்கடி வட பழனி கோயிலில் காணலாம்.

உடம்புக்குச் சட்டையில்லாமல் இடுப்புக்குத் துண்டு கட்டிக் கொண்டு, அந்த 'பாபாத்மா' தினமும் கோயிலுக்கு வருகிறது.

நெற்றியில் கட்டுக்கட்டாக விபூதி; இரண்டு காதிலும் கதம்ப பூக்கள்; கையில் தேங்காய் பழம் கொண்ட தட்டு.

அந்த மனிதர் தினந்தோறும் முருகனைத் தேடுகிறார்.

முருகனோ அவரைக் கண்டாலே ஓடுகிறான்.

ஒருவன் வந்த வழியைப் பார்த்துத்தான், கந்தன் வரப் போகும் வழியைத் திறந்து விடுகிறான்.

ராஜாங்கம் கட்டி ஆண்டவனுங்கூட, நேர்மை தவறி நடந்தால் நிம்மதி இல்லாமல் துடிக்கிறான்.

இறைவனின் தராசு வணிகனின் தராசு அல்ல; அது எடையைச் சரியாகவே போடுகிறது.

குளத்திலே ஒரு ரூபாயைத் தவறிப் போட்டு விட்டால், குளம் வற்றியதும் அது உன் கைக்கே கிடைக்கிறது - அது நேர்மையாகச் சம்பாதித்த பணமாக இருந்தால்.

ஒரு நடைபாதையில் நீ கண்ணாடித் துண்டைப் போட்டால், நீ திரும்பி வரும்போது, அது

### பாகம் 01

உன் காலிலேயே குத்துகிறது.

குளிக்கும் அறையில் நான் எச்சிலைத் துப்பி விட்டேன்.

ஒரு மணி நேரம் கழித்து நான் உள்ளே போகும் போது, அது என் காலையே வழுக்கி விட்டது.

விதி என்பது இறைவன் விதித்தது மட்டுமல்ல; நீயே விதித்ததுமாகும்.

ஊரையெல்லாம் கேலி செய்த ஒரு பணக்காரர், ஊர் முழுவதும் கேலி செய்யும் நிலையில் வாழ்ந்து மடிந்ததை நான் அறிவேன். அவரும் பக்தர்தான்!

பக்தி செய்யும் எல்லாருக்கும் பரமனருள் கிடைப்பதில்லை.

அது பாவம் செய்யாதவர்களுக்கு மட்டுமே கிடைக்கிறது.

'உண்மையே தெய்வம்', 'அன்பே தெய்வம்' என்று இந்து மதம் சொன்னது அதனால்தான்.

'நம்பினோர் கெடுவதில்லை, நான்கு மறைத்தீர்ப்பு' உண்மை தான் 'கெட்டவன்' நம்பினால் அவனருள் கிட்டுவதில்லை.

அதுவும் உண்மை தான். காலங்களை நிர்ணயிக்கின்றவனும், வாழ்க்கையின் கதியையே உருவாக்குகின்றவனுமான பரம்பொருள், உன் வாழ்க்கைக்குப் பொறுப் பேற்றுக் கொள்ளவில்லை, ஆத்மாவுக்கே பொறுப்பேற்றுக் கொள்கிறான்.

மதத்துறையை 'ஆத்மார்த்தத் துறை' என்பது அதனால் தான்.

நதியின் ஓட்டம் பள்ளத்தை நோக்கியே; அந்த நாயகனின் ஓட்டமும் எளிமையான நேர்மையை நோக்கியே.

ஒன்று, அறியாமல் செய்யும் தவறுகள் பாபங்கள் அல்ல; அவை வெறும் தவறுகளே!

அவற்றுக்கு உடனே மன்னிப்பு உண்டு.

அறிந்து செய்யும் தவறு தவறல்ல; அது குற்றம். அதற்கு மன்னிப்புக் கிடையாது.

ஆண்டவனின் அவதாரங்களே கூட, அறியாமல் தவறு செய் திருப்பதாக வழக்குக் கதைகள் உண்டு.

ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி ஒரு முறை கங்கைக்கு குளிக்கச் சென்றார்.

அவரது அம்பறாத் தூணியில் ஒரே ஒரு அம்பு மட்டுமே இருந்தது.

அந்த அம்பைப்படுக்கை வசமாக வைக்கக் கூடாதென்ற மரபுப்படி அதைப் பூமியிலே குத்தி வைத்தார்.

'ஒற்றை அம்பை ஊன்றிவை' என்பது வழக்கு.

அம்பை ஊன்றிய ராமபிரான், கங்கையில் குளித்து விட்டுக் கரையேறினார்.

ஊன்றிய அம்பை எடுத்தார்.

அதில் ஒரு தேரைக் குஞ்சு குத்தப்பட்டிருந்தது. பூமிக்குள்ளிருந்த தேரைக் குஞ்சை அவர் அறியாமல் குத்திவிட்டார்.

தேரைக் குஞ்சு சாகும் தருவாயிலிருந்தது.

ராமபிரான் கண்கள் கலங்கி விட்டன.

"ஐயோ, தேரையே! நான் குத்தும்போது நீ கத்தியிருந்தால் காப்பாற்றியிருப்பேனே, ஏன் கத்தவில்லை?" என்றார்.

அதற்கு தேரை சொன்னது.

"பெருமானே! யாராவது எனக்குத் துன்பம் செய்யும் போதெல்லாம் நான் 'ராமா ராமா' என்று தான் சத்தமிடுவேன். அந்த ராமனே என்னைக் குத்துகிறார் என்னும் போது, யார் பெயரைச் சொல்லி ஓலமிடுவேன் ?"

ராமபிரான் கண்ணீரோடு சொன்னார்.

"தேரையே, என்னை மன்னித்து விடு. இது நான் அறியாமல் செய்த பிழை"

தேரை சொன்னது,

"பெருமானே! அறியாமல்

### கவிஞர் கண்ணதாசன்

செய்கின்ற பிழைகள் அப்பொழுதே மன்னிக்கப்படுகின்றன" என்று சொன்னது உன் வாக்குத்தானே?"

தேரையின் ஆவி முடிந்தது.

நான் பாவம் என்று குறிப்பிடும் போது, நீ அறியாமல் செய்த பிழைகளையெல்லாம் பாபக்கணக்கில் சேர்க்காதே.

சிறு வயதில் கடன் தொல்லை தாங்காமல் நான் 'திருடியிருக்கிறேன்'- என் தாயின் பணத்தைத்தான்.

திருடி விட்டு நிம்மதியில்லாமல் இருந்திருக்கிறேன்.

கடவுளை வேண்டியிருக்கிறேன் "இறைவா மன்னி" என்று.

அந்தத் தவறைக் கடவுள் மன்னிக்கவில்லை என்றால் இந்த வாழ்க்கையை எனக்கு அருளியிருப்பாரா?

என்னுடைய நண்பர்களில் என்னிடம் உதவி பெறாதவர் குறைவு.

உதவி பெற்றவர்களில் நன்றியுடையவர்கள் குறைவு.

என்னுடைய ஊழியர்களில் என்னை ஏமாற்றாதவர்கள் குறைவு.

ஏமாற்றியவர்களில் நன்றாக வாழ்கின்றவர்கள் குறைவு.

எழுத்தின் மூலமே சம்பாதித்தவர்களில் என்னைப் போல் சம்பாதித்தவர்கள் குறைவு.

சம்பாதித்ததை அள்ளி இறைத்ததில் என்னைப் போல் அள்ளி இறைத்தவர்கள் குறைவு.

இவ்வளவு அறியாமைக் கிடையிலேயும், ஏதோ ஒரு சுடர் ஒளி என்னைக் காப்பாற்றுகிறது.

ஏன் காப்பாற்றுகிறது? எதனால் அது என்னைக் காப்பாற்றுகிறது?

என் தாய் - தந்தை செய்த தருமங்களை நினைக்கிறேன்.

'தர்மம் தலைகாக்கும்' என்ற இந்துக்களின் பழமொழி எனக்கு நினைவுக்கு வருகின்றது. செய்த பாவம் தலையில் அடிக்கிறது - செய்த புண்ணியம் தலையைக் காக்கிறது.

ஆம் செய்த புண்ணியம் திரும்பி வருகிறது. புண்ணியம் என்பது, என்றும் எதிலும் நீ செய்யும் நன்றி!

பாபத்திற் முதற் பாபம் நன்றி கொல்லுதல்.

கஷ்டகாலத்தில் எனக்கு ஒரு ரூபாய் உதவியவரை நான் ஞாபகத்தில் வைத்துக் கைமாறு செய்திருக்கிறேன்.

அந்த நாயகன் அறிய நான் நன்றி கொன்றதில்லை.

ஆகவே பாவம் செய்யாமல் புண்ணியம் செய்து கொண்டே இறைவனைத் தியானித்தால் உன் வாழ்நாளிலேயே உனக்கொரு அதிர்ஷ்டம் காத்திருக்கிறது.

நான் தத்துவம் பேசவில்லை; அனுபவம் பேசுகிறது.

இந்துமதத்தின் ஒவ்வொரு அணுவையும் நான் உணர்வதற்கு எதையும் நான் படிக்கவில்லை.

சாதாரணப் பழமொழிகளும் அனுபவத்தில் அவற்றின் எதிரொலிகளுமே, இந்து மதத்தில் ஆழ்ந்த நம்பிக்கையை எனக்கு உண்டாக்கியிருக்கின்றன.

(தொடரும்)

அஸ்துமாவிற்கு பாவிக்கக் கூடிய மூலிகைகள்

★ ஆடாதோடை

அஸ்துமா நோயாளிக்கு வழங்கப்படும் அறிவுறுத்தல் ஆலோசனைகள், பராமரிப்புமுறைகள்.

இந்நோய் வருவதற்கு முன்

(தொடரும்)

# அஸ்துமா

### அஸ்துமாவிற்கு பாவிக்கக் கூடிய மூலிகைகள்

- ★ ஆடாதோடை
- ★ கரு ஊமத்தை
- ★ துளசி
- ★ கற்பூரவள்ளி
- ★ மொசுமொசுக்கை
- ★ தூதுவளை
- ★ பொன்னாங்காணி
- ★ தும்பைப்பூ
- ★ இன்பூரல்
- ★ மணத்தக்காளி

### அஸ்துமாவிற்கு பாவிக்கக் கூடிய பொதுவான சரக்குகள்

- ★ அதிமதுரம்
- ★ சித்தரத்தை
- ★ கண்டங்கத்தரி
- ★ இலவுங்கம்
- ★ சிறுதேக்கு
- ★ சுக்கு
- ★ திற்பலி மிளகு
- ★ தாளிச பத்திரி
- ★ திற்பலி மூலம்

### அஸ்துமாவிற்கு பாவிக்கக் கூடிய உணவுகள்

இட்லி, இடியப்பம், மிளகுப் பொங்கல், பாண், புழுங்கல் அரிசிச் சோறு, சூடான பானங்கள், கடல்மீன், பறவை இறைச்சி, பால் (சிலருக்கு தவிர்க்க வேண்டி வரும்)

### தவிர்க்கக் கூடிய உணவுகள்

தக்காளி, கத்தரி, பறங்கிப் பூசணி, வாழைத்தண்டு, தயிர், இளநீர், குளிர்பானங்கள், நண்டு, இறால், ஆட்டிறைச்சி,, பலாப் பழம் ,மாதுளம்பழம், கொய் யாப்பழம்.

### அஸ்துமா நோயாளிக்கு உடற் பயிற்சிகள்

இந்த உடற்பயிற்சிகள் அளவோடு நோயாளிகளுக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும். முக்கிய மாக கை, கால், கழுத்து, தலை, உடல், தளர்ச்சியுறச் செய்த லுடன் சுவாசப்பை உதர விதானம் நல்ல வலுவைப் பெறும்.

### அஸ்துமா நோயாளிக்கு சில யோகாசனங்கள்.

- ★ பசி மோத்தானரசனம்
- ★ விபரீத காரணி
- ★ சர்வாங்காசனம்
- ★ மத்சியாசனம்
- ★ சுவாசனம்
- ★ நாடி சுத்தி

இவ்வாசனங்களை நோயாளி முறையாகச் செய்து வந்தால் அஸ்துமாவில் இருந்து நிரந்த ரமாக விடுபட வாய்ப்புண்டு.

### சோனாபாத் என்கின்ற அனற் சிகிச்சை முறை.

முகம், தலை நீங்க மற் றைய பகுதிகளுக்கு மூலிகை தைலம் தடவி மின்சாரம் மூலம் உண்டாகும் அனற் அறையில் அஸ்துமா நோயாளியை குறிப் பிட்ட நேரம் இருக்க விட்ட பின் குளித்தல்.

## சித்தர் மருத்துவம்

### அக்கு பஞ்சர் சிகிச்சை முறை (Accupancture)

இது சீனா வைத்திய முறை. இரு உடல் குறிப்பிட்ட சில பகுதிகளில் உள்ள புள்ளிகளை ஊசி மூலம் துண்டி (Stimulation) சிகிச்சை அளித்தல்.

### அலோபதி சிகிச்சை முறை

இம் மருத்துவ முறையில் குளிகைகள் (Pills) பாணி (Syrups) உள்ளிழப்பான் (inhaler) என்பன பயன்படுததப்படுகின்றன. இவ்வகை மருந்துகளினால் உடனடி நிவாரணம் கிடைத்தா லும் பின்பு பக்க விளைவுகளை ஏற்படுத்தக் கூடியன.

### மனோவசிய சிகிச்சை முறை (Hypnotic Therapy)

மனநிலை பாதிக்கப்பட்ட நோயாளிகளிற்கு மனோவசிய சிகிச்சை மேற்கொண்டு அவர் களின் மனத்தாக்கத்தை நீக்கல்.

### ஹோமியபதி சிகிச்சை முறை

இவ் வைத்திய முறையில் மருந்துகள் எல்லாம் இனிப்புச் சுவையுடன் வீரியம் கூடிய மருந் துகள். இம் மருந்துக்கள் வாயி னால் உமியப்பட்டு உடலில் சேர்க்கப்படுகிறது. இவ் வைத் திய முறையில் பக்க விளைவு கள் இல்லை.

### அஸ்துமா நோயாளிக்கு வழங் கப்படும் அறிவுறுத்தல் ஆலோ சனைகள், பராமரிப்புமுறைகள்.

இந்நோய் வருவதற்கு முன் னரே காத்துக் கொள்ளத் தெரிய வேண்டும். இந்நோய்க்கு மருந் துகளை விட முக்கியமானது நோயாளியின் தற்காப்பு முறை களே.

- ★ காரணிகள்ளையும் துண்டு கோலையும் தவிர்த்தல்
- ★ உணவு விடயத்தில் கவனமெடுத்தல்
- ★ அவசரப்பட்டு எந்தக் காரியத் தையும் செய்வதைத் தவிர்த்தல்
- ★ உடற்பயிற்சி, விளையாட்டு கள் அளவோடு நிறுத்த வேண் டும்
- ★ சுவாசாயத் தொற்று ஏற்படாது பாதுகாத்தல்
- ★ தேகம் களைக்கும்படி வேலை செய்வதை தவிர்த்தல்
- ★ மனக் குழப்பம் ஏற்படாமல் பாதுகாத்தல்
- ★ யோகாசனம் பயிற்சி செய்தல் வேண்டும்
- ★ குழந்தைகளில் விஷேட கவனம் செலுத்தல் வேண்டும்.
- ★ சளியை இழக்கக் கூடிய மூலி கைகளை உணவில் சேர்த்தல் வேண்டும்.
- ★ நோயாளி மருந்துகளை பாவி க்கும் முறைகளைக் கடைப் பிடிக்க வேண்டும்.

Dr.(செல்வி)த.சபாரத்தினம்
சித்த மருத்துவப் பகுதி
யாழ் மாநகரசபை

# அண்ணல் காந்தியின்

**06**

ஆசைக்கு ஒரு பெண்ணாகப் பிறந்து அருமையாக வளர்க்கப்பட்டவள் கஸ்தூரி. எவ்வித துன்பமும் அறியாமல் வளர்ந்தவள். திருமணம் என்றால் ஆடிப்பாடி மகிழலாம், புதுநகை அணியலாம். புத்தாடை உடுக்கலாம், சிங்காரம் செய்து கொண்டு ஒய்யார வாழ்க்கை நடத்தலாம் என்று தான் நினைத்திருந்தாள்.

வேடிக்கையாக இருக்கும் என்று நினைத்த இல்லறம் வேதனை மிகுந்ததாகவும் இருக்கும் என்று அவள் கண்டாளா? பாவம்! 'ஏன் பெண்ணாய்ப் பிறந்தோம்?' என்று கூட சில சமயம் அலுத்துக்கொண்டாள். அப்பப்பா! மூன்று வருட ங்களில் எத்தனை வித் அனுபவங்கள்!

ஆனால் ஒரு வகையில் அவள் கொடுத்து வைத்தவள் தான்.

'மாமியார் என்றால் கொடுமை புரிபவள்' என்று கேள்விப்பட்டிருந்த கஸ்தூரி, புட்லிபாயின் நல்ல குணத்தைப் பார்க்கும் போதெல்லாம் தன்னையறியாமல் நன்றிக் கண்ணீர் பெருக்கினாள். நகைகளையெல்லாம் களைந்து, உள்ளும் புறமும் நிலவிய தூய்மைக்குச் சான்றாக, தூய வெள்ளாடை உடுத்து அந்தப் புனிதவதி சந்நியாசினி கோலத்தில், ஒழுக்கத்தின் உறை விடமாய், தியாகத்தின் திருவுருவாய் வீட்டில் நடமாடிக் கொண்டிருப்பதைப் பார்த்த கஸ்தூரி, தான் அந்த வீட்டுக்கு நாட்டுப் பெண்ணாக வந்தது முன் பிறவியில் செய்த புண்ணியம் தான் என்று நினைத்துக் கொள்வாள்.

புட்லிப்பாய் அடிக்கடி கஸ்தூரியின் அருகில் வந்து அமர்ந்து ஆறுதல் மொழி கூறுவாள். பெற்ற குழந்தையைப் பறி கொடுத்து விட்டுப் பரிதவிக்கும் 'இந்தக் குழந்தையிடம் அவளுக்கு அத்தனை ஆதங்கம். நடந்து போனதைப் பற்றி தன் நாட்டுப் பெண் நினைக்கக் கூடாது என்பதற்காக எதைப் பற்றி யெல்லாமோ பேசுவாள். ஆனால் அவளை அறியாமலே 'அந்த விஷயத்தைப் பற்றி ஏதாவது சொல்லி விடுவாள். "நடந்ததை நினைத்துக் கொண்டு ஏங்காதே! பிறப்பும் இறப்பும் நம் கையில் இல்லை.உன் உடம்பைப் பார்த்துக்கொள். ஆயுசோடு இருந்தால் எத்தனை வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாம்" என்பாள். 'உடம்பைப் பார்த்துக் கொள்;' என்று மாமியார் அடிக்கடி சொன்ன தன் 'உள் அர்த்தம்' அவளுக்கு மிக நன்றாகப்' புரிந்தது! மோகன் தாசுக்குப் புரிய வேண்டுமே!

கரம்சந்த் காந்தி மறைந்து ஒரு வருடம் ஓடிவிட்டது. இந்த ஓராண்டுக் காலமாக கஸ்தூரி தனியாகத்தான் இருந்தாள். மோகன்தாஸ் 'மெட்ரிகுலேஷன்' படிக்க ஆமதாபாத் சென்றிருந்

தத்தா மாதிரி திவான் பதவிக்கு வரவேண்டும்" என்று நெஞ்சார வாழ்த்தினாள் அந்த அன்புத் தாய்.

அருகில் இருந்த அண்ணன் லட்சுமிதாஸ், இளையவனை இறுகத் தழுவிக் கொண்டார்.

"ஏன் அழறே? நாலு வருஷங்கள் தானே. பணத்தைப் பற்றிகவலைப்படாமல் கவனமாகப் படி. பணத்திற்கு நான் எங்கேயாவது ஏற்பாடு செய்கிறேன்" என்று அவர் சொன்னதைக் கேட்டதும் தந்தையின் நினைவு வந்தது மோகன்தாசுக்கு. சகோதரன் காலிலும் விழுந்து எழுந்தான். பிறகு மனைவியிடம்

விடக் கூடாது.' தர்ம சங்கடமான நிலை அவளுடையது.

தாயின் தவிப்பை உணர்ந்து கொண்ட அந்த உத்தம மைந்தன், அவள் உள்ளம் குளிர, விரதம் பூணுவதென்று உறுதி கொண்டான். ஜைன சுவாமிகள் ஒருவர் முன்னிலையில், பெற்றவளுக்குப் பெருமை தேடித் தரும் வகையில் சபதம் செய்தான்.

'மது அருந்த மாட்டேன்
மாமிசம் உண்ண மாட்டேன்
மங்கையரைத் தீண்ட்
மாட்டேன்.

இது சத்தியம், சத்தியம், சத்தியம்' புட்லிபாயின் பெரும்

அவரிடம் அவமரியாதையாக நடந்துகொள்ளும் பழக்கம் மோகன்தாசிடம் கிடையாது.

"மோகன், உன்னை இங்கிலாந்துக்கு அனுப்ப வேண்டியது என் பொறுப்பு. அப்பா இருந்தால் எப்படி நடக்குமோ அப்படி உனக்கு ஒரு குறையும் இல்லாமல் 'நான் பார்த்துக் கொள்கிறேன். நம்மிடம் பணம் இல்லாமல் இருக்கலாம். தகப்பனார் தேடி வைத்துள்ள மதிப்பும் மரியாதையும் நிறைய இருக்கிறது. யாராவது உதவி செய்வார்கள். போ, நீ புறப்பட வேண்டியதற்கான ஏற்பாடுகளைச் செய்" என்று அவர் உறுதியளித்தார். அதைக் கேட்ட மோகன்தாஸ் உணர்ச்சி வசப்பட்டான். இந்த உருக்கமான காட்சியைப் பார்த்து கஸ்தூரி உளம் நெகிழ்ந்தாள்.. அவள் கன்னங்கள் நனைந்தன.

கப்பல் ஏறுவதற்கு பம்பாயகுச் சென்ற மோகன்தாசுக்கு மற்றொரு சோதனை காத்திருந்தது. அங்கு பனியா வகுப்பைச் சேர்ந்தவர்கள், கடல் கடந்து வெளிநாடு செல்வது மதத்திற்கு விரோதமான செயல் என்று கூறி மோகன்தாசை சாதியை விட்டு விலக்குவதென்று தீர்மானித்து விட்டார்கள். சாதிக் கட்டுப்பாட்டுக்கு பயந்து தன் குடும்பத்தார் தன்னை இங்கிலாந்து போக அனுமதிக்கமாட்டார்கள் என்றே பயந்தான் அவன். ஆனால் லட்சுமிதாஸ் உறுதி குலையவில்லை, நிலை தடுமாறவில்லை. "சாதியாவது, மதமாவது. சென்று வா தம்பி, வென்று வா!" என்று ராஜ் கோட்டிலிருந்து தந்தி கொடுத்தார். உடன் பிறந்தவன் துணையிருக்கும் போது சமூகத்தின் உருட்டல் மிரட்டலுக்கு அவன் ஏன் பயப்படவேண்டும்! பதினெட்டு வயது இளைஞன் புறப்பட்டுவிட்டான் இங்கிலாந்தை நோக்கி. துறை முகத்தைத் திரும்பிப் பார்த்தான். விடைகொடுத்து அனுப்ப அங்கே தாயும் இல்லை, சகோதரனும் இல்லை, தாலி கட்டிய மனைவியுமில்லை ஒரு கணம் "நான் அனாதையாகி விட்டேன்" என்ற எண்ணம் அவ



# கஸ்தூரி திலகம்

போனான். பேசாமலே கண் ஜாடையாலேயே விடை பெறறான். ஏனோ இருவருக்கும் பேச நா எழவில்லை. தான் மீண்டும் கருவுற்றிருப்பதைக் கணவனிடம் கூற வேண்டும் என்று துடித்தாள் அவள்.ஆனால் கூறவில்லை. நாணம் தான் தடுத்திருக்க வேண்டும்!

முதல் வருடம பரீட்சை முடிந்து விடுமுறைக்கு வந்தவன், மீண்டும் கல்லூரிக்குப் போக விரும்பவில்லை. பேராசிரியர் ஆங்கிலத்தில் பாடம் நடத்தியதை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. வேறு படிப்பு ஏதாவது படிக்கலாம் என்று தோன்றியது அவனுக்கு.

தம் கண்ணீராய்ப் பெருக்கெடுத்து ஓடியது. மாமியாரின் நிலையைக் கண்ட கஸ்தூரிக்கு, அன்று மாமனார் கண்ணீர் மல்கிய காட்சி மனக் கண் முன்னால் தோன்றியது. தன் கணவர் சத்திய நெறியின் சின்னமாய், வானளாவி நிற்கும் தேவனாகக் காட்சி தந்தார்.கண்மூடி, கைகூப்பிக் கும்பிட்டவளின் கன்னங்கள் நனைந்தன.

தாயின அனுமதி கிடைத்து விட்டால் போதுமா? இங்கிலாந்துக்குப் போய் மூன்று வருடங்கள் படிப்பதென்றால் பணம் வேண்டாமா? மோகன்தாசுக்கு ஒரு யோசனை தோன்றியது. கஸ்தூரி சீதனமாகக் கொண்டு

னுக்கு. தோன்றியதோ என்னவோ, துயரம் நெஞ்சையடைக்க, அழுதே விட்டான். வருங்காலத்தில் குடும்பப்பற்று மெள்ள மெள்ளக் குறைந்து, மக்கள் குலத்தின் தனித் தலைவன் ஆகப் போகிறவன் இப்போதே தனிமையில் விடப்பட்டு

**பரணீதரன்**

விட்டானோ?

ராஜ்கோட்டில் கஸ்தூரி, கப்பலைப் பற்றியும் துறைமுகத்தைப் பற்றியும் ஏதேதோ

## சிந்தனையாளரின் சுவையான அனுபவங்கள்

### தாங்குவது யார்

ஒரு தடவை பண்டிதமணி கதிரேசன் செட்டியார் திருவாவடுதுறை ஆதீனத் தலைவரைச் சந்திக்கச் சென்றிருந்தார்.

கதிரேசன் செட்டியார் ஆதீனத் தலைவரைத் தாழ்ந்து வணங்கியபோது கால் நழுவிக் கீழே விழப்போனார்.

அதைக் கண்ட ஆதீனத் தலைவர் சட்டென எழுந்து கதிரேசன் செட்டியாரைத் தாங்கிப் பிடித்தார்.

கதிரேசன் செட்டியார் மறுபடியும் ஆதீனத்தலைவரை வணங்கி, 'சுவாமி எல்லாம் இயல்பாகத் தான் நடந்திருக்கிறது' என்றார்.

'இயல்பாக என்ன நடந்தது' என ஆதீனத்தலைவர் விளங்காமல் கேட்டார்.

'என்னைப்போன்ற அடியவர்கள் தவறுவதும், தங்களைப் போன்ற ஆன்மீகப் பெரியவர்கள் தவறியவர்களைத் தாங்கி வழி நடத்துவதும் இயல்புதானே? அது தான் இப்போதும் நடந்திருக்கிறது என்று விளக்கம் சொன்னார். கதிரேசன் செட்டியார். ஆதீனத் தலைவர் மகிழ்ச்சியுடன் புன்னகை செய்தார்.

### ஞாபக மறதி விஞ்ஞானி

விஞ்ஞான மேதையான எடிசன் ஒரு தடவை பாஸ்டன் நகரத்துப் பெண்கள் பள்ளிக்கூடத்தில் சொற்பொழிவாற்ற ஒப்புக் கொண்டிருந்தார்.

குறித்த நேரத்தில் அவர் வந்து சேராததைக் கண்ட பள்ளி நிர்வாகிகள் அவரைத் தேடிக் கொண்டு புறப்பட்டனர்.

அவரை எங்கெங்கோ தேடிய பிறகு ஒரு நண்பர் வீட்டின் மொட்டை மாடியில் அமர்ந்து ஏதோ ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார்.

அவரைத் தேடிச் சென்றவர்கள் அவரைச் சந்தித்து அன்று அவர் பாஸ்டன் நகரப் பெண்கள் பள்ளியில் சொற்பொழிவாற்ற ஒப்புக் கொண்டிருந்ததை நினைவுபடுத்தினர்.

'ஆ... மறந்தே போய் விட்டேன். இப்பொழுதே உங்களுடன் வருகிறேன்' என்று எடிசன் புறப்பட்டுவிட்டார்.

பாஸ்டன் பெண்கள் பள்ளியை அடைந்து மின்சக்தி பற்றி மிகவும் அற்புதமாகச் சொற்பொழிவாற்றி மாணவிகளையும் ஆசிரியைகளையும் பிறரையும் மகிழ்வித்தார்.

எடிசன் அப்போது கசங்கிப் போன அழுக்கான உடையை அணிந்திருந்தார்.

'ஒரு நல்ல ஆடையை அணிந்து வந்திருக்கக் கூடாதா?' என்று ஒருவர் வினவினார்.

'அது ஒரு தவறல்ல. என்னைத் தேடிக்கொண்டு வந்தவர்கள் இந்த விஷயத்தை எனக்கு நினைவுபடுத்தத் தவறிவிட்டனர்.' என்று எடிசன் சிரித்துக் கொண்டே கூறினார்.

தம்' அவளுக்கு மிக நன்றாகப் புரிந்தது! மோகன் தாசுக்குப் புரிய வேண்டுமே!

கரம்சந்த் காந்தி மறைந்து ஒரு வருடம் ஓடிவிட்டது. இந்த ஓராண்டுக் காலமாக கஸ்தூரி தனியாகத்தான் இருந்தாள். மோகன்தாஸ் 'மெட்ரிகுலேஷன்' படிக்க ஆமதாபாத் சென்றிருந்தான். 'அதென்ன படிப்போ, எதற்காகபடிக்கிறாரோ?' ஒன்றும் அவளுக்குப் புரியவில்லை. அதைப் பற்றி அவள் கவலைப்படவும் இல்லை.

ஓரிரு முறை ராஜ்கோட்டிற்கு வந்து போனான் மோகன்தாஸ்! இப்போதெல்லாம் அவனிடம் அத்தனை விளையாட்டு த்தனம் இல்லை. ஆனால் அவள் மீது அவனுக்கிருந்த ஆசை அணு அளவும் குறைந்ததாகத் தெரியவில்லை.

"படிப்பு முடிந்து விட்டதா?" என்று ஒரு நாள் கேட்டாள் கஸ்தூரி கணவரிடம்.

"படிப்புக்கு முடிவே கிடையாது கஸ்தூரி; நான் அடுத்தபடி கல்லூரியில் சேரப் போகிறேன். பவநகருக்குப் போகப் போகிறேன்."

"எத்தனை வருஷம்?"

"நாலு வருஷம். பி.ஏ.படிக்கப் போகிறேன்.நீயும் வருகிறாயா?"

"பி.ஏ.படிக்கவா?" என்று கேட்டு விட்டு, களுக்கென்று சிரித்தாள் அவள். அவள் குமிழ்ச் சிரிப்பில், செவ்விதழ் குளுமையில் சிந்தையைப் பறி கொடுத்தான் மோகன்தாஸ்.

கஸ்தூரி எண்ணிக் கொண்டாள். 'அதென்ன படிப்போ, ஓயாத படிப்பு! படிக்கா விட்டால் இந்த உலகில் வாழவே முடியாதா?'

கல்லூரியில் சேருவதற்காக பவநகர் புறப்படுமுன் மோகன்தாஸ் புட்லிபாயின் காலில் விழுந்து வணங்கினான். "நன்றாகப் படித்து, உங்க அப்பா,

முடிந்து விடுமுறைக்கு வந்தவன், மீண்டும் கல்லூரிக்குப் போக விரும்பவில்லை. பேராசிரியர் ஆங்கிலத்தில் பாடம் நடத்தியதை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. வேறு படிப்பு ஏதாவது படிக்கலாம் என்று தோன்றியது அவனுக்கு.

புட்லிபாய்க்கோ தன் கடைசி மகனாவது நிறையப் படித்து முன்னுக்கு வரவேண்டும், நிறைய சம்பாதித்து கஷ்டப்படும் குடும்பத்திற்கு உதவ வேண்டும் என்ற ஆசை.

அந்தக் குடும்பத்திற்கு ஆதரவாகவும் ஆலோசகராகவும் இருந்த ஜோஷி என்ற அந்தணர், மோகன்தாஸ் சட்டப் படிப்பு படிக்க வேண்டும் என்று புட்லிபாயிடம் எடுத்துச் சொன்னார். உள்ளூரில் சட்டம் படிப்பதை விட, மோகன்தாஸ் இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்று வருவது தான் நல்லது என்றும் யோசனை கூறினார். மோகன்தாஸ் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான். புட்லிபாயும் ஒப்புக் கொண்டாள். ஆனால் மதத்திலும் ஆசாரத்திலும் ஆழ்ந்த பற்றுக் கொண்ட அந்த அம்மையார், மகன் வெளிநாடு செல்வதைப் பற்றி கவலை கொண்டாள். அங்கு போகிறவர்கள் கெட்டு சீரழிந்து விடுகிறார்கள், திரும்பி வந்ததும் நம் பண்புக்கும் ஒழுக்கத்திற்கும் விரோதமாக நடந்து கொள்கிறார்கள் என்று பலர் கூறக் கேட்டிருக்கிறாள் அவள். மோகன்தாஸ் மீது அவளுக்கு நம்பிக்கை இல்லாமல் இல்லை. இருந்தாலும் போகும் இடமும், பழகும் நண்பர்களும் மகனைக் கெடுத்து விட்டால்? புதுமையில் மோகங் கொள்ளும் இளமைப் பருவமாயிற்றே! 'மகன் திவானாக வேண்டும். பரம்பரை தொடர வேண்டும். ஆனால் ஒழுக்கம் கெட்டு

நனைந்தன.

தாயின அனுமதி கிடைத்து விட்டால் போதுமா? இங்கிலாந்துக்குப் போய் மூன்று வருடங்கள் படிப்பதென்றால் பணம் வேண்டாமா? மோகன்தாசுக்கு ஒரு யோசனை தோன்றியது. கஸ்தூரி சீதனமாகக் கொண்டு வந்த நகைகள் இருக்கும் போது என்ன கவலை? கணவனுக்கு உபயோகப் படாத சொத்து மனைவிக்கு எதற்கு?

"கஸ்தூரி நான் இங்கிலாந்து போய் பாரிஸ்டர் பட்டம் பெற்று வரப் போகிறேன்."

"போய் வாருங்கள்."

"அதற்குப் பணம் நிறையச் செலவாகும். ஐந்தாயிரம் ரூபாய் தேவைப்படும்."

"ஓகோ."

"யாரையும் கடன் கேட்க எனக்கு மனமில்லை.உன் நகைகளைக் கழற்றிக் கொடு. மூவாயிரம் ரூபாய் விலை போகும். மீதியை அண்ணா எங்கேயாவது ஏற்பாடு செய்து வாங்கிக் கொடுத்து விடுவார்.

"என் நகைகளையா? ஐயோ இது தானே நம்மிடம் உள்ள சொத்து. அதை எதற்கு விற்க வேண்டும்?"

"என்ன! உன் கணவன் முன்னுக்கு வரவேண்டும் என்று ஆசை உனக்கு இல்லையா."

"ஏன் இல்லை? எந்த மனைவிக்குத்தான் இருக்காது?"

"எனக்கு உதவாத நகை உனக்கு எதற்கு? என் மேல் உனக்கு அன்பும் ஆசையும் இருந்தால்..."

மோகன்தாஸ் கூற வந்ததை முடிக்கவில்லை.அதற்குள் வெளியிலிருந்து லட்சுமிதாசின் குரல் கேட்டது."டேய்,மோகன் இங்கே வா.அவளை அழ விடுவதே உனக்கு வேலையாகப் போய்விட்டது!"

அண்ணன் அழைத்துவிட்டார்.

பரணிதரன்

விட்டானோ?

ராஜ்கோட்டில் கஸ்தூரி, கப்பலைப் பற்றியும் துறைமுகத்தைப் பற்றியும் ஏதேதோ கற்பனை செய்து கொண்டிருந்தாள்.பம்பாய்க்குச் சென்று கணவனை வழியனுப்ப வேண்டும் என்று அவளுக்குக் கொள்ளை ஆசைதான். என்ன செய்வது, நான்கு மாதக் கைக் குழந்தையை எடுத்துக் கொண்டு எப்படிப் போவது?

பேரனுக்கு ஹரிலால் என்று பெயர் வைத்திருந்தாள் பாட்டி. 'மோகன் தாசையே உரித்து வைத்திருக்கிறான்.பொல்லாதவன், பிறந்ததும் அப்பனை ஊரை விட்டே விரட்டிவிட்டான்' என்று சொல்லி, அவனை ஓயாமல் கொஞ்சிக் கொண்டிருந்தாள் அவள். கணவனை ப்றி கொடுத்த துக்கத்தயும், மகனைப் ப்ற்றிய கவலையையும் கொஞ்சம் மறக்கடித்தான் அந்த மழலைச்செல்வன். நீந்தினான், தவழ்ந்தான், உட்கார்ந்தான், நின்றான், நடை பயின்றான், 'தத்தி தத்தி' நடந்தான். வீட்டுக்குள் ஓடினான். ஒரு நாள் வீதிக்கே ஓடிவிட்டான்! வீட்டில் குழந்தையைக் காணாது பாட்டிக்குக் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. 'குழந்தையைக் கூடப் பார்த்துக் கொள்ளாமல் அப்படி எனன செய்யறே?' என்று கஸ்தூரியை கடிந்துகொண்டாள் புட்லிபாய். பெற்றவள் பதறித் துடித்தர்ள். 'தலைச்சன்' பறிபோனது ஏனோ அவளுக்கு அப்போது நினைவுக்கு வந்தது! ஒரு கணத்தில்.

*(தொடரும்)*

வந்திருக்கக் கூடாதா?' என்று ஒருவர் வினவினார்.

'அது ஒரு தவறல்ல. என்னைத் தேடிக்கொண்டு வந்தவர்கள் இந்த விஷயத்தை எனக்கு நினைவுபடுத்தத் தவறிவிட்டனர்.' என்று எடிசன் சிரித்துக் கெண்டே கூறினார்.

## காந்திஜிக்கு வேலை கிடைக்கவில்லை

காந்திஜி பாரிஸ்டர் பட்டம் பெற்று இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்த சமயம்.

தமக்காக ஒரு வேலைக்கு அவர் அலைந்து கொண்டிருந்தார்.

அந்த சமயம் ஒரு செய்திப் பத்திரிகையில் விளம்பரம் ஒன்று வெளியாகியிருந்தது.

செல்வந்தர் ஒருவர் இல்லத்தில் ஒருவருக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுக்க ஆள் தேவை: மாத சம்பளம் 75 ரூபாய்' என்று விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.'

காந்திஜி அந்த வேலைக்காக விண்ணப்பித்திருந்தார்.

நேரடி பேட்டிக்கு வருமாறு அவருக்கு 'அழைப்பு வந்திருந்தது.

வேலை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையுடன் காந்திஜி அங்கே விரைந்தார்.

காந்திஜியின் கல்வித் தகுதிச் சான்றிதழ்களை வாங்கிப் பார்த்த செல்வந்தர் குடும்பத்தினர் 'அடேயப்பா பாரிஸ்டர் பட்டம் பெற்றிருக்கிறீரே உம்மைப் போன்ற பெரிய படிப்பாளி எங்களுக்கு வேண்டாம்.சாமானிய பீ.ஏ பட்டதாரி இருந்தால் போதும்' என்று கூறி அவரை அனுப்பிவிட்டனர்.

காந்திஜீ மிகுந்த ஏமாற்றத்துடன் வீடு திரும்பினார்.

### கணனியின் சிரிப்பு!
உன் அம்மாவின்
கருவறையில்
சுருண்டு கிடந்த
நீ - இன்று
என் மல்டி மீடியாவில்
பாட்டு அல்லவா
கேட்கிறாய்!

ஆ.டினஸ்ராஜ்

### கண்ணில் தெரியும்!
எண்ணம் எல்லாம்
எண்ணில் வியக்க
வைக்கும் திண்ணம்!
மண்ணில் புதுமை
தேடிக் காண்பாய்
விண்ணில் வாழ
வழியும் செய்வாய்.

அம்பிகை
மீசாலை.

### வேற்றுமை!
நீ மடியில் விளையாடி
மண்ணில் விளையாடி
மரத்தில்
விளையாடினாய்
நான்
கணனியிலே
விளையாடுகிறேன்.

T.டிலோசனா
மறவன்புலோ

### மெய்ஞ்ஞானம்!
இளங்கொழுந்தே
கேளாய்!
குளோனிங்கில் தோன்றி
இணையத்தில் உலாவி
மின் வெப்பத்தில்
மறைந்தது
என விஞ்ஞானம்
தொடரலாம்
மெய்ஞ்ஞானம்
ஒன்றுதான்!

பொன்னி வாசன்
யாழ்ப்பாணம்

### சொல்லுக!
கைகளிரண்டும் தூக்கி
களிப்பதெதற்கு?
கணனி வலைக்குள்

### பேபி.கொம்!
கலியுகம் மாறி
கம்பியூட்டர் யுகத்தில்
அம்மா.கொம்மில்
அன்பான வாழ்த்தும்
அப்பா.கொம்மில்
அப்பா, யுத்தநிறுத்தம்
திரும்பிருங்கள் தாயகம்
திரும்பவும்
நிம்மதியாக வாழ்வோம்.

ராகுல்

### அருளினை வேண்டி நிற்கின்றேன்!
கூட்டுத் தாபன ஒலிபரப்பினிலே
நாட்டமுடனே அப்பாவின் பணியை
நானும் தொடர்ந்து சேவை செய்யவே
ஒலி வாங்கி யதனை அணிந்து
அமர்ந்துள்ளேன்
ஆண்டவன் அருளினை
வேண்டிநிற்கிறேன்.

கவிஞர்
கந்த முருகேசதாசனார்

### கணனியுகம்!
மழலை மொழி பேசும்
வயதில்
இம்மழலையோ கணனி
மொழி பேசுகின்றது இது
கணனியுகம் என்பதால்.

கிருஷ்ணானந்தன்
கொக்குவில் மேற்கு

### கணனியை கற்றுவிடு!
கணனியைப் பார்த்து
கலகலப்பாக இரு
இப்பொழுதுகணனியைக்
கற்கா விட்டால்
கதி கலங்குவாய் எப்பொழுதும்

K.M. ராஜ்
ஈச்சமோட்டை

### நாளைய உலகம்!
குழந்தாய்!

### வெற்றி!
ஓ ! இளம் மனிதா!
விந்தைபுரியும்
விஞ்ஞானத்தால்,
பலதையும் வென்று
விட்டாய்!
ஆனால் உன்
மரணத்தைத் தவிர.

பொய்கை
தலையாழி.

### மனிதத்தைத் தேடுகிறாயா?
நன்றி கெட்ட மனிதத்தினுள்
மரணித்துப்போன மனிதத்தை
வலைப் பின்னலினூடாக
வலைபோட்டுத் தேடுகிறாயா?

K.அனுசியா
தாவடி.

### கண்மணியின் சிரிப்பு!
ஏன் இந்த பூரிப்பு
பிஞ்சு வயதிலே...
கணனி உன்கைக்கு
வந்து விட்ட தென்றா.

வே.மயூரன்
யா.உ.ம.வி

### மறந்துவிடு!
கணனியுடன் விளையாடி
காலிழந்தான் உன்
அண்ணன்
கணனியுடன் விளையாடி
கவலைகளை மறந்து
விடு.

ஏ.விஜயன்
பாஷையூர்

### தற்காலம்!
முன்னொரு காலத்தில்,
பாவை விளையாடிய கை,
பானை சட்டி விளையாடிய கை
தற்காலத்தில்,
கணனி விளையாடுகிறது -
இது
காலமாற்றம்.

அ.சிவானந்தன்
சுழிபுரம் மேற்கு.

### கற்றிட வந்தேன்...!

## மௌனத்தின்

### பாசப் பிணைப்பு!
அப்பாவோ வேலைக்கு
அம்மாவோ கிளப்பிற்கு
அறியா மழலை இவள்
அனுப்பிய செய்தியதை
அறிவதற்காய்
கணனியதில்
அலசுகின்றாள்
கண்டுவிட்டாள் போலும்
கை விரிக்கின்றாள்
பாருங்கள்.

சு.வத்சலா,
அத்தாய்

### உலகின் செல்வம்
விஞ்ஞானத்தின் வித்துக்கள்
முளைத்திடும் மொட்டுக்கள்
வென்றிடும் சிட்டுக்கள்
உலகின் செல்வங்கள்

சி.கலாராணி
பண்ணாகம்

### பிஞ்சின்
மிளிர்ந்த மிலேனி
ஆண்டுகள் சில
பிஞ்சின் கரங்களி
கணனியின் புதுயு
மெல்லென தவழ்
எழுந்து நடந்திடு



### எதிர் கால மன்னன்!
மொழி எதுவுமே
அறியாதவயதில்
கணனி மூலம் உலக
நாடுகள்
எல்லாவற்றுடனும்
தொடர்பு கொண்டு
"பேச்சு வார்த்தைக்கு"
மத்தியஸ்தம் வகிக்க
அழைக்கும் இக்
குழந்தையின்
செயலிலும் என்ன
பொறுப்புணர்ச்சி
இவன் "எதிர்கால
மன்னன்"

ச.தமிழினி
வழக்கம்பரை

### இயந்திர உறவுகள்!
இயந்திர கதியில்
உறவுகள்
இயங்குவதால்
இயந்திரத்தோடுதான்
இம்மழலையின்
உறவுகளும்.

ஆனந்தன்

### புன்னகையா பூக்கிறாய்....?
ஏ சிறு குழந்தாய்
இந்த மனிதர்களை விட
கொம்பியூட்டர் உனக்கு
இன்பத்தைத் தருகிறதுஎன
எண்ணிப் புன்னகை
செய்கிறாயா!

B.கோபிகா
நல்லூர்

### கம
அன்னை மடியி
கிலு கிலுப்பை
பொழுதைக் க
அந்தக் காலம்
மேசையில் இ
கம்பியூட்டர் ப
பொழுதைக்
இந்தக் காலம்

### சொல்லுக!

கைகளிரண்டும் தூக்கி
களிப்பதெதற்கு?
கணனி வலைக்குள்
உலகப்பந்தைக்
கைப்பற்றிக் கொண்ட
காரணந்தானோ?
மெல்ல முகந்திருப்பிச்
சொல்லுக எமக்கும்.

*ச.சார்ங்கா*
*சங்கத்தானை*

### விஞ்ஞானத்தின் விந்தை!

மழலையே நீ கூட கம்பியூட்டிரோடு
தோழனாகஉறவாடிக்கொண்டிருக்கும்
அளவுக்கு – இன்றைய யுகம்
கம்பியூட்டர் யுகமானதுவோ?

*அ. பிரதீபா*
*நாவலர் வீதி.*

### இளந்தளிரே!

கம்பியூட்டர் காலமதில்
காலடியெடுத்து வைத்து
புதுயுகம் படைக்க
புதுப்பொலிவுடன்
புறப்பட்டுவிட்டாயா?

*எ.றஜீவ்*
*யாழ்ப்பாணம்*

### நாளைய உலகம்!

குழந்தாய்!
கண்களைத் திறக்கும் போதே
கணனியைக் கற்றுக் கொள்!
இல்லையேல்...
நாளைய உலகம் உனக்கு
விழி இருந்தும்
இருளாகவே இருக்கும்.

*எஸ். சித்தார்த்தன்*

### எதுவோ அது?

நவ யுகத்தை ஆட்டிப்படைக்கும்
சிந்தனைப் பேழை எது ?
மழலைகளையும்
தன்வசம் ஈர்க்கும்
அற்புதக் கணனி தான் அது.

*யோ.பிரஷாந்தி*
*யாழ்.பல்கலைக்கழகம்*

### புதிய உலகம்!

இரத்தக் களரியும்
ஜாதியும் மதமும்
முன்னேறிவிட்ட
இவ்வுலகம்
வேண்டாமென்று
புதிய உலக மொன்றை
உருவாக்கப்
போகின்றாயா?

*தமிழ் ஸ்டெனோஸ்,*
*யாழ்ப்பாணம்*

*அ. சிவானந்தன்*
*சுழிபுரம் மேற்கு.*

### கற்றிட வந்தேன்...!

''எதிர்காலம் எல்லாம்
கணனிக்குள்ளே என்பதை
உணர்ந்ததனால்
கவனமாக கணனிப் பாடம்
கற்றிடவே நானும்
வந்தேன்''

*இ.அ.அமலரட்ணம்*

### என் வாழ்த்துகள்!

தகவல் தொழில் நுட்பத்தை– நீயும்
தயவாய் கற்றுக்கொள்ள
கம்பியுட்டரை நாடிவிட்டாய் –
அதற்கு
கரம் கூப்பியென்
அன்பானவாழ்த்துக்கள்.

*என் திருச்செல்வம்*
*மட்டுவில் வடக்கு,*

### கை தேர்ந்திட்டான்!

பாப்பா மலர்
படிக்க முன் பாலனிவன்
'பாரைக் சுருக்கி விட்ட,
கணனியில் கைதேர்ந்திட்டான்!

*ச.முகுந்தன்*
*இணுவில் கிழக்கு*

இயங்குவதால
இயந்திரத்தோடுதான்
இம்மழலையின்
உறவுகளும்.

*ஆனந்தன்*
*வியாபாரிமூலை*

### கருவில்.......!

இளந்தளிரே,
நீ கருவில் இருக்கும்
போதேஉன் தாய்
கணனியின்
முக்கியத்துவத்தை
உனக்கு
கூறிவிட்டாளோ!

*எஸ்.கவிஷனா,*
*இமையாணன்.*

### குழந்தைப் பருவம்!

யுகங்கள் வேகமாகச் செல்ல
இலத்திரனியலோ அதை
விட வேகமாக செல்ல
இதையாக்கும் மனித
மூளை
ஓய்வின்றி இயங்க
ஆயுள் தான் போதாது
அதற்காகத்தானோ
குழந்தைப் பருவத்திலும்
மனிதன் இயங்கத்
தொடங்கிவிட்டான்.

*ஈஸ்வரன்*

எண்ணிப் புன்னகை
செய்கிறாயா!

*B.கோபிகா*
*நல்லூர்*

### வாழ்வு தரும்!

உலகமே மூழ்கிய
இன்ரநெற்றில்
இக் குழந்தையும்
தன் வாழ்வுக்காய்
தன்னை அர்ப்பணித்து
விட்டது!

*சி.இன்பராஜ்*
*கொடிகாமம்.*

### படைத்திடுவோம்!

காலத்தின் போக்கினிலே
ஞாலமெலாம் கணனி மயம்
வேகமாய் நாகரிகமும்
வெற்றி நடைபோடக்
கபடமில்லாச் சிறு பயலே நீ
கம்பியூட்டர் அடிக்கிறாயா?
சின்னஞ்சிறுவரெல்லாம்
சீக்கிரமாய் கணனி கற்று
சிறப்பான எதிர்காலம்
செம்மையாய்ப் படைத்திடுவோம்

*தி.மயூரகிரி*
*யாழ்.இந்துக் கல்லூரி*

பொழுதைக்
இந்தக் காலம்

எ

பொம்மைக் குட்டி
அன்புக் கரம்
கணனி ஆளியை
எதற்காகவடா? பி
ஞாலத்தை வென்
தமிழனின் சாதனை
நிலை பெறச் செ

எதை

நூறு வயதினி
பாதி வயதினி
பிஞ்சு வயதி
கணனியில் அ

க

அன்று நான்
மணலினிலே
இன்று நீ தப்
கணனியிலே

# ...ின் தேடல்கள்

### பிஞ்சின் கரங்களில்!

மிளிர்ந்த மிலேனியத்தில்
ஆண்டுகள் சில ....... கரைய
பிஞ்சின் கரங்களில்......
கணனியின் புதுயுகம்
மெல்லென தவழ்ந்து
எழுந்து நடந்திடும்.

ப. தசினி,
சங்குவேலி தெற்கு.



### கம்பியூட்டர்!

அன்னை மடியில் இருந்து
கிலு கிலுப்பை தட்டி
பொழுதைக் கழிப்பது
அந்தக் காலம்
மேசையில் இருந்து
கம்பியூட்டர் பட்டினைத் தட்டி
பொழுதைக் கழிப்பது
இந்தக் காலம் ஐயா!

க. அனித்தா,
இணுவில்.

### விளையாட்டு!

அம்புலி கேட்டு
அடம் பிடித்தது
அந்தக் காலம்
கொம்பியூட்டர் கேட்டு
அடம் பிடிப்பது
இந்தக் காலம்.

சு.சிவலோகநாதன
பாஷையூர்

### நாயகன்!

இளம்பூவே
புதுயுகம் படைத்திட
பூத்தமலர் நீயென்று
புரிகிறது உலகிற்கு -உன்
புதுமையானவளர்ச்சிகண்டு
நாளைய! உலகம் போற்றும்
நாயகன் நீ என்றே.

இ.ம.கவிக்குயில்
உடுவில்

### இன்றே!

எதிர்கால
கணனியுக சவாலை
சமாளிக்க இன்றே.......
தயாராகி விட்டேன்!

எஸ்.மதி
திக்கம்

### துன்பத்தை விரட்டிட..!

எத்தனை எத்தனை
சாதனை புரிந்தனர்
கணனியைக் கண்டவர்கள்
கண்கெட்ட துன்பத்தை
விரட்டிட ஒரு கணனியைக்
காணாரோ!

சி.சிவகுமார்
வடக்கு மிருசுவில்

### பச்சிளம் பாலகா!

கள்ளங்கபடம் சூதுவஞ்சனை
ஏதுமறியா பச்சிளம் பாலகா
கருவிகள் பொருத்தி
கணனியிலே
என்னடா பார்க்கிறாய்
கண்ணே
விஞ்ஞான உலகையா?

தி.தவநாதன்
கவிஞர் மூளாயூர்.

### வாழ்வின் தேவை!

சின்னஞ் சிறுவர்கள் நாம்
சிறு வயதினிலே
காலத்தின் தேவைக்காய்
கணனிப் பாடம் தன்னை
காலம் தாழ்த்தாது
ஆர்வத்துடன்
கற்றிடுவோம் இப்போதே!

சி.பூதன்,
சிறுவையூர்.

### வேறுபாடு!

நீ கணனியில் "மௌஸ்"
பிடிக்கிறாய்"
நாம்களனியில் "மௌஸ்"
பிடிக்கிறோம்
இதுதான் வன்னிக்கும்
கணனிக்கும் வேறுபாடு!

கு.சிவநேசன்,
யாழ்.பல்கலைக்கழகம்

### கருவினிலும் கற்கலாம்!

கல்விக்கோர் கரையில்லை
கற்பதற்கு வயதில்லை
கணனிக் கல்வியைத்
தூண்டவா கணனியுடன்
உள்ளாய்? ~ தாயின்
கருவினில் கூட கணனியைக்
கற்கலாம் போலிருக்கே?

M.ஸ்ரீ
உரும்பிராய்

### வளரும் முதல்படி!

வளரும் பயிரை
முளையில் தெரியும்
வளரும் பிள்ளையை
செய்கையில் தெரியும்
முடியும் என்ற நோக்கு
முன்னேற்றத்தின் முதல்படி.

நா.மகேந்திரலிங்கம்.

### அன்றும் இன்றும்!

மண்சோறு காய்ச்சி,
மகிழ்ந்திருந்த அக்காலம்
போய்
"மௌஸ்" உடன் விளையாடி
மழலையிவள் மகிழ்கின்றாள்.

S.மதி,
அத்தாயூர்.

### சிந்தி!

கணனி யுகத்தில் பிறந்த -நீ
தரமான சிந்தனையால்
உயர்வடையப்பார் -உன்
சிந்தனையைத் தடுக்கும்
மனித சிந்தனையின்
வெளிப்பாடு உது.

ஞானி,
யாழ் பல்கலைக்கழகம்

### ஏ சிறு பையனே!

நீ ஏன் மகிழ்கின்றாய்
ஓ ! இந்த சிறு வயதிலே
உலகைக் கண்டு விட்டேன்
என்ற எண்ணம் உனக்கு
வந்துவிட்டது போலும்.

B. சங்கீதா,
திருநெல்வேலி

### மழலையே-------!

ஓ மழலையே - உலகில்
உதித்ததும்
உலகின் உண்மையைப்
புரிந்து கொண்டாயோ
உலகின் மாற்றத்தை
புரிந்து
புதுமை படைக்க
ஆயத்தமாகின்றாயா?

முல்லை முருகன்.

### புதிய பழமொழி!

கணிதம் அறியாத்வன்
எதுவும் அறியான்! - என்பது
பழைய பழமொழி
கணனி அறியாத்வன்
எதுவும் அறியான்! - இது
புதிய பழமொழி

எம்.எஸ்.ஷால்டர்,
சமரபாகு

### இருந்தவாறே.....!

குழந்தாய் ! நீ
நடைபயிலத்
தேவையில்லை
ஏன் தெரியுமா?
இருந்தவாறே தரிசிக்கப்
போகிறாய் இவ்வுலகை.

வே.கலைச்செல்வி
கோ.ஆ.ப.கலாசாலை

### இன்று!

வானத்தை பார்த்து
பாட்டியிடம் நிலா
கேட்டது
அன்று
பட்டினைத் தட்டி
கணனியில் நிலா
கேட்டது இன்று

சி.ஜீவன்ராஜ்,
சென் ஜோன்ஸ் கல்லூரி

### காதலா!

பெற்ற குழந்தை மீது
அன்னைக்கு காதல்
அழகுப் பெண்மீது
ஆடவனுக்கு காதல்
கம்பியூட்டர் மீது
இப் பிஞ்சுக்கு காதலா..!

ஆதி
நாவலர் வீதி

# மௌனத்தின் தேடல்கள் - 07



...ப்பீடு!

கம்பியூட்டர் பட்டினைத் தட்டி
பொழுதைக் கழிப்பது
இந்தக் காலம் ஐயா!

*க.அனித்தா,*
*இணுவில்.*

*சி.சிவகுமார்*
*வடக்கு மிருசுவில்*

## எதற்காக?

பொம்மைக் குட்டியை தொட வேண்டிய உன்
அன்புக் கரம்
கணனி ஆளியை தொடுகுதடா!
எதற்காகவடா? பிஞ்சு மகனே!
ஞாலத்தை வென்று
தமிழனின் சாதனையை
நிலை பெறச் செய்யவா?

*வே.தரணிகா*
*மருதங்கேணி.*

## ஒப்பீடு!

இவன் விழிகளிலோ
மின்னல்
இவன் மனதிலோ
துள்ளல்
இவனிடம் இல்லையொரு
இன்னல்
இவன் அறிவுதேடும்
செம்மல்

*புரட்சி நேசன்,*
*வதிரி.*

## எதை தேடுகிறாய்...?

நூறு வயதினில் சாவை தேடுகின்றோம்
பாதி வய்தினில் வாழ்வை தேடுகின்றோம்
பிஞ்சு வயதில் எதை தேடுகின்றாய்
கணனியில் அன்பு மகனே..?

*வி.வி.அகிலன்*
*யா.ஹாட்லிக்கல்லூரி*

## கணனியிலே!

அன்று நான் தவழ்ந்து விளையாடியதோ
மணலினிலே
இன்று நீ தட்டி விளையாடுவதோ
கணனியிலே

சூர்யா,
இணுவில்

## *புனித பூமி தேடுகிறாயா?*

ஏய் குழந்தாய்!
அம்மா சொல்லத் தெரியாத
வயதில்
அளப் பெரிய கணனியிலே
அப்படி என்ன ஆராய்ச்சி?
ஓ......
உனக்கும் எங்கள் பூமியின்
கேவலம் எல்லாம் தெரிந்து
விட்டதா? அதனால்
புதிய பொருளில் புனித பூமி
தேடுகிறாயா?

*வி.மயூரதாஸ்,*
*வராத்துப் பளையூர்*

## மௌனத்தின் தேடல்கள் - 07



**அன்பின் வாசகர்களே, உங்கள் எண்ணத்தில் தோன்றும் உன்னத வெளிப்பாடுகளை மிகச்சிறிய கவிதைகளாக்கி தபால் அட்டையில் சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.**

**முடிவுத் திகதி :~ 14.04.2002**

**அனுப்பவேண்டிய முகவரி:~ மௌனத்தின் தேடல்கள்~07**
**சங்குநாதம்,**
**15, வெள்ளாந்தெரு,**
**யாழ்ப்பாணம்.**

# நாகலிங்கப் பூ

நீரை அள்ளி அள்ளி மேலெங்கும் ஊற்றியதில் நேரம்போனது தெரியவில்லை. வெப்பத்துக்கு மேலாக மனம் சூடாகியதில் குளிர்ந்த நீர் கூட அவளுக்கு அடங்கவில்லை.

"வெய்யிலுக்கால் வந்து போட்டு ஏன் மோனதண்ணீக்க நிற்கிறாய்" அம்மம்மாவின் குரல் அவளை இவ்வுலகத்திற்கு கொண்டு வந்தது. சாப்பிடவும் மனம் வரவில்லை. அங்கே அந்த சென்றிப் பொயின்றில் கண்டது அவன் தானா....' ஒரு பத்து வருட இடை வெளியானாலும் மறக்க முடியாத அந்த முகம் மாறனுடையது தான். சற்றுச் சிவந்து மொழுமொழுவென அடர்ந்த மீசையும் நிமிர்ந்த உடல் வாகுமாய் கையில் பாஸ் போட்டைப் பிடித்தபடி நின்றவன், பெண்கள் சோதனைச் சாவடிக்குள் நுழைந்த இவளைக் கண்டிருக்க முடியாது.

பத்மா கட்டிலில் சரிந்தாள். மாறினின் நினைவுகள் பின் நோக்கி ஓட மூடிய கண்களுக்குள் அவன் சிரித்தான். மறக்க வேண்டுமென்று நினைத்து நினைத்து மறக்க முடியாமல் தவித்து தவித்து மனதை முடக்கிய அந்த நாட்கள்.....

பள்ளிக் கூடம் என்றும், இடப்பெயர்வு என்றும், குடும்பத்தில் ஏற்பட்ட இழப்பாலும் அவன் மறக்கப்பட்டு விட்டாலும் அந்தக் காயத்தின் வடு அடிமனதில் இருந்து எப்பாவது வலியெடுக்கும்.

யாழ்ப்பாணம் நவீன சந்தைக்குள் நுழைந்தால் ஒரு உறவுப் பாலமே தொடரும். அக்கா வாங்கோ, அண்ணா வாங்கோ, அன்ரி, அங்கிள் என அன்பொழுக அழைப்பதில் போட்டி போடுவார்கள். அப்படி ஒரு புடவைக் கடையில் தான் அவனை முதன் முதலில் பத்மா சந்தித்தாள். களைக்காமல் களைத்து போகுமளவிற்கு சலிக்காமல் புடைவைகளை எடுத்து பரப்பினான். எதுவுமே பிடிக்கவில்லை. கூட வந்த தோழி வேறு கடைக்குப் போகத் திரும்பினாள். ஆனால் பத்மா அவனுக்காக எதையாவது ஒன்றை எடுக்க வேண்டும் போல தயங்கினாள். இறுதியில் ஒரு புடைவையை எடுத்து கொண்டு திரும்பினாள்.

'என்ன இருந்தாலும் இவங்களுக்கு மகா பொறுமை தான்' என்று தோழி கூறினாள்.

உயரமான அழகான அவனது விநயமான பேச்சு உள்ளத்தை விட்டகல பல நாட்கள் பிடித்தன.

அப்பொழுதெல்லாம் கோயில் திருவிழாக்காலம் ஊரே களைகட்டும். பாரம்பரியக் கலைகள் இரவிரவாக மேடையேறும். கூத்து நாடகம், வில்லிசை, கதாகாலட்சேபம், இசை நிகழ்ச்சி, மேளக்கச்சேரி என விடிய விடிய விழித்திருப்பதில் தனிச்சுகம். அதிலும் நம்பிராஜ

விட்டன. இருள் சூழ்ந்த அந்த காரவாழ்வில் புகுந்து வளரத் தொடங்கிய போது அண்ணனின் இழப்பும், அதைத் தொடர்ந்து வந்த துயரமும் அந்தக் குடும்பத்தை கண்ணீர்க் கடலு

முடிவெடுத்தான். தம்பி இந்தப் படங்களில் ஒன்றைப் பார்த்து முடிவைச் சொல்லு. அம்மா கொண்டுவந்த படங்களை அவனால் பார்க்க முடியவில்லை. "அம்மா நான் யாழ்ப்பாணம்



அமிழ்த்தி விட அவனது நினைவும் அழிந்து போனது.

அந்த கறுப்பு நாட்களுக்குப் பின் மீண்டும் இன்று ஒரு ஒளிக் கோடு போல அவனின் நினைவு ஓரிருநாட்கள் தனிமையில் சந்தித்த சம்பவம் - அவன் கடிதங்களில் இறங்கிய சுகம், தினமும் எப்போது விடியும் எனக் கழிந்த பொழுதுகள், உள்ளத்துள் மட்டும் மலர்ந்து மணம் வீசிய உயர்ந்த அன்பு.. அவளது காதலை அவன் நாகலிங்கப்பூ போன்றது என எழுதுவான். அழகாக மலர்ந்தும் தலையில் சூடவோ, மாலையாக்கவோ முடியாமல் தெய்வீக மணத்தைப் பரப்பும் அந்தப் பூவை அவளுக்கு அடிக்கடி நினைவு படுத்தி எழுதுவான்.

இன்று ஒரு நாகலிங்கப் பூப்போல சிவந்து மினுமினுப் பேறிய கன்னமும் சற்று ஊதினாற் போன்ற தோற்றமுமாய் அவன் நின்ற தோற்றம்... புதிய உயர்வை

போக வேணும்' அங்க ஒருத்தரும் எங்கட ஆக்களில்லை அத்தோட நீ சுவிஸ் திரும்ப மூன்று கிழமை கிடக்குது. அதுக்கிடையில் சம்பந்தம் ஒப்பேற வேண்டும். அம்மாவுடன் அப்பாவும் சேர்ந்து கொண்டார்.

"போய் விரைவில் வந்துவிடுவேன் என விடாப்பிடியாகப் போய் நண்பன் சிவா வீட்டில் நின்றான். பத்மாவுக்குத் திருமணமாகவில்லை. அண்ணன் காணாமல் போய்விட்டான். அவள் ஊரில் ஒரு பள்ளிக் கூடத்தில் கற்பிக்கிறாள் என்ற தகவல்களை சிவாவுக்குச் சொல்லியிருந்தான்.

யுத்த மேகங்கள் சூழ்ந்த அந்தநாட்கள் மறைந்து மக்கள் புதிய இயல்பு நிலைக்குட்பட்டு காணப்பட்டார்கள். இடப் பெயர்வோ, அதன் இழப்புக்களோ இன்றி வெளிநாட்டில் வாழ்ந்து திரும்பியவனுக்கு தற்போதைய

பார்க்கப் போகிறோம் என்ற ஆவல். சத்தம் கேட்டுவயதான ஒரு பெண்மணி வெளியே வந்தார். சிவா இரகசியமாக ஏதோ கேட்டான்.

அவள் மேலும் கீழும் பார்த்து விட்டு தலையை ஆட்டினாள். அவளைவிட மிகவயதான பெண்மணி விடுவிடுவென நடந்து வந்தாள். "ஆர் மோனை அது" வீதியில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த மாறனை திரும்பிப் பார்த்து விட்டு "பதமா ரீச்சரைச் சந்திக்கவேண்டும் என்றான் இரகசியமாக

"பிள்ளையோட படிப்பிக் கிறனீங்களா? தம்பி உப்பிடி இருங்க சொல்லுறன்"

வயது போய்விட்டாலும் உறுதி தளராத அவளது நடவடிக்கைக்கும், முதல் சந்தித்த பெண்மணிக்கும் நிறைய வித்தியாசமிருந்தது. மாறனையும் அழைத்துக்கொண்டு உள்ளே சென்று அமரவும்.

வெளியே வந்த பத்மாவைக் காண மாறன் திடுக்கிட்டான்! அவளும் அதிர்ச்சியடைந்தாள். எப்படி? எப்படி வந்தான் இரண்டு நாட்களுக்கு முன் கண்டது. இன்று நனவாகி அவளால் பேசமுடியவில்லை. இருவரது மௌனத்தையும் விடுவித்தான். மாறன் எதிர்பார்க்காத அதிர்ச்சி இது! பத்மா மெதுவாகச் சிரித்தாள். பலவிடயங்களையும் சிவாதான் சொல்லிக் கொண்டிருந்தான், சரி மாறன் நான் வெளியில் நிக்கிறன் நீங்க மனம் விட்டுக் கதையுங்கோ என்றபடி வெளியில் வந்தான். முற்றத்து மாமரத்தின் கீழ் அணில்கள் ஓடிப்பிடித்துக் கொண்டிருந்தன. "தம்பி" என்ற குரல் கேட்டுத் திரும்பினான். அந்த வயதான ஆச்சி வந்தாள் "நீங்கள் புதாக்களாக இருக்கு ஆரெண்டு விளங்கேல்ல......

வாங்கம்மா இருந்து சொல்லுகிறேன். மரக்குற்றியொன்றில் அமர்ந்து கொண்டாள்.

அது பத்மாவின் அம்மம்மா. குடும்ப நிர்வாகமே அவள் கையில் இருந்தது. தாயார் சித்த சுவாதீனத்துடன் காணப்பட்டாள். மாறன் பத்மாவை விரும்பியது, வெளிநாடு சென்றது, வந்தது. அவளைத்தேடி யாழ்ப்பாணம் வந்தது. எல்லாம் கூறி "உங்கட விருப்பம் என்னம்மா?" என்று நிறுத்தினான்.

பேசி வந்த திருமணங்களைத் தவிர்த்து இருந்த பத்மாவுக்கு ஒரு விடிவு காலம் வந்ததையிட்டு

பத்மாவின் முகத்தில் கோடி பிரகாசம் தெரிந்தது. சிரித்தபடி வழியனுப்பினாள். தினமும் மாலையில் மாறன் பத்மாவின் வீடு செல்லுவான்- அவன் கொழும்பு திரும்பும் நாளும் நெருங்கிக் கொண்டிருந்தது.

"பத்மா நான் கேட்ட விடயம் பற்றி என்ன முடிவு எடுத்திருக் கிறீர்?" "மாறன் உங்களை மீண்டும் சந்திப்பேன் என்று கனவிலும் நான் நினைச்சிருக்கேல்லை...

"ஆனா.. அவள் தயங்கினாள் என்ன பத்மா?"

எங்கட திருமணத்தின் பின் நான் உங்களுடன் வரவேண்டுமென்பது.......?

"என்ன பத்மா இது திருமணம் முடிந்த பிறகு என்னோட தானே நீர் இருக்கவேண்டும். அவன் சாதாரணமாக கூறினான்.

அவள் மௌனமானாள். உந்த வேலைக்கு முழுக்கு போட்டு விடும். என்னிட்ட எல்லா வசதியு மிருக்கு. கொழும்பில் வீடுமிருக்கு. நான் சுவிஸ்போய் வேலையை பொறுப்பேற்க வேண்டும். எனக்கு காட்கிடைத்து விட்டபடியால அங்கேயே தங்க முடியும்.

அவளின் கண் முன் அண்ணன் வந்து நின்றான். அவன் ஒரு நாள் வருவான் என்ற நம்பிக்கை.... அம்மாவின் நினைவு பழைய நிலைக்கு மாறும் என்ற நம்பிக்கை எல்லாவற்றுக்கும் மேலாக அம்மம்மா இவர்களை விட்டு விட்டு நான் போவதா?

முடியாது..... மனம் போராடியது. மாறனை மீண்டும் பிரிய முடியுமா?...... அவளது மௌனம் தொடர்ந்தது.

பத்மா நாளைக்கு எனக்கு முடிவு சொல்லும். அவன் போன பின் அம்மம்மா அவளை வற்புறுத்தினாள். "நாங்க இருப்பம் பிள்ளை எங்களைப் பற்றி யோசியாத எனக்கு தாத்தாவின்ர பென்சன் இருக்கு. அம்மாவை நான் பார்ப்பன் மாமா இருக்கிறான். அக்கம் பக்கத்தில் இனசன மிருக்கு... கிடைத்த அருமந்த வாழ்க்கையை விட்டுப் போடாதை"

அன்றிரவு முழுவதும் முடிவெடுக்க முடியாது புரண்டாள். இவனை இழந்தால் இனி வாழ்வே சூனியம். வசதியும் வாழ்வும் தேடிவந்துள்ளது. இந்தத்துயரச் சூழலில் இருந்தும் விடுபட முடியும். இரவு இரண்டு மணி தாண்டி விட்டது. அம்மா விளக்கை ஏற்றி அன்றைய பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தாள். ஒரு இடத்தில் விழிகள் குத்திட்டன. பத்மா எழுந்து வந்தாள். காணாமற் போனோர் பற்றிய விசாரணைக்கு அழைக்கப்பட்டவர்கள் பெயர்ப் பட்டியலைப் பார்த்துக் கொண்டிருந்தாள். "அம்மா படுங்கோ"

திருவிழாக்காலம் ஊரே களைகட்டும். பாரம்பரியக் கலைகள் இரவிரவாக மேடையேறும். கூத்து நாடகம், வில்லிசை, கதாகாலட்சேபம், இசை நிகழ்ச்சி, மேளக்கச்சேரி என விடிய விடிய விழித்திருப்பதில் தனிச்சுகம். அதிலும் நம்பிராஜனின் தொடர்சொற்பொழிவென்றால் சனம் திரளும். பேச்சுவன்மையால் நகைச்சுவையால் எல்லோரையுமே கவர்ந்திழுத்துவிடுவார். அப்படியொரு நிகழ்வில் மீண்டும் மாறனைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. அவனும் அவளை இனங்கண்டு கொண்டான். அந்த நகைச்சுவைப் பேச்சை ரசித்து சிரிப்பை இருவரும் பரிமாறிக் கொண்டனர். அடிக்கடி கண்கள் சந்தித்து மீண்டன. புதுவித இன்பம் உள்ளத்தில் பொங்க ஊரின் எந்த மூலையில் நம்பிராஜனின் சொற்பொழிவென்றாலும் இருவரும் சந்திக்கும் களமாக அது இடம் பெற்றது. அவள் பல்கலைக் கழகம் செல்கையில் அவனின் தரிசனம் தொடர்ந்தது. தோழியொருத்தியின் உதவியுடன் கடிதங்கள் பரிமாறிய வேளை தான் விரைவில் கொழும்பு செல்லப் போவதாக குறிப்பிட்டிருந்தான். தினமும் தரிசித்த அவனைப் பிரிவதை அவளால் எண்ண முடியவில்லை.

காலம் நகர்ந்தது. திடீரென வந்த இடப் பெயர்வும் அதன் பின் சிதறிப்போன வாழ்வும் அவனை எங்கோ மறைத்து விட்டது. மீண்டும் ஊர் திரும்பியபோது கோயில்களில் கோட்டான்களும், கூகைகளும், எச்சம் குவித்திருந்தன. கலையும், விழாக்களும் எங்கோ அவனைப் போலவே மறைந்து

அவளுக்கு அடிக்கடி நினைவு படுத்தி எழுதுவான்.

இன்று ஒரு நாகலிங்கப் பூப்போல சிவந்து மினுமினுப் பேறிய கன்னமும் சற்று ஊதினாற் போன்ற தோற்றமுமாய் அவன் நின்ற தோற்றம்... புதிய உயர்வை தோற்றுவித்தது. பத்மா மீண்டும் அவனைச் சந்திக்கவில்லை.

## சிறுகதை

யுத்தத்தின் அடையாளங்கள் மெல்ல சீர்செய்யப்பட்டு, நகரம் பொலிவு பெறத் தொடங்கினாலும், இழந்தவற்றை ஈடுசெய்வது சிரமமாகவே இருந்தது. வெளிநாட்டில் இருந்து வந்த மாறனுக்கு இந்த நான்கு நாட்களும் ஒவ்வொன்றைப் பார்ப்பதிலே கழிந்து போனாலும் பத்மாவைத் தேடுவது அதைவிட பெரும் சிரமமாக இருந்தது. மாறன் தன் குடும்பக் கடமைகளுக்காக வெளிநாடு சென்றான். திடீரெனக் கிடைத்த ஒரு வாய்ப்பு அவனைத் தேடி வந்த போது அவளைத் தேடிச் செல்ல முடியாது போய்விட்டது. அங்கிருந்து தொடர்பு கொள்ள முயற்சித்த போது அவர்கள் இடப் பெயர்வால் முகவரி தொலைத்து நின்றார்கள். இரண்டு தங்கைகளையும் வெளி நாட்டுக்கு அழைத்துத் திருமணமும் செய்து கொடுத்தான். பெற்றோரும் கொழும்பில் தங்கிவிட அம்மாவின் பெண் பார்க்கும் படலம் தொடங்கியது. கொழும்பில் தற்செயலாக பத்மாவின் தோழியை சந்தித்தபோது தான் அவளது நிலை பற்றி அறிந்து கொண்டான். எப்படியும் யாழ்ப்பாணம் போகவேண்டும் என

யுத்த மேகங்கள் சூழ்ந்த அந்தநாட்கள் மறைந்து மக்கள் புதிய இயல்பு நிலைக்குட்பட்டு காணப்பட்டார்கள். இடப் பெயர்வோ, அதன் இழப்புக்களோ இன்றி வெளிநாட்டில் வாழ்ந்து திரும்பியவனுக்கு தற்போதைய சூழ்நிலை சாதாரணமாக வேறுபட்டது. அங்கிருக்கும் போது அவன் கேள்விப்பட்டதெல்லாம் நடந்துமுடிந்தவையாகி அப்படி ஒன்றுமே நடக்கவில்லை என்பது போல தென்படும் மாயைச்சூழல் அவனுக்கு வியப்பூட்டியது.

சிவா வேகமாக வந்தான்.

"மாறன் வெளிக்கிடு"

"எங்க?"

"வெளிக்கிடு ஒரு இடத்துக்குப் போகவேணும்". சும்மா ஓரிடத்தில் அடைந்து கிடப்பது சலிப்பைத் தந்ததால் எங்காவது போய் வருவதும் நல்லது என அவனும் தயாரானான். சிவாவின் ஹொண்டா அவனையும் ஏற்றிய படி பறந்தது.

சிவா இப்ப எங்க போறமெண்டு சொல்லன். மாறன் பொறுமையிழந்தான்.

"எங்கட பழைய சிநேகிதன் ஒருத்தனிட்ட போகிறோம் என்றான் சிவா. நகர்ப்புறம் தாண்டி உள்ளே வெகுதூரம் வந்தாயிற்று. சந்துக்கள் வழியே திரும்பி நீண்ட ஒடுங்கிய மண் வீதியில் ஓடிக்கொண்டிருந்த ஹொண்டா ஒரு சிறுகடையின் முன் நின்றது. சிவா இறங்கி கடைக்காரனிடம் ஏதோ கேட்டான். மீண்டும் சைக்கிளைத் திருப்பினான். மீண்டும் வீதிக்கு வந்து வேறு ஒரு மண்வீதியுள் நுழைந்து ஒரு பனையோலை யால் வேலியுள்ள வீட்டின் முன் நிறுத்தினான்.

மாறனுக்கு யாரைப்

அவளைத்தேடி யாழ்ப்பாணம் வந்தது. எல்லாம் கூறி "உங்கட விருப்பம் என்னம்மா?" என்று நிறுத்தினான்.

பேசி வந்த திருமணங்களைத் தவிர்த்து இருந்த பத்மாவுக்கு ஒரு விடிவு காலம் வந்ததையிட்டு அம்மம்மாவுக்குப் பெருமகிழ்ச்சி. ஆனால் இது நடக்குமா? பத்மா சம்மதிப்பாளா?

**செ.பவானி**

"அப்பனே! முருகா எங்கட பிள்ளைக்கு ஒரு வழி காட்ட வேணும்". அவள் கைகூப்பித் தொழுதாள். தம்பி பிள்ளை என்ன சொல்லுவாளோ தெரியாது. அண்ணன்காரன் காணாமல் போனதோட தாய்க்கு ஒரு மாதிரி வந்திட்டுது.

அண்ணனுக்கு என்ன நடந்தது? என்னவென்று சொல்ல நாங்கள். இடம் பெயர்ந்து திரும்பி வந்த பிறகு சாமான்களை எடுக்க சாவகச்சேரி போனபிள்ளை திரும்பி வரவேயில்லை. காணாமல் போனவைக்கு சங்கமிருக்காம். அதில பதிஞ்சு போட்டு அலையுறம். அதுக்குப் பிறகு தான் நல்ல மாதிரி இருந்த என்ர மகள் கதைபேச்சில்லாமல் போய் விட்டாள். கண்களில் பொங்கிய நீரை சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள். ஏற்கனவே தந்தையை இழந்த பத்மாவுக்கு இது பெருஞ் சோதனைதான்.

மாறனுக்கும் அவளுக்கும் திருமணம் நடந்தாலாவது இந்தக் குடும்பத்துக்கு ஆறுதல் கிடைக்கும் எனச் சிவா எண்ணினான். மனங்கொள்ளாத மகிழ்ச்சியுடன் இருவரும் வெளியே வந்தனர்.

...டிருந்தாள். ஒரு இடத்தில் விழிகள் குத்திட்டன. பத்மா எழுந்து வந்தாள். காணாமற் போனோர் பற்றிய விசாரணைக்கு அழைக்கப்பட்டவர்கள் பெயர்ப் பட்டியலைப் பார்த்துக் கொண்டிருந்தாள். "அம்மா படுங்கோ" எத்தனை விசாரணைகள், அலைச்சல்கள், அவன் எங்கே என்பது தெரியாது.

தானும் வீட்டை விட்டுப் போய்விட்டால் அந்தச் சூனிய நிலையை அம்மா எப்படி ஏற்றுக் கொள்வாள்.

அவள் மனதில் முடிவு தெளிவாகியது. மாறன் என்னை மன்னித்து விடுங்கள். உங்களுக்கு பெற்றோர் பார்க்கும் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு போங்கள்...... போய்விடுங்கள்.... அவன் இதை எதிர்பார்க்கவில்லை. மறுநாள் பயணம் எதைச் சொல்லி அவனைத் தேற்றுவது என்றில்லாமல் சிவா குழம்பினான். பத்மாவின் முடிவு அவன் எதிர்பார்க்காத ஒன்று. ஊரில் ஆதரவற்றுத் தவிக்கும் வயோதிபர் பட்டியலில் இவர்களைச் சேர்க்க அவள் தயாராயில்லை. தன்னுடைய நாகலிங்கப்பூ கருகிப் போனாலும் அந்த வாசம் என்றும் வீசிக்கொண்டேயிருக்கும் என அமைதிகொண்டாள்.

காணாமற்போனோர் பட்டியலில் மகனின் பெயரைத் தேடிக் கொண்டிருக்கும் அம்மா....... சதா முருகனைத் துணைக் கழைத்த படி சுழன்று நிற்கும் அம்மம்மா.... ஒரு கதையின் கதைபார்த்து விமர்சிக்கும் அயலவர்...... பள்ளிக்கூடம்..... பத்மா இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி விட்டாள்.

(யாவும் கற்பனை)



# மகளிர் உலகம்

## எல்லோரது எண்ணத்திலும்

### தூய்மை

கூடிய வரையில் சுத்தமான உடை உடுத்தி, சுத்தமான முகத்துடன், கனிவாகப் பழக முற்படுங்கள். தூய்மை எவரையும் எளிதில் ஈர்க்கும் என்பதில் ஐயமில்லை.

### சிநேகித மனப்பான்மை

நாம் சந்திக்கின்ற ஒவ்வொருவரிடமும் நாம் கற்க வேண்டிய மேன்மையான பழக்கம் ஏதேனும் இருக்கக் கூடும் என்ற எண்ணத்துடன் பிறரை அணுக வேண்டும். பார்க்கும் போதே இவளிடம் என்ன குறை கண்டு பிடிக்க முடியும் எனப் பார்த்தால், பேசினால், மற்றவர்கள் கிட்டேவர அஞ்சுவார்கள்.

### உதவுகின்ற தன்மை

மனித வாழ்க்கை மிகவும் அற்புதமானது. ஒவ்வொரு



நாளும் பிறருக்கு நம்மாலான ஒரு சிறிய உதவியை, பலன் கருதாது செய்ய முற்பட்டால் வாழ்க்கை எவ்வளவு அர்த்தமுள்ளதென விளங்கும்.

இக்கட்டான சந்தர்ப்பங்களில், எதிர்பாராத உதவி செய்ய முற்பட்டோமேயானால் உதவி பெறுபவர்களின் எண்ணத்தில் எத்தகைய உயர்ந்த இடம் பெறுகிறோம் என்பதை அனுபவத்தில்தான் உணர முடியும்..

### இனிமை

கனிவான, இதமான வார்த்தைகளை விட இனிமையானது எதுவும் இல்லை., கூடியவரை கடும்சொற்களை அறவே தவிர்க்கும் பழக்கத்தை வழக்கமாக்கிக் கொண்டால் வர்களாயினும் செல்வத்தில் தாழ்ந்தவர்களாயினும், பெரியவர்களைப் பணிவுடன் அணுகுவது அவசியம். உளமார நினைந்து பணிதல் - இதனால் எமக்கு எந்தவித நஷ்டமும் இல்லை.

### நெருங்குகின்ற தன்மை

ஒரு சிலரது குறைகளுக்கு நாம் நிவர்த்தி செய்யக் கூடிய நிலையிலோ, ஆலோசனை சொல்லக் கூடிய திறம் படைத்தவர்களாகவோ இருப் போம். அத்தகைய சூழ்நிலையில் அவர்களைத் தனிமையில் அழைத்து,

'என்னால் உனக்கு சந்தோஷம் ஏற்படுத்த முடியும் என்ற கவோ அறிவுரை பெறுவதற்காகவோ தங்கள் சொந்த வாழ்க்கையின், அந்தரங்கங்களை எவரேனும் எடுத்துரைத்தால் அவை நம்மிடமே ரகசியமாக இருக்க வேண்டும் நம்மால் வெளிவரக் கூடாது. இத்தகைய பண்பை வளர்த்துக் கொள்வது சிறிது கடினமானது என்றாலும் அசையாத நம்பிக்கைக்குப் பாத்திரமாகின்றவர்கள் அவருக்கு அந்தரங்க நண்பர்களாக ஆயுள் முழுவதும் நிலைத்து விடுகிறார்கள்.

இதுபோன்று இன்னும் வரவேற்கத்தக்க பண்புகள் எத்தனை யோ உள்ளன.மற்றவர்களிடம் அத்தகைய

## வாழைப்பழ ஜாம்



*தேவையான பொருட்கள்:-*

*வாழைப்பழம் - 7*
*சீனி - 200g*
*இஞ்சி - ஒரு துண்டு*
*ஏலக்காய் - சிறிதளவு*

செய்முறை:-

வாழைப்பழங்களின் தோல்களை உரித்து விட்டு சிறு சிறு துண்டுகளாக வெட்டி ஒரு பாத்திரத்தில் போட்டு, இஞ்சியின் தோலை அகற்றி மிகச்சிறிதாக வெட்டி அதில் போட்டு தேவையான தண்ணீர் விட்டு அடுப்பிலேற்றி கொதிக்க வைக்கவும்.

வெந்த பழத்துண்டுகளை எடுத்து ஒரு பாத்திரத்தில் நன்றாக மசித்துக் கூழாக்கிக் கொள்ளவும். சீனியையும், தண்ணீரையும் கலந்து பாகுத்தன்மை வரும் வரை காய்ச்சவும். பாகில் மசித்த கூழைக்கொட்டி, கிளறி கட்டியாகும் பாகத்தில் ஏலக்காய்ப் பொடியினைப் போட்டுக் கிளறி இறக்கவும். நன்றாக ஆறிய பின்னர் வாயகன்ற போத்தலில் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

*கோ.சுபேதா*

## திறமை தருவது மேன்மை



நம்மிடம் திறமை, படைப்பாற்றல், செயல்திறன், சிந்திக்கும் சக்தி ஆகியவை இணைந்திருக்கின்றன. இவற்றைத்தகுந்த முறையில் பயன்படுத்தினால் தலை நிமிர்ந்து தன்மானத்துடன் வாழமுடியும்.

நாம் வாழ்க்கை என்ற நல்ல நிலத்தைப் பெற்று இருப்பதனாலேயே திறமை என்றும் பச்சைப்பயிர் பசுமையாக விளைகிறது. அந்தப் பயிரைப் பாதுகாத்து உரம் போட்டு அதிலே அல்லும் பகலும் பாடுபட்டால் அறு வடை செய்ய முடியும்.

இதே போல நாமும் நல்ல திறமையைப் பெற்றிருப் பதனால். மட்டும் வெற்றியைப் பெற்றுவிட முடியாது. அவற்றைச் சிறந்த முறையில் பயன்படுத்தித் தெளிவாகச் செயற்படும் பொழுது தான் வெற்றியைப் பெற முடியும்.

நம்முடைய திறமையை உரிய முறையில் ஒழுங்காகவும் நேர்மையாகவும் வகைப்படுத்தி வளர்த்துக் கொள்ள வேண்டும். அதனை முழுமையாக வெளிப் கொண்டு மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். காலத்திற்கு ஏற்றபடி திறமையை உயர்த்திக் கொண்டே செல்லும் போது தான் வெற்றியைக் குவிக்க முடியும்.

நேரமும் சக்தியும் இருக்கும் போதே அறிவைப் பயன்படுத்திக் கொண்டு பக்குவமாக வாழ வேண்டும். வசதியுடனும், வளமுடனும் வாழத் திறமையையும், அறிவையும் உபயோகப்படுத்துவது அவசியம்.

வீசும் காற்றும், எழும்

# இனிப்பவராக...

கனிவான, இதமான வார்த்தைகளை விட இனிமை யானது எதுவும் இல்லை., கூடியவரை கடும்சொற்களை அறவே தவிர்க்கும் பழக்கத்தை வழக்கமாக்கிக் கொண்டால் சகிப்புத் தன்மை தானாகவே வளர்ந்து விடும் என்பது மறுக்க முடியாத உண்மை.

பேசா மடந்தையாக இருப்ப வர்களை எவரும் நெருங்க மாட்டார்கள்.

**புன்னகை மாறாமை**

எவ்வளவு களைப்போ, அலுப்போ இருந்தாலும் சந்திப்ப வர்களை மனந்திறந்த சிரிப்புடன் அணுகுவது வரவேற்கத்தக்க பழக்கம். பொன் நகையை விடப் புன்னகை முகத்திற்குப் பொலி வூட்டும். உடலிற்கும் வலு வூட்டும். நம்மை விட உயர்ந்த

இருப் போம். அத்தகைய சூழ்நிலையில் அவர்களைத் தனிமையில் அழைத்து,

'என்னால் உனக்கு சந்தோஷம் ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையில் தான் இதை உனக்குக் கூறுகிறேன் என்ப தைத் தெளிவாக கனிவாக, பொறுமையாக எடுத்துரைத்து, உதவ முற்படுங்கள். இது நெருக்கமான நட்புறவை உறுதிப்படுத்தும்.

**நம்பிக்கைக்குப் பாத்திரமாதல்**

நம்மிடம் மன ஆறுதலுக்கா

தும் நிலைத்து விடுகிறார்கள்.

இதுபோன்று இன்னும் வரவேற்கத்தக்க பண்புகள் எத்தனை யோ உள்ளன.மற்ற வர்களிடம் அத்தகைய காணும் போது மனதந்திறந்து வரவேற்பதுடன், திட்டவட்டமான முடிவுடன், முயற்சி செய்து அப்பழக்கங்களை வழக்க மாக்கிக் கொண்டோமேயானால் எல்லோருக்கும் இனியவராக என்றென்றும் விளங்குவோம் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை.

*கலா*

தெளிவாகச் செயற்படும் பொழுது தான் வெற்றியைப் பெற முடியும்.

நம்முடைய திறமையை உரிய முறையில் ஒழுங்காகவும் நேர்மையாகவும் வகைப்படுத்தி வளர்த்துக் கொள்ள வேண்டும். அதனை முழுமையாக வெளிப் படுத்தி மேன்மைப் படுத்துவதில் தான் வெற்றி அடங்கியிருக் கின்றது.

நம்முடைய வாழ்க்கை ஓடும் நீராக இருக்க வேண்டுமேயன்றி ஒடுங்கிய நீராய் இருக்கக்கூடாது. ஓடும் நீர் ஊருக்கே உபயோக மாக இருக்கும். தேங்கி நிற்கும் நீர் எவருக்கும் பயன்படாது.

இதே போல நம்முடைய திறமைகளை வளர்த்துக்

பக்குவமாக வாழ வேண்டும். வசதியுடனும், வளமுடனும் வாழத் திறமையையும், அறிவை யும் உபயோகப்படுத்துவது அவசியம்.

வீசும் காற்றும், எழும் அலையும் எப்பொழுதும் திறமையான மாலுமியின் பக்கமே இருக்கும் என்கிறார் ஆங்கில வரலாற்று ஆசிரியர் கிப்பன். இன்று உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் எல்லோருமே தங்களுடைய திறமையினாலேயே உருவான வர்கள் தான். வெற்றியின் திறவு கோல் திறமையே. திறமையைப் பயன்படுத்தா விட்டால் எந்தப் பயனும் ஏற்படாது.

நன்றி முத்தாரம்

## சோடாவா..... வேண்டாமே........



அடிக்கடி சோடா மற்றும் குளிர்பானங்கள் குடிக் கும் பழக்கும் இருந்தால் குறைத்துக் கொள்வது உங்கள் பற்களிற்கு நல்லது. இவ்வகைப் பானங்கள், குறிப் பாக சோடாஅமிலத்தன்மையை அதிகரிக்கச் செய்து பற்களின் எனாமலை தாங்கி பற்களில் ஓட்டை (Cavity) விழச் செய்கிறது. நீண்ட இடை வெளிக்குப் பிறகு அடுத்த சோடா குடிப்பதால் இந்தப் பிரச்சினை பெரும்பாலும் வராது. பற்களில் திரும்பவும் எனாமல் படிய நேரம் கிடைக்கிறது.

ஆகவே சோடா மற்றும் குளிர்பானங்களை அடிக்கடி குடிப்பதைத் தவிர்த்து பற்களைப் பாதுகாக்கலாம்.

**ச.ஆனந்தி**

## மிளகின் மருத்துவ பயன்கள்

வயிறு தொடர்பான நோய்களுக்கு மிளகு ஓர் அருமருந்தாகும். மிளகின் சில அத்தியாவசிய மருத்துவ உபயோகங்களை இங்கே காணலாம்.

சமையலில் முக்கிய இடத்தை வகிக்கும் மிளகு அதிக மருத்துவ குணம் கொண்டது. மிளகிலேயே வெள்ளை மிளகு, கறுப்பு மிளகு, வால் மிளகு, கெட்டி மிளகு என்று பல மிள்குகள் உள்ளன.

வாய்வு கோளாறினால் பலருக்கு தொடர்ந்து இடுப்பு பிடித்துக் கொள்ளும் அவர்கள் கவனிக்க..

மிளகு, பனைவெல்லம், சுக்கு பூண்டு தலா பத்து பத்து கிராம் எடுத்து அம்மியில் அரைத்து ஒரு கண்ணாடி போத்தலில் போட்டுவைத்துக் கொள்ளவும்

இதிலிருந்து தினம் சின்ன உருண்டை எடுத்து காலையில் விழுங்கி விட்டு சுடுநீர் குடிக்கவும். தொடர்ந்து 7நாட்களுக்கு சாப்பிடவும்.

**சளி இருமல்**

சளி, இருமல் உள்ளவர்கள் சிறிது மிளகு வெல்லம் எடுத்து இடித்து தூள் செய்து சாப்பிட்டு வர சளி இருமல் பறந்து போகும்

**தலைவலி தீர..**

ஒரு சிலருக்கு அடிக்கடி தலைவலி வந்து கொண்டே இருக்கும், அவர்கள் சிறிது மிளகு, கரிசலாங்கண்ணியை எடுத்து ஒன்றாக அரைத்து மைப்பதம் வந்தவுடன் வழித்து எடுத்துக் கொள்ளவும் இதை காலையில் வெறும் வயிற்றில் 21நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் தலைவலி பறந்தே விடும்

# மரண விளையாட்டு

## தொடர்கதை

### அங்கம் 06

**மாயவன்**

மகிந்த விஜயதுங்கா கிரவுண்டில் இறங்குவதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தான். அருகில் இருந்த போன் மெல்ல கிணுகிணுத்தது. அதை எடுத்து ''ஹலோ'' என்றவனின் முகம் மெல்ல மெல்ல கறுக்கத் தொடங்கியது.

''யார் இலங்கை கிரிக்கெட் அணித்தலைவன் மகிந்த விஜயதுங்கா தானே பேசுகிறாய்''

''ஓமோம் நீயார் என்று சொல்லவில்லையே'' என்றான் மகிந்த

''நான்யார் என்பது இருக்கட்டும் இன்று நீதானே ஓப்பினிங் ஆக இறங்கப் போகிறாய்

''ஆமாம் நான் தான் வழமை போல் இறங்கப் போகிறேன்''.

''வெரிகுட் ஆனால் இம்முறை வழமைக்கு மாறாக நீ முதல் பந்திலேயே அவுட்டாக போகிறாய்'' என்று, அத்துடன் போன் கட்டாகியது. 'ஹலோ ஹலோ'' என்று கத்தினான் மகிந்த.

பின்னர் மைதானத்திற்கு செல்ல அழைப்புவர, வந்த போன் கோலையே நினைத்த வண்ணம் மைதானத்தில் இறங்கினான மகிந்த விஜயதுங்கா.

பிச்சை அடைந்ததும் சுற்றும் முற்றும் பார்த்த பின்னர் கையில் இருந்த பாற்றை திருப்பி பார்த்து விட்டு பந்தை எதிர்கொள்ள தயாரானான்.

இங்கிலாந்து அணியின் சிறந்த வேகப்பந்து வீச்சாளன் யஸ்தீன் வேகமாக ஓடி வந்து கைகளை சுழற்றி பந்தை வேகத்தில் வீசினான். முதல் பந்தையே சிக்ஸ்ஸராக்க நினைத்த மகிந்த விஜயதுங்கா பாற்றை ஓங்கி வீசி பந்தை அடித்தான் அவ்வளவு தான்....

விளையாட்டு மைதானத்தின் ஸ்ரேடியத்தில் அமர்ந்திருந்த அத்தனை பேரும் ஏதோ பிரளயம் பார்த்தது போல் அலறினார்கள். முதல் தரத்தையே சிக்ஸ்ஸராக்க நினைத்த மகிந்த விஜயதுங்கா பந்தை ஓங்கி அடிக்க, அது பூகம்பம் ஏற்பட்டது போல் வெடிக்க, பல் துண்டுகளானான், கிரிக்கெட் கீப்பர் பிளெக் பலத்த காயங்களுக்கு உள்ளானான்.

மைதானமே எங்கும் தூள் பறந்தது. அம்புலன்ஸ்களும் போலீஸ்காரருமாக அங்குமிங்கும் விரைந்தார்கள். இலங்கை இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இறுதி டெஸ்ற் போட்டி தடைப்பட்டது. அத்துடன் இனிமேல் இலங்கை கிரிக்கெட் அணியுடன் எந்த நாட்டு கிரிக்கெட் அணியும் விளையாட முன் வராது என்ற எண்ணமும் உருவாகியது.

போலிஸ் டிப்பார்மென்ற் அவசரமாக கூட்டம் கூடியது. கூடியிருந்த ஒவ்வொரு அதிகாரிகளி டிருந்தார்.



''சம்பவம் நடந்த இடத்தில் ஒரு சிறிய தடயம் கூட கிடைக்கவில்லை. எதிராளிகள் மிகச் சாமர்த்தியமாக திட்டமிட்டு இந்த மாட்சை தடுத்துள்ளார்கள்.''

''ஆமாம் சார் வெடிகுண்டு பரிசோதனை நிபுணர்களின் அறிக்கையின் படி மாட்சில் பயன்படுத்தப்பட்ட பந்தில் தான் பொம்மை பொருத்தி மகிந்த விஜயதுங்காவை கொலை செய்திருக்கிறார்கள்'' என்றார் டி.எஸ்.பி.வரதராஜா.

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையில் எல்லா விளையாட்டு உபகரணங்களும் செக்கப் பண்ணிதானே அனுப்பியிருப் பார்கள். ஆகவே அதன் பின்பு தான் பந்து மாற்றப்பட்டுள்ளது. என்றான் தேவராஜ்.

''யார் இவ்வளவு துல்லியமாக திட்டமிட்டு கொலையை செய்திருப்பார்கள் ஒரு வேளை பாதாள உலககும்பல்களாக இருக்கலாம்.''என்றார் தேவராஜ்.

''சார் ஒருவேளை தீவிரவாதிகள் இந்த சம்பவத்தை நிகழ்த்தியிருக்கலாம்''. 'தீவிரவாதம்' புத்தகம் அவர்களை சீண்டியிருக்கலாம். என்று நினைக்கிறேன் என்றார் டி.எஸ்.பி வரதராஜன்.

★ ★ ★

சுறாங்கனி சுறாங்கனி மாலு தெத்த லனவா குனிந்து நின்று நெல்லுப் பொறுக்கும் நோனா என்று ஒரு ஸ்ருடன்ற் தொடங்க அந்த பஸ்ஸில் இருந்த அனைத்து ஸ்ருடன்ற்களும் கைகளை

கொண்டிருந்தார்கள். ஏறத்தாழ 40 ஸ்ருடன்ஸ் அந்த பஸ்ஸில் சென்றுகொண்டிருந்தார்கள்.

★ ★ ★

099 எமது முதல் ஒப்பரேஷன் வெரி சக்ஸஸ் ஆக முடிந்துவிட்டது. இனி எமது அடுத்த கட்ட நடவடிக்கையை தொடங்குவோம். அதற்கு முன் நாம் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக கட்டளைகளை பெறுவோம். என்று ராம் கூறிக்கொண்டு பரிப்கேசை திறந்து சட்டிவடிவ டிஸ்க் அன்ரெனா முதலிய அதிசக்தி வாய்ந்த ஒலிபரப்பு சாதனங்களை எடுத்து பொருத்தி வயர் லெக்ஸை எடுத்து தலைமை அலுவலகத்துடன் ,தொடர்பு கொண்டான்.

ஹலோ ஹலோ நான் 008 பேசுகிறேன்.

''எஸ் சொல்லு என்ன தகவல் என்று''

செய்வார்களோ தெரியவில்லை.

சரி ஸ்ருடன்ஸ் எல்லோரும் இறங்குங்கள். இந்த இடத்தில் எமது லஞ்சை முடித்துக் கொண்டு மீண்டும் புறப்படுவோம் என்று பிறின்சிபல் கூற ஒவ்வொரு ஸ்ருடன்ராக இறங்கினார்கள்.

சாரதியும் கொண்டக்ரரும் சீட்டாட ஒரு பக்கமாக சென்றார்கள். மன்னா எமது முதல் கட்ட நடவடிக்கை வெற்றிகரமாக முடிந்து விட்டது. இரண்டாவது நடவடிக்கையையும் இன்று நிச்சயம் நிறைவேற்றப்படும். மூன்றாவதாகஎன்ன நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்று வினாவினான் தளப்பதி கரீப்கான்.

தளபதி இப்போது இலங்கையில் இருக்கும் எமது வீரர்களை இரண்டாவது ஒப்பரேஷன் முடிந்த பின் இங்கு அழை பின்னர் இரு வழிகளில் நடவடிக்கை எடுப்போம். ஒரு புறம் கொழும்பு ஹணன் பாங்கை கொள்ளை அடிக்க சில வீரர்களை அனுப்பு.

அதேநேரம் இலங்கைக்கு ஆயுதங்களை ஏற்றிவரும் கப்பலில் வீரர்களை அனுப்பி அழித்துவிடு. இப்போது சுமார் 10கோடி ரூபாயுள்ள பிறவுண் சுகரை இலங்கைக்கு அனுப்பி அங்கு அதை சப்ளை பண்ண ஏற்பாடுகளை செய் என்றான் தீவிரவாதிகளின் மன்னன் அப்துல் ரகீம்.

''எஸ் தங்கள் கட்டளை படியே செய்கிறேன்'' என்றான் தளபதி.

★ ★ ★

ஓ.கே ஸ்ருடன்ஸ் இனி எல்லோரும் பஸ்ஸில் ஏறுங்கள் புறப்படுவோம். என்று பிரின்சிபல் கூற எல்லா ஸ்ருடன்ஸ்களும் பஸ்ஸினுள் ஏறினார்கள்.

பஸ் சாரதியும் கொண்டக்ரரும் பஸ்ஸினுள் ஏறினார்கள். ரைவர் சீற்றில் அமர்ந்து பஸ்ஸை ஸ்ராட் செய்தார். மீண்டும் ஸ்ருடன்ஸ் கோஸ்ரி வைக்க தொடங்க கொண்டக்ரிடம் இருந்து செல்ப்போன் குரல் கொடுத்தது.

எஸ் ரெட்றோஸ் லேர்ஸ் பஸ் கொண்டக்ரர் கூறினர்.

ஹொண்டக்ரர் நீயும் ...க்க போகிறது'' என்று அத்துடன் போன் கட்டாகிது.

''ஹலோ ஹலோ யார் பேசுவது'' என்று கொண்டக்ரர் காட்டு கத்தலாய் கத்தினார்.

சார். என்ன யார் போனில் பேசியது

ஏன் சார் போனில் பேசியவன் ஏதாவது மிரட்டினானா?

என்ற ஸ்ருடன்ஸ் ஒவ்வொருவரும் கேள்வி மேல் கேள்வியாக கேட்டார்கள். எல்லோரும் சிறிது நேரம் பேசாமல் இருக்கிறீர்கள்'' என்று கொண்டக்ரர் எரிந்து விழுந்தார்.

எல்லோரும் கப் சிப் என்று அமைதியாக ''பஸ்சில் பொம் வைத்துள்ளார்களாம்'' என்று குண்டைதூக்கி போட்டார்.

'என்ன பொம்மா? ஐயோ நாமெல்லாம் வெடித்து சிதறப் போகிறோமா? எங்கே வைத்துள்ளார்களோ என்று ஸ்ருடன்ஸ் பிரின்சிபல் எல்லோரும் கேட்க ரைவர் பஸ்ஸை நிறுத்த போனார். ஐயோ ரைவரே பஸ்ஸை நிறுத்த வேண்டாம். வேகம் குறைக்கப்பட்டாலோ அல்லது ஹியர் மாற்றினாலோ பொம் வெடித்து விடும் என்று ஹொண்டக்ரர் கூறிய படி வோச்சை பார்த்தார். சரியாக இன்னும் 3நிமிடங்கள் இருந்தது. பஸ்வெடிக்க செல்ப்போன்ன எடுத்து போலிஸ் டிபார்ட்மென்ருக்கு போன் பண்ணினார்.

எஸ் சார் இன்னும் த்ரீ மினிற்ஸ் இருக்கிறது பஸ் வெடிப்பதற்கு ..

''கமோன் க்யிக் ஸ்ருடன்ஸ் ரூர் போகும் பஸ்ஸில் பொம் வைத்துள்ளார்களாம். இன்னும் த்ரி மினிற்ஸில் பஸ் வெடிக்கப் போகிறது கிளம்புங்கள். 40 ஸ்ருடன்ஸ் பிரின்சிபல், கொண்டக்ரர், ரைவர் இவர்களை காப்பாற்றியாக வேண்டும்.

கடவுளே இன்னும் 2நிமிடங்களில் நாம் வெடித்து சிதறப் போகிறோம்''

பொலிஸ் ஜீப்புக்களும் பயிரோக்களும் விரைந்து கொண்டிருந்தன. கமோன் இன்னும் வன்மினிற்மோர் என்று இன்ஸ்பெக்ரர் பரத் கத்தினான்.

பைனாகுலரை எடுத்து பார்த்தான். பஸ் ஒரு புள்ளியாய் போய்க் கொண்டு இருப்பது தெரிந்தது. இன்னும் ஸ்பீற்றாக போங்கள் என்று கூறினான்.

30, 29, 28, 27, 26, என்று செக்கன்கள் குறைந்து கொண்டு வந்தது. பொலிஸ் ஜீப் பஸ்ஸை நெருங்கியது .இன்னும் பத்து செக்கன்ஸ் தான் இருந்தது.



சார் நாம் எமது முதல் ஒப்பரேசனை சக்ஸஸ்ஸாக முடித்து விட்டோம். இரண்டாவது நடவடிக்கையை தொடங்கலாமா? என்று கேட்டான் ராம்.

எஸ் நீங்கள் சம்பவ இடத்தில் ஒரு தடயத்தையும் விடவில்லையா?

''இல்லை ஒரு தடயத்தையும் விட்வில்லை''

''சரி அடுத்த நடவடிக்கையை எடுங்கள் ஆனால் அடிக்கடி எம்முடன் தொடர்பு கொள்ள வேண்டாம். நான் சொல்லும் நபர்கள் மூலம் வேண்டிய உதவிகளை பெறுங்கள். மூன்றாம்கட்ட நடவடிக்கை என்னவென்பது பற்றி தகவல் அனுப்பப்படும். நான் சொல்லும் இந்தப் புள்ளிகளை நினைவு வைத்திருங்கள் என்று, இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள சில முக்கிய வி.ஐ.பிகளின் பெயர் கூறப்பட்டவுடன் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

★ ★ ★

மிஸ்டர் வரதராஜன் நீங்கள் சொல்வது ஒரு விதத்தில் யோசிக்க வேண்டிய விடயம் தான். நிச்சயமாக ஷியாம் சுந்தர் எழுதிய ''தீவிரவாதம்'' தீவி

கெட் அணியுடன் எந்த நாட்டு கிரிக்கெட் அணியும் விளையாட முன் வராது என்ற எண்ணமும் உருவாகியது.

போலிஸ் டிப்பார்மென்ற் அவசரமாக கூட்டம் கூடியது. கூடியிருந்த ஒவ்வொரு அதிகாரிகளினதும் முகங்களில் அதிர்ச்சியும் படபடப்பும் காணப்பட்டது. பொலிஸ்கமிஷனர் தேவராஜ் காபத்தால் கொதித்துக் கொண்

★ ★ ★

சுறாங்கனி சுறாங்கனி மாலு தெத்த லனவா குனிந்து நின்று நெல்லுப் பொறுக்கும் நோனா என்று ஒரு ஸ்ரூடன்ற் தொடங்க அந்த பஸ்ஸில் இருந்த அனைத்து ஸ்ரூடன்ற்களும் கைகளை தட்டி அவனைத் தொடர்ந்து பாடி ஆடினார்கள்.

கல்லூரி மாணவர்களும் மாணவிகளும் சுற்றுலா சென்று

துண்டிக்கப்பட்டது.

★ ★ ★

மிஸ்டர் வரதராஜன் நீங்கள் சொல்வது ஒரு விதத்தில் யோசிக்க வேண்டிய விடயம் தான். நிச்சயமாக ஷியாம் சுந்தர் எழுதிய ''தீவிரவாதம்'' தீவிரவாதிகளுக்கு கொதிப்பூட்டியிருக்கும். அவர்கள் தான் ஒரு வேளை இந்தக் காரியத்தை செய்திருக்கிறார்கள். இனி என்ன:

ஸ்ரூடன்ஸ் கோஸ்ரி வைக்க தொடங்க கொண்டக்ரிடம் இருந்து செல்போன் குரல் கொடுத்தது.

எஸ் ரெட்றோஸ் லேர்ஸ் பஸ் கொண்டக்ரர் கூறினர்.

ஹொண்டக்ரர் நீயும் ரைவரும் ரூர் போகும் 40 ஸரூடன்களும் இஷ்டதெய்வங்களை நினையுங்கள். இன்னும் 10நிமிடங்களில் உங்கள் பஸ் வெடி

பது தெரிந்தது. இன்னும் ஸ்பற றாக போங்கள் என்று கூறினான்.

30, 29, 28, 27, 26, என்று செக்கன்கள் குறைந்து கொண்டு வந்தது. பொலிஸ் ஜீப் பஸ்ஸை நெருங்கியது இன்னும் பத்து செக்கன்ஸ் தான் இருந்தது. பஸ்ஸிற்கும் ஜீப்பிற்கும் இடைவெளி 100m தான் இருந் தது. செக்கன்ட்ஸ் 8,7,6,5,4,...0

(தொடரும்)



# கம்பியூட்டர்க் கல்வி



நாம் இதுவரை ''கம்பியூட்டர்- ஓர் அறிமுகம்'' என்ற பாகத்தில் இருந்து, ஒரு கம்பியூட்டர் சிஸ்ரத்தில் இருக்கும் பாகங்களை அடையாளம் காணுவதற்கு கற்றுக் கொண்டதுடன், அவற்றின் அடிப்படைத் தொழிற்பாடுகள் பற்றியும் அறிந்து கொண்டோம். தொடர்ந்து ஒரு கம்பியூட்டர் சிஸ்ரத்தில் எப்படி தகவல்கள் சேமிக்கப்படுகின்றன என்றும், அத் தகவல்களை அளவிடுவதற்கு பயன்டுத்தும் அலகுகள் பற்றியும் பார்ப்போம்.

''கம்பியூட்டரும் தகவல் சேமிப்பும்'' என்ற இந்த இரண்டாவது பாகம், கம்பியூட்டர் தகவல் சேமிப்பு பற்றிய ஒரு ஆழமான விளக்கத்தை உங்களுக்கு தரும் நோக்குடன் சற்று விரிவான முறையில் எழுதப்பட்டுள்ளது. சாதாரணமாக வீட்டில் கம்பியூட்டரை பாவிப்பவராயினும் சரி, அல்லது தொடர்ந்து கம்பியூட்டர் கல்வியை கற்பவராயினும் சரி, கம்பியூட்டரில் எப்படி தகவல் சேமிக்கப்படுகின்றது என்றும், கம்பியூட்டர் தகவல் சேமிப்பில் பாவிக்கப்படும் அலகுகளான பிட் (Bit), பைட் (Byte) என்றால் என்ன என்றும் ஆழமாக தெரிந்து வைத்திருப்பது, தொடர்ந்துகம் பியூட்டர் பற்றிய மேலதிக அறிவை வளர்ப்பதற்கு ஒரு சிறந்த அத்திவாரமாக அமையும்.

## கம்பியூட்டரும் தகவல் சேமிப்பும்

கம்பியூட்டர்கள் தகவல்களை பைனறி (Binary) எனும் ஒருவித எண்ணியல் (Binary Number System) முறையைப் பயன்படுத்தியே சேமிக்கின்றன. இந்த பைன்றி எண்ணியல் முறையானது சாதாரணமாக நாம் பாவிக்கும் 0 தொடக்கம் 9 வரை எண்களைக் கொண்டுள்ள தசம எண்ணியல் (Dec-Decimal Number System) முறையைப் போல் அல்லாது பூச்சியத்தையும்(0) ஒன்றையும்(1) மட்டுமே கொண்ட ஒரு எண்ணியல் முறையாகும். நாம் தொடர்ந்து இந்த எண்ணியல் முறை பற்றியும், கம்பியூட்டர்கள் எப்படி இந்த எண்ணியல் முறையைப் பயன்படுத்துகின்றன என்றும் பார்ப்போம்.

## பைனறி எண்ணியல் முறை

## (Binary Number System)

பைனறி (Binary) என்ற ஆங்கிலச் சொல்லிலேயுள்ள ''பை'' (Bi) என்பது, இரண்டு அல்லது இரண்டு சம்பந்தப்பட்டவற்றைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். உதாரணமாக பைசிக்கிள் (Bicycle) என்பது இரண்டு சில்லுகள் கொண்ட வண்டி அதாவது இரண்டு சக்கர வண்டி (Bi - Cycle) என்பதையே குறிக்கும். இதே போல் தான் பைனறி என்பதும், இரண்டு எண்களை மட்டும் கொண்ட ஒரு எண்ணியல்முறையைக் குறிக்கும். அதாவது பூச்சியம்(0), ஒன்று(1) ஆகிய இரண்டு எண்களை மாத்திரம் கொண்ட ஒரு எண்ணியல் முறையே பைனறி எண்ணியல் முறையாகும்.

நாம் சாதாரணமாக பாவிக்கும் எண்ணியல் முறையான தசம எண்ணியல் முறையில் 0,1,2, 3,4,5,6,7,8,9 என பத்து எண்கள் உள்ளன. அதனாலேயே இந்த முறையை தசம, அதாவது பத்து எண்களை மட்டும் பயன்படுத்தியே நாம் எந்த ஒரு எண்ணையும் குறிப்பிடுவோம். உதாரணமாக ''ஆயிரத்தி ஐம்பது'' என்பதை ''1050'' என்றும் ''ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தி மூன்று'' என்பதை ''1983'' என்றும் குறிப்பிடுவோம். ஆனால் பைனறி முறையில் 0,1 ஆகிய இரண்டு எண்கள் மட்டுமே உள்ளதால் எந்த எண்ணைக் குறிப்பிடுவதாயினும், இந்த இரண்டு எண்களை மட்டும் உபயோகித்தே அவற்றைக் குறிப்பிடலாம். உதாரணமாக ''ஐந்து'' என்பதை தசம முறையில ''5'' என்றும் பைனறி முறையில் ''101'' என்றும் குறிபிப்பிடுவர். ''101'' என்பது எப்படி பெறப்பட்டது என்பது பற்றி பின்னர் பார்ப்போம்.

(தொடரும்)

நன்றி:- நுட்பம்

# கவிதைக் கலசம்






## இளைஞனே எழுந்திரு!



இளைஞனே எழுந்திரு!
வளைந்திடுங் கொள்கைகள்
உனதில்லை என
வேலையற்ற காரணத்தில்
ஆழக்கவலையுற்று அமர்ந்தாய்
வேளை வரும் நாளை!
நம்பு! முயன்று கொண்டிரு!
ஆர்வமிகு இளைஞனாகு!
அறிவுறிஞ்சி ஆற்றல் பரப்பு
சூரியனைப் பாதிசெய்துன்
விழிகளில் பதி!கொடுமைகள்
எரி!
பூக்கள் உதிரின் நார் மிஞ்சும்
பாக்கள் உதிரின் சொல் மிஞ்சும்
நீ உதிர்ந்த பிறகு எது எஞ்சும்?
எழுந்து நின்று சொல் சாம்பல்
அல்ல
சரித்திரம் என்று! நின்நெஞ்சஞ்
சுடர்கின்ற
தன்னம்பிக்கைத் திரிதீண்டு!
உன் புகழால் தேசத்தை
ஒளியேற்று!
நாளைய வரலாறு மிருதுவாய்ப்
பாடட்டும்!
வெற்றி இவனதென்றல்ல
வெற்றியே இவன் என்று!

ச.சாரங்கா,
சங்கத்தானை

## ஒளிர்க நாதம்

அகிலமெங்கும் ஒலித்திடுவாய்
ஆக்கங்கள் பல தந்திடுவாய்
இனிய நற்செய்திகள் தந்திடுவாய்
ஈழத்தின் இணையற்ற வாரமலராய்
உயரட்டும் உன் புகழ் உலகமெங்கும்
ஊரெல்லாம் உன்னை அணைக்கட்டும்
எண்ணற்ற படைப்புகள் அளித்திடுவாய்
ஏணிப்படி போல் ஏற்றம் பெற்றிடுவாய்
ஐக்கியம் பேணி அறிவொளி பரப்பிடுவாய்
ஒளிமயமான எதிர்காலம் உனக்காகவே
ஓங்கி வளர்ந்து புகழ் படைத்திடுவாய்
ஔவியமின்றி அரிய சேவை புரிந்திடுவாய்.

ம.க.விஜயன்,
நாயன்மார்க்கட்டு

## விரலுக்கு வலிக்குது வீணையே மீட்டிவிடு



ஒரு
சின்னத்தென்றலாய்தான்
வீசினாய்!
எப்படித்தான் சரிந்ததோ
என் மனமரம்?
மௌனச் சுவர்களை
இடித்துப் போட்டு
உன் நினைவுப் பறவைகளை
நித்தம் நித்தம்
நீ அனுப்பி - என்னை
கொத்த வைக்கிறாய்.
இருந்தும் -
கதவுகள் வைக்க முடியவில்லை
இந்த
சண்டேஸ்வரர் சந்நிதிக்கு!
உன்
புன்னகைக்குப் பின் தான்
எனக்குள் பூக்கள்
ஓ...............!
எப்படித்தான் பிடித்தாயோ
உன் கண்கள் வலையால்
இந்தச் சுடும் சூரியனை?!
என் கதிர்களை அனுப்பி
உன்னை
மலரச் செய்தாலும்
இன்னும் என் தாகம்
தீரவில்லை!
என்னை
அலங்கரித்த ராகமே
அன்பு கொடு!
விரலுக்கு வலிக்குது வீணையே
மீட்டிவிடு!!

என்.தனுசுஜன்,
சண்டிலிப்பாய்



## புறப்படு

புதுமைப்பெண்ணே புறப்படு வெளியே
இவ்வுலகினிலே சாதிக்கப் பிறந்தவள்
அடக்குமுறைக்கு அஞ்சுவதா?
அன்பிற்கு மட்டுமே அடங்கிநட!
ஆண் அதிகாரத்தைத் தகர்த்தெறி!
உன் நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை
சிறந்த இலட்சியத்தை மட்டுமே காட்டுவதாய்,
புது உலகம் படைக்கப்புறப்படு!
இனி வருவதோ உன் காலம்!
இதை நன்றாக உணரட்டும் ஞாலம்!!

த.பூஜித்திரேயி
கரவெட்டி

## நியாயங்கள்!

என்னை உனக்குத்
தெரிகிறதா?
உன்னைப் போல்
நானும் ஓர் மனிதன்!
எனக்கும்
உணர்வுகளுண்டு
உறவுகளுண்டு
உன் போல் உடலுமுண்டு
அதிலே
உறையாத
உதிரமுண்டு
ஆனால்
நீ - உன்
வாழ்விற்காய்
வாழ்கிறாய்
நான் என்
உறவுகளின்
வாழ்விற்காய்
மாள்கிறேன்.
நான்
எனக்காக வாழவில்லை
ஆனால் நீ
உனக்காக வாழ்கிறாய்
நீ உன்
அற்பசுகத்திற்காய்
எங்கெங்கோ

## நீயும் நானும்!

உன் இன்பம் -என் இன்பம்.
உன் துயரம் - என் துயரம்.
உன் நிமிர்வு - என் நிமிர்வு.
உன் குனிவு - என் குனிவு.
உன் வெற்றி - என் வெற்றி
உன் தோல்வி - என் தோல்வி.
உன் காயம் - என்காயம்.
உன் சுகமே - எந்தன் சுகம்.

உன் கண்ணில் நீர்வழிந்தால்
என் கண்கள் பெருக்கெடுக்கும்.
உன்முதுகில் அடி விழுந்தால்.
என் இதயத்தில் வலிக்கும்.
உன்காலில் முள் தைத்தால்
என் மனதில் குருதி சிந்தும்
உன் சிலுவை என்னை
உயிரோடு கழுவிலேற்றும்.

நீதுயரைச் சுமக்கையிலே
என்தோளுன் சுமை பகிரும்
நீ பழிச்சொல் கேட்கையிலே
என்நாக்கு வாளாகும்.
நீதனித்துக் கிடக்கையிலே
என் வாழ்வு துணையாகும்.
உன் கவலைப் புயல்கலைக்க

## சோதரனே புறப்படு!

சோதரனே புறப்படு
மானிடம் மரத்துப் போய்
பல காலமானதால் உயிர்ப்பித்து

நான்
எனக்காக வாழவில்லை
ஆனால் நீ
உனக்காக வாழ்கிறாய்
நீ உன்
அற்பசுகத்திற்காய்
எங்கெங்கோ
கையேந்துகிறாய்
யார் யாருக்கோ
கை கூப்புகிறாய்
நான் என் உறவுகளின்
உண்மையான
உணர்வுகளுக்காய் - என்
உதிரத்திற்கு
விலை பேசுகிறேன்.
என்னை உனக்குத் தெரியுமா?
இப்பிரயத்தனத்தின் முடிவு
என்னை உனக்குத்
தெளிவாக்கும்
அதுவரை பொறுத்திரு...

வே.சாரங்கன்
யாழ் இந்துக் கல்லூரி.

# தாடி

அன்பே!
அன்று நீ
உள்ளத்தில் விதைத்தது
இன்று உன்
நினைவுகளை
நீராக ஊற்ற, ஊற்ற
கன்னத்தில் முள்ளாக
முளைக்கின்றது

தபால்காரன்
உடுப்பிட்டி

என்தோளுன் சுமை பகரும்
நீ பழிச்சொல் கேட்கையிலே
என்நாக்கு வாளாகும்.
நீதனித்துக் கிடக்கையிலே
என் வாழ்வு துணையாகும்.
உன் கவலைப் புயல்கலைக்க
என்கைகள் கவியெழுதும் .

என்னருமைத் தாய்நாடே ......
ஈடில்லா உன்மடியில்
என்றென்றும் நானுறங்க
எனக்கருளு நல்லவரம்.

த.ஜெயசீலன்

## காத்திருப்போம் அதுவரை..!

இரக்கமிழந்த பார்வை
அர்த்தமற்ற பாடல்
லயமிழந்த தாளம்
இவற்றின் மத்தியில்
இங்கோர்...........
தளர்வுற்ற சிறுமனது
அஸ்தமிக்கும் இரவியும்
இரத்தம் சிந்துவதால்தான்
மறுநாளும் வாழ்கின்றது
நம்பிக்கையூற்று
காலாவதியாகினாலும்
காய்ந்து போன
இதயமதில் இருந்தும்
சில நம்பிக்கை மின் மினிகள்
சுதந்திர சமவுரிமையும்
சமத்துவமும் கொண்ட
உயர்வான மனிதப்பேறு
என்றோ ஒரு நாள்
தமிழனுக்கு நிரந்தரமாகும்
அந்த நிகழ்வை
எதிர்பார்க்கும்
சரித்திர நிமிடங்களை
சந்திக்கும் வரை
சேமித்து வைப்போம்
கசிவாகும் - எம்
உயிர்த்துளிகளை!!

யோ.பிரஷாந்தி
நல்லூர்.

இந்த
சண்டேஸ்வரர் சந்நிதிக்கு!
உன்
புன்னகைக்குப் பின் தான்
எனக்குள் பூக்கள்

விரலுக்கு வலிக்குது வீணையே
மீட்டிவிடு!!

என்.தனுசுஜன்,
சண்டிலிப்பாய்



# தனிமை

அன்பே உன்னை பிரிந்து
இனியும் தனித்திருக்க முடியாது
நித்தமும் உன்னை எண்ணி
நித்திரை இன்றித் தவிக்கிறேன் - நான்
காலம் எல்லாம் உண்மடியில் சாய வேண்டும்
காதல் கொண்டு உன்னில் நான் மாயவேண்டும்
என் உள்ளமும் உடலும்
உனக்காக தவமிருந்து
தாக்த்தால் துடிக்கிறது
என் தனிமையைப் போக்குவாயா?
என் அன்பே!



பா.கிரிதேவ்
உடுவில்

## சோதரனே புறப்படு!

சோதரனே புறப்படு
மானிடம் மரத்துப் போய்
பல காலமானதால் உயிர்ப்பித்து
மீட்டு வர
சோதரனே புறப்படு!
காதலும் காமமாகி விட்டதால்
காதலை
மீட்டுவர
சோதரனே புறப்படு!
அகங்காரம் அங்கீகாரம் பெற்றால்
அன்பு தோய்ந்து போன
பெண்மையை
மீட்டு வர
சோதரனே புறப்படு!
சகதியை நீக்கிச்
சரிநிகர் வாழ்வு பெற
சோதரனே புறப்படு!
வேளை வரும் என்று
வேடிக்கை பார்த்ததால்
முதுமை ஆகிப் போன
இளமையை
மீட்டுவர
சோதரனே புறப்படு!

மானியூர் ராஜ்

## கரங்களுக்கு!

ஏழையின் கரங்களுக்கு
விலைவாசி எட்டாக்கனி!
ஏமாளியின் கரங்களுக்கு
எதுவும் ஏமாற்றம்!
கோமாளியின் கரங்களுக்கு
குரங்கின் கை பூமாலை!
வல்லவன் கரங்களுக்கு
சிறுபுல்லும் ஆயுதமே!
துறவியர் கரங்களுக்கு
வைரமும் வெறும் கல்லே!
எவ்வாறு நீங்களோ?
அவ்வாறே கரங்களுக்கு!

இராமஜெயபாலன்,
கொக்குவில்.




## ஆரோக்கிய விதிகள்

உடம்பைப் பாதுகாக்கவும் ஆரோக்கியமாக வாழவும் தேவைப்படும் தகவல்களை கீழ்கண்ட ஆறு விதிகள் தெரிவிக்கின்றன.

* உடம்புக்குச் சரியான உணவும், பானமும் வேண்டும்.

* சூரிய வெளிச்சமும் சுத்தமான காற்றும் வேண்டும்.

* உடம்புக்குள் உண்டாகும் கழிவுப் பொருளை அவ்வப்பொழுது வெளியகற்றி விடவேண்டும்.

* சீத உஷ்ணங்களால் உடல் தீங்குறாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

* முறையான உடற்பயிற்சியும், போதிய ஓய்வும் தேவை.

* நச்சுப் பொருள்களும் நோய்க் கிருமிகளும் உடம்புக்குள் புகாத வண்ணம்

எப்பொழுதும்கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும்.இந்த ஆறு விதிகளையும் அனுசரித்தால் நோயின்றி நெடுநாள் வாழலாம். அனுசரிக்கத் தவறினால் நோய் வந்து ஒரு நாள் நம்மைப் பிடித்துக் கொண்டுவிடும்.

## மாணவ சமுதாயமே

மாண்புமிகு சமுதாயமே
மாணவ சமுதாயமே
வீண் காலம் போக்காது
வீரமுடன் கற்றிடுவீர்!
தேன் தமிழ் சுவை அறிந்து
தேசமெங்கும் தமிழ் பரப்புவீர்!
வான் எட்டும் புகழோடு
வாழ்வில் மகிழ்வோடு வாழ்வீரே!

தம்பியரே அன்புத் தங்கையரே
தரணி போற்ற வாழ்ந்திடுவீரே
உமை
நம்பியிருக்கும் இந்த
நல்ல தேசமதைக் காத்திடுவீரே!
அம்மா அப்பா சொற்கேட்டு
அவனியில் நன்றாய் வாழ்ந்திடுவீரே!
வெம்பி நிற்கும் வேதனை வாழ்வை
வெட்டிச் சாய்க்கத் துணிந்திடுவீரே!

த. அஜந்தகுமார்,
யா/நெல்லியடி மத்திய
மகாவித்தியாலயம்.

## நிறந்தீட்டுவோம் வாருங்கள்



அன்புக் குழந்தைகளே! விதம் விதமாக உங்களிற்கு வர்ணம் தீட்ட ஆசை தானே? இதோ இங்கு தரப்பட்டிருக்கும் படத்தில் உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம். என்ன நீங்கள் நிறந்தீட்டத்தயார் தானே?



## படுக்கையிலும் உண்டு படகிலும் உண்டு

கப்பலில் முதன் முதலில் பயணம் செய்தார் ஒருவர். 'பரந்துகிடக்கும் கடலில் எப்பொழுது வேண்டுமானாலும் கப்பல் மூழ்கி விடலாம். பயணம் வெற்றியாகஅமைந்து ஊர்போய்ச் சேர்வோம் என்ற உறுதி யாருக்குமில்லை. கப்பலிலேயே எப்பொழுதும் பணி புரிகின்ற மாலுமிகளின் நிலை இதை விட மோசம்'என்று நினைத்தார் அவர்.

அங்கிருந்த மாலுமி ஒருவரை அழைத்து அவர், "உன் தந்தையார் என்ன பணி புரிந்தார்?" என்று கேட்டார்.

"என் தந்தையாரும் என்னைப் போல் கப்பலில் மாலுமியாக பணிபுரிந்தார். ஒரு நாள் அவர் பயணம் செய்த கப்பல் புயலில் சிக்கி மூழ்கியதால் இறந்துவிட்டார்"என்றான்.

"சரி! உன் தந்தையாரின் தந்தையார் என்ன செய்தார்?" என்று கேட்டார் அவர்.

"அவரும் மாலுமியாகத்தான் பணிபுரிந்தார். அவரும் கப்பலோடு மூழ்கி இறந்து போய் விட்டார்" என்று பதில் சொன்னான் மாலுமி.

"என்ன? உன் தந்தையாரும் அவர் தந்தையாரும் கப்பலில் பயணம் செய்யும் போது இறந்துவிட்டார்கள் என்கிறாய், நீ மாலுமியாக இருக்கிறாய் கடலில் மூழ்கி இறந்து விடுவோம் என்ற அச்சம் உனக்கில்லையா?" என்று கேட்டார்.

"உங்கள் தந்தையார் எப்படி இறந்தார்?" என்று கேட்டார் மாலுமி.

"படுக்கையில் படுத்திருக்கும் போது."

"அவருடைய தந்தையார் எப்படி இறந்தார்.

அவரும் படுக்கையில் படுத்திருக்கும்போது தான் இறந்தார்."

"உங்கள் தந்தையாரும் அவர் தந்தையாரும் படுக்கையில் படுத்திருக்கும் போது தான் இறந்து இருக்கிறார்கள். நீங்கள் எப்படி அச்சமில்லாமல் படுக்கையில் படுத்து உறங்குகிறீர்கள்?" என்று கேட்டான் மாலுமி.

அப்பொழுது தான் அவருக்குஉண்மை புரிந்தது. 'உயிரை எப்பொழுதும் காப்பாற்றி வைக்க முடியாது. அது நம் உடலை விட்டு நீங்கியே தீரும். நமக்கு உரிய கடமையை செய்து கொண்டு அச்சமின்றி வாழ்வதே மேலான வாழ்க்கை" என்பதை அவர் உணர்ந்து கொண்டார்.

சிறுவர்களே! கதையைப் படித்தீர்களா? நீங்களும் எதற்கும் அஞ்சாதவர்களாக உங்கள் கடமையை செய்யுங்கள் உங்கள் கடமையுணர்வு உலகில் என்றும் உங்களை உயர்த்தும்.

தொகுப்பு: கஜா

## சார்ள்ஸ்டார்வின்

மந்தியிலிருந்து மனிதன் வந்தான் என்று சொன்னதுமே நமநினைவுக்கு வருபவர் சார்ள்ஸ்டார்வின் என்னும் விஞ்ஞானிதான். பரிணாமக் கொள்கையை வகுத்த ஆங்கிலேயரான அவர், சிறுவயதிலிருந்தே வண்டுகளைச் சேகரிப்பதிலும், விலங்குகளையும், தாவரங்களையும் ஆராய்வதிலும் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். இவரது பாட்டனாரும் தந்தையும் டாக்டர்களாகத் தொழில் நடத்தியவர்கள். டாக்டர் குடும்பத்தில் பிறந்த இவரும் ஒரு டாக்டராக வரவேண்டுமென இவருடைய தந்தை ஆசைப்பட்டார். எனவே, இவரை எடின்பரோ பல்கலைக் கழகத்தில் சேர்த்துவிட்டார். இவருக்கு டாக்டராக விருப்பம் இல்லை. பாதிரியாக நினைத்தார். ஆயினும், இவருடைய நண்பரான டாக்டர் கிராண்ட் என்பவர் இவருக்குள்ள ஈடுபாட்டை உணர்ந்து, இவரை இயற்கையை ஆராயும் வழியில் திருப்பி விட்டார். இவர் கப்பலில் இயற்கை விஞ்ஞானியாக வேலைக்குச் சேர்ந்து, ஐந்து ஆண்டுகள்

நாள் அவர் பயணம் செய்த கப்பல் புயலில் சிக்கி மூழ்கியதால் இறந்துவிட்டார்"என்றான்.

"சரி! உன் தந்தையாரின் தந்தையார் என்ன செய்தார்?" என்று கேட்டார் அவர்.

அவருடைய தந்தையார் எப்படி இறந்தார்.

அவரும் படுக்கையில் படுத்திருக்கும்போது தான் இறந்தார்."

"உங்கள் தந்தையாரும்

[illegible] உங்கள் கடமையை செய்யுங்கள் உங்கள் கடமையுணர்வு உலகில் என்றும் உங்களை உயர்த்தும்.

தொகுப்பு: ஜனா

# பேராசை

புத்தூரில் கமலன் என்னும் கமக்காரன் வாழ்ந்து வந்தான். அவனது தோட்டத்தில் பெரிய பூசனிக்காய் ஒன்று காய்த்தது. அதை சந்தையில் கொடுத்தால் 10 ரூபா தான் கிடைக்கும். அதனால் அதை அவன் ஊர்ப் பண்ணையாரிடம் கொடுத்தான். பண்ணையாரின் அன்பு கிடைக்கும் என நினைத்துக் கொடுத்தான். ஆனால் பண்ணையார் கமலனுக்கு 100 ரூபா கொடுத்தார் கமலன் மகிழ்ச்சியடைந்தான். அடுத்த நாள் கமலனின் பசு அழகிய கன்றை ஈன்றது. பூசனிக்காய் கொடுத்ததற்கே 100 ரூபா தந்த, பண்ணையார் பசுவின் கன்றைக் கொடுத்தால் எவ்வளவு தருவார் என்ற பேராசையால், கன்றையும் பண்ணையாரிடம் கொடுத்தான். பண்ணையார் மகிழ்ச்சி அடைந்தார். அதனால் உனக்கு என்ன வேண்டும் எனக் கேட்டார். கமலன் ஆசையால் நீங்கள் உயர்வாக மதிக்கும் பொருளை தாருங்கள் என்று கேட்டான். உடனே பண்ணையார் நான் உயர்வாக மதிப்பது நீ தந்த பூசணிக்காயைத் தான் எனக் கூறி, பூசணிக்காயை கொடுத்தார். கமலனுக்கு அப்போது தான் புரிந்தது ஆசைக்கு அளவுண்டு என்று.

இ. திவ்வியா
யா/பொலிகண்டி இ.த.க. பாடசாலை

# விடுகதைகள்

1. சிவப்பு நிறச் சிங்காரி, தண்ணீர் பட்டால் கறுப்பாயி அவள் யார்?
நெருப்பு

2. மரத்துக்கு மேலே காய், காய்க்கு மேலே மரம் அது என்ன?
அன்னாசி

3. அத்துவானக்காட்டிலே குடை பிடித்து நிற்கிறார் ஒரு ராசா அவர் யார்?
காளான்

4. மேடு கண்டால் ஒதுங்குவார் பள்ளம் கண்டால் பதுங்குவார் அவர் யார்?
தண்ணீர்

5. அள்ளும் போது சலசலக்கும் கிள்ளும் போது கண் கலங்கும் அது என்ன?
வெங்காயம்

சி.சயந்தன்,
யா/யாழ்ப்பாணக்கல்லூரி.

# பிறந்தநாட் பலன்கள்

ஞாயிற்றுக்கிழமை பிறந்தபிள்ளை
நன்றாய்ப் பாடம் படித்திடுமாம்
திங்கட்கிழமை பிறந்த பிள்ளை
தினமும் உண்மை பேசிடுமாம்
செவ்வாய்க்கிழமை பிறந்தபிள்ளை
செய்வதை ஒழுங்காக
செய்திடுமாம்
புதன்கிழமை பிறந்த பிள்ளை
பெற்றோர் சொற்படி நடந்திடுமாம்
வியாழக்கிழமை பிறந்த பிள்ளை
மிகவும் பொறுமை காட்டிடுமாம்
வெள்ளிக்கிழமை பிறந்த பிள்ளை
வேண்டும் உதவிகள்
செய்திடுமாம்
சனிக்கிழமை பிறந்த பிள்ளை
சாந்தமாக இருந்திடுமாம்

தி. மயூரகிரி
யா/இந்துக் கல்லூரி

# கதிரவன்

காலைக் கதிரவன் வருகை கண்டு
கண் விழித்த கானகத்துப்பறவைகள்
மாலைக் கதிரவன் மறையக் கண்டு
கண் அயர்ந்து போயினவே.

த. பிரசாத்.
தரம் - 10
யா/ ஆவரங்கால் நடராஜ
இராமலிங்க வித்தியாலயம்

ஆசைப்பட்டார். எனவே, இவரை எடின்பரோ பல்கலைக் கழகத்தில் சேர்த்துவிட்டார். இவருக்கு டாக்டராக விருப்பம் இல்லை. பாதிரியாராக நினைத்தார். ஆயினும், இவருடைய நண்பரான டாக்டர் கிராண்ட் என்பவர் இவருக்குள்ள ஈடுபாட்டை உணர்ந்து, இவரை இயற்கையை ஆராயும் வழியில் திருப்பி விட்டார். இவர் கப்பலில் இயற்கை விஞ்ஞானியாக வேலைக்குச் சேர்ந்து, ஐந்து ஆண்டுகள் அந்தக் கப்பலிலே சென்று பலவித ஆராய்ச்சிப் பொருள்களைச் சேகரித்து வந்தார். இரவு பகலாக ஆராய்ச்சி செய்தார். தான் கண்ட விஞ்ஞான உண்மைகளை எழுதிப் புத்தகங்களாக வெளியிட்டார். இனங்களின் தோற்றம், மனிதனுடைய பாரம்பரியம் இந்த இரண்டு நூல்களும் மிகவும் குறிப்பிடத் தக்கவை. டார்வின் பல ஆண்டுகள் நோயாளியாகவே இருந்தார். ஆயினும் இவர் விஞ்ஞான ஆராய்ச்சிகளை இடைவிடாமல் செய்து வந்தார். இவரது மதிநுட்பமும், விடாமுயற்சியுமே இன்று உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானிகளில் ஒருவராக இவரை விளங்கச் செய்தது.

தொகுப்பு
செ.மதிசூதனன்

# புதிர்க் கணக்கு

1. அருகே உள்ள உருவில் 10 தீக்குச்சிகளால் மூன்று சதுரங்கள் ஆக்கப்பட்டுள்ளன. இவற்றுள் இரண்டு குச்சிகளை அகற்றுவதால் எப்படி இரண்டு சதுரங்கள் மட்டும் உள்ள உருவை ஆக்கலாம்?



2. நிரோசனாவிடம் 15 மாபிள்கள் இருந்தன. அவற்றை ஒரு நிரையில் 4 மாபிள்கள் வீதம் 5 நிரையில் அடுக்கினான் உங்களால் முடியுமா?

புதிர் கணக்கு விடைகள்

1.



2.



ஆக்கம்:- நா. மகேந்திரலிங்கம்

## எரிக் கணேஷின்
(மூக்குக் கண்ணாடியகமும் பல்கட்டுமிடமும்)
### இவரைத் தெரியுமா -பரிசுப் போட்டி இல:-06

**படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?**

(வாசகர்களுக்கான குறிப்பு -)
இவர் தென்னிந்தியத் திரையுலகின் மிகச் சிறந்த நடிகர் ஆவார். இவரைத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர் வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-



'இவரைத்தெரியுமா?'
போட்டி இல:-06,
எரிக் கணேஷ்,
இல.566, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:-
சரியான விடை எழுதும் மூன்று போட்டியாளர்கள் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்

**இவரைத் தெரியுமா பரிசுப் போட்டி இல: — 06**

படத்தில் உள்ளவரின் பெயர் :-.......................................

அனுப்புபவரின் முழுப் பெயர் :-.......................................

அனுப்புபவரின் முகவரி :-.......................................
.......................................
.......................................

**இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல 05இற்கான சரியான விடை**





**ஒஸாமா பின்லேடன்**

இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல. 05 இல் பங்குபற்றி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:

**முதற்பரிசு:—**
ச.கஜமுகன்
வழக்கம்பரை
தொல்புரம்சுழிபுரம்.

**இரண்டாம்பரிசு:—**
பொ.மோகனராசா
தபால்கந்தோர் வீதி,
ஆத்தியடி,
பருத்தித்துறை.

**மூன்றாம்பரிசு:—**
கு.சுதர்ஷன்
கே.கே.எஸ் றோட்
அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை.






க. முகுந்தன்.
வயது: 19
நெல்லியான் வீதி,
சுழிபுரம்.
பாடலுக்கு நடனம் ஆடுதல்.



ம. நடனதேவன்
வயது: 19
159/1, யாழ் வீதி,
மானிப்பாய்.
மீன் வளர்த்தல், அரசியல் நாடகம் பார்த்தல்.



சி.காந்தரூபன்
வயது: 19
சுன்னாகம் வடக்கு,
சுன்னாகம்.
கவிதை, பத்திரிகை, தொலைக் காட்சி, ஓவியம்.

## குறுக்கெழுத்துப் போட்டி
### இல '07




அனுப்ப வேண்டிய முகவரி:-

**ஸ்ரீ வாணி நகை மாடம்,**
**குறுக்கெழுத்துப் போட்டி இல 07**
**இல. 173, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்**

பெயர் :- .......................................
விலாசம் :- .......................................
.......................................
.......................................

.......... ✂ இங்கே வெட்டுக.......................................

**இடமிருந்து வலம்.**
(1) நகம் (4) சாமம் (6) உறுதி (7) குதிரை (9) விரோதம் (11) முடி(வலம்மாறியுள்ளது) (12) சாராத (13) நீர்த்தேக்கம் (14) வணங்கு (15) முதற் பொருள் (16) பரப்பு (18) தேற்றப் பொருள் இடைச்சொல் (19) இல்லிடமகலாத (20) அர்ச்சனைக் குகந்த புல்லினம்.

**மேலிருந்து கீழ்.**
(1) துன்பம் (2) வெறுமை (3)புறா (4) குற்றமற்றவன் (5) பல்லாக்கு (8) பாத்திரம் (10) சகோதரிகளின் கணவர்மார்களுக்கான உறவு முறை (12) திறமை (15) முன்னோர் (16) புலர்க (17) மாமிசம் (19) குட்டையான (21) உட்செல்ல (கீழிருந்து மேலாக)

**குறுக்கெழுத்துப் போட்டி இல 06இற்கான விடைகள்**

**இடமிருந்து வலம்**
1) கைதவம் 4) அபய 6) ரேவதி 7) கதலி 8) சிகை 9) தொடருதல 10) சங்கமம் 11) காகம் 13) திரையல் 14) கூகம் 17) விகார 18) இடம்பி 19) சாலை 20) புகை

**மேலிருந்து கீழ்**
1) கைரேகை சாத்திரம் 2) தவசி 3) வதி 4) அதரும 5) பலிதம் 7) கடகம் 9)தொங்கல் 10) சகாயவிலை 12) அம்பிகை 14) கூட 15) கம்பு 16) காரை

**இரண்டாம்பரிசு: —** பொ.மோகனராசா
தபால்கந்தோர் வீதி,
ஆத்தியடி,
பருத்தித்துறை.

**மூன்றாம்பரிசு: —** கு.சுதர்ஷன்
கே.கே.எஸ் றோட்
அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை.

**சரியான விடைகளை எழுதி பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:-**

*தே.லலிதம்பிகை நாவலர் வீதி, பா.வத்சலா நல்லூர், வி.பற்குணன் வட்டுக்கோட்டை, கே.இராஜகோபால் வட்டுக்கோட்டை, அ.நிலக்சன் பண்டத்தரிப்பு, சி.ஜெகதீஸ்வரன் நீராவியடி, பு.சிவனுஜா சுழிபுரம், ஆர்.ராஜசந்திரன் நாவாந்துறை, ஆர்.தாரகா வட்டுக்கோட்டை, ப.ஸ்ரீதரன் வட்டுக்கோட்டை*

## யோகம் பற்றி அறிந்து கொள்வோம்

### யோகம் என்றால் என்ன?

யோகம் என்ற சொல் 'யுஜ்' என்ற சமஸ்கிருத மொழியில் உள்ள வேர்ச் சொல்லின் வழியே பிறந்ததாகும். யோகம் என்ற சொல்லுக்கு 'ஒருங்கிணைத்தல்' அல்லது 'எல்லாவற்றையும் எந்தவிதமான வேறுபாடுமின்றி, முழுமைப்படுத்துதல்' என்றும் பொருள் கூறுகின்றனர். யோகம் என்றால் 'அலையும் மனதை அலையாமல் ஒரு நேர்வழிப்படுத்தும் செயல்' என்று எளிமையாகவும் உரைக்கின்றனர். யோகம் தமிழில் தபம் அல்லது தவம் எனப்படும்.

### அறிவியல் கலை

யோகம் என்பது மக்கள் தம் உடலையும் உள்ளத்தையும் அடக்கியாளக் கண்ட ஒரு அறிவியல் கலையாகும். யோகப் பயிற்சியில் சித்திபெற்ற அறிஞர்கள் இயற்கையைத் தன் [illegible] யோகக்கலை சாகாக்கலை [illegible] யோகப்பயிற்சியால் நீண்ட நாள் வாழலாம். யோகம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் மெய் குகைக்கலையாகும்.

(தொடரும்)

சி.காந்தரூபன்
வயது: 19
சுன்னாகம் வடக்கு,
சுன்னாகம்.
கவிதை, பத்திரிகை, தொலைக்காட்சி, ஓவியம்.



உ. கோபி
வயது: 21
கண்டிவீதி, மாம்பழம் சந்தி,
அரியாலை.
கருத்துள்ள சினிமா, பாரம்பரிய நாட்டுக் கூத்துக்கள், இனிய அமிர்த கீதங்கள் கேட்டல்.



P.வின்சன்
வயது: 18
தீயோகு வீதி,
15, மத்தியூஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
நாவல்புனைதல், கவிதை வரைதல்.

10) சங்கமம் 11) காகம் 13) திரையல் 14) கூகம் 17) விகார 18) இடம்பி 19) சாலை 20) புகை

**மேலிருந்து கீழ்**

1) கைரேகை சாத்திரம் 2) தவசி 3) வதி 4) அதரும 5) பலிதம் 7) கடகம் 9)தொங்கல் 10) சகாயவிலை 12) அம்பிகை 14) கூட 15) கம்பு 16) ,காரை

பல வாசகர்கள் இக் குறுக்கெழுத்துப் போட்டியில் ஆர்வத்துடன் இணைந்து கொண்டுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விபரம்:-

**முதற் பரிசு:-** க.சித்திரா
சேர்ச் வீதி,
உடுவில், சுன்னாகம்.

**இரண்டாம் பரிசு:-** சு.யாழினி
'மணல் லேன்'
புலோலி தெற்கு,
புலோலி.

**மூன்றாம் பரிசு:-** சபா.பாரதி
இலகடி ,
அல்வாய்.

**போட்டியில் கலந்து கொண்டு பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகளின் விபரம்**

*க.கோகிலரமணன் வட்டுக்கோட்டை, ப.சிறிதரன் வட்டுக்கோட்டை, ஸ்ரீ.பரமாநந்தவல்லி பண்ணாகம், சி.சங்கீதா + சி.சம்பூரணி வட்டுக்கோட்டை, ந.சிந்துஜன் யாழ்ப்பாணம், க.கவிதா சித்தன்கேணி, க.மதிவதனி ஆனைக்கோட்டை, செ.ஜெரீம் நிரோஷன் வட்டுக்கோட்டை, கண.ஜீவகாருண்யம் காரைநகர், கே.அரசேஸ்வரன் யாழ்ப்பாணம்,*

**குறிப்பு:-**

குறுக்கெழுத்துப் போட்டிக்கு விடைகள் அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "குறுக்கெழுத்துப் போட்டி இல 07" அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி:- 14.04.2002.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | 150.00 |
| இரண்டாம் பரிசு:- | 100.00 |
| மூன்றாம் பரிசு:- | 50.00 |




# சூர்யா நடிக்கும் விக்ரமனின் "உன்னை நினைத்து....."!

விக்ரமனின் "உன்னை நினைத்து" படத்தின் பாடல் காட்சி இலங்கையில், படமானது. லட்சுமி மூவி மேக்கர்ஸ் பட நிறுவனம், "உன்னை நினைத்து" படத்தை தயாரித்து வருகிறது.

கதை, திரைக்கதை, வசனம், எழுதி விக்ரமன் இயக்கும் இப்படத்தில் கதாநாயகனாக சூர்யா நடிக்கிறார்.



லைலாவும், ஸ்னேகாவும் கதாநாயகிகளாக நடிக்க மற்றும் ரமேஷ் கண் ணா, சார்லி, ஆர். சுந்தர்ராஜன், ராம்ஜி, குமரேசன், மதன்பாப், மயில்சாமி, தலைவாசல் விஜய், டெல்லி கணேஷ், பாண்டு, கே.கே. சவுந்தர், சிங்க முத்து, பாலு ஆனந்த், பல்லவி, உமா மகேஸ்வரி, சத்யபிரியா, ஷீலா ஆகியோரும் நடிக்க எஸ். பாலசுப்பிரமணியம் ஒளிப்பதிவு செய்கிறார்.



இப்படத்தின் படப்பிடிப்பு சென்னை மற்றும் விசாகப்பட்டினத்தில் நடந்தது. இப்போது ஒரு பாடல் காட்சிக்காக படக்குழுவினர் இலங்கை வந்துள்ளனர்.

"என்னைத் தாலாட்டும் சங்கீதம் நீயல் லவா – உன்னை சீராட்டும் பொன் னூஞ்சல் நானல்லவா – உன்னை மழை என்பதா – இல்லை தீ என்பதா – அந்த ஆகாயம், நிலம், காற்று நீ என்பதா – உன்னை நான் என்பதா?" என்ற பாடல் இசை அமைப்பாளர் சிற்பி இசையில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. பாடலை உன்னிமேனனும், சுஜாதாவும் பாடினார்கள்.

இப்பாடலுக்கான காட்சியில், சூர்யா, லைலா, ஸ்னேகா கலந்து கொள்ள இலங்கையில் நுவரயேலியா, பொப்டகலா, கண்டி, ரம்போடா நீர் வீழ்ச்சி ஆகிய பகுதிகளில் படமானது.

விக்ரமன் இயக்குனராகி பனிரெண்டு வருஷமாகிறது. இதுநாள் வரை எந்தப் படத்துக்காகவும் வெளிநாடு போனதில்லை! முதல் முறையாக இந்தப் படத்தின் பாடல் காட்சிக்காக போயிருக்கிறார்.

ச. அருணாசலத்தின் தயாரிப்பு மேற்பார்வையில் கே. முரளீதரன், ஜி. வேணுகோபால், வி. சுவாமிநாதன் ஆகியோரின் தயாரிப்பில் வேகமாக வளர்ந்து வருகிறது "உன்னை நினைத்து"...

# திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் பொறுப்பாளராக ரோஜா?

ரோஜா முகத்தில் நிஜமாகவே இப்போது புன்னகைப் பூ பூத்துக் குலுங்குகிறது! இருக்காதா? நூறு



# பொப் இசைப் பாடகர் கதாநாயகனாக நடிக்கும் "கிச்சா"!

தர்ஷினி மூவி மேக்கர்ஸ் தயாரிக்கும் படம் "கிச்சா". இதில் கதாநாயகனாக 'பாப்' இசைப் பாடகரான ராம்கர்ணன் அறிமுகம் ஆகிறார். கதாநாயகியாக மோனல் நடிக்கிறார். இன்னொரு பிரபல

# பொறுப்பாளராக ரோஜா?



ரோஜா முகத்தில் நிஜமாகவே இப்போது புன்னகைப் பூ பூத்துக் குலுங்குகிறது! இருக்காதா? நூறு படங்களைத் தாண்டி சாதனை படைத்த இளம் நடிகை என்ற சந்தோஷம் இருந்தாலும். . . பொருளாதார ரீதியாக ஏற்பட்ட இழப்புகளால் ரொம்பவே அப்செட்டாகியிருந்தார். இதற்கு நடுவே சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசக் கட்சியில் உறுப்பினர் கார்டு வாங்காத அரசியல்வாதியாக ஒரு பக்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். எதிர்க்கட்சிகளைச் சமாளிக்க இந்த மாதிரி ஒரு அட்ராக்ஷன் நாயுடுவுக்கும் தேவைப்பட்டது. ஏற்கனவே இன்னொரு அட்ராக்ஷனான ஜெயப்பிரதாவை எம்.பி. ஆக்கி அழகு பார்த்தார். இந்த முறை ரோஜாவுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கும் என்று சொல்லப்பட்டது.

முழு நேர அரசியலுக்கான நேரம் இதுவல்ல என்று மறுத்துவிட்டாராம் ரோஜா. ஸோ. . . ஆந்திர மாநிலத்தின் திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் முக்கிய பொறுப்புக் கொடுத்து கௌரவப்படுத்தியிருக்கிறார்.

தான் சார்ந்த தொழில் ரீதியான பொறுப்பு கிடைத்ததில் சந்தோஷமாக இருக்கிறார் ரோஜா. இளம் வயதில் ஒரு நடிகை இந்த பொறுப்புக்கு வருவதும் இதுதான் முதல் தடவை!

# கதாநாயகனாக நடிக்கும் "கிச்சா"!

தர்ஷினி மூவி மேக்கர்ஸ் தயாரிக்கும் படம் "கிச்சா". இதில் கதாநாயகனாக 'பாப்' இசைப் பாடகரான ராம்கர்ணன் அறிமுகம் ஆகிறார். கதாநாயகியாக மோனல் நடிக்கிறார். இன்னொரு பிரபல கதாநாயகி தேர்வு நடந்து வருகிறது. மற்றும் ராஜன் பி. தேவ், கருணாஸ், புதுமுகம் ஜெய் நடிக்கிறார்கள்.



படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார் ராஜா மகேஷ். கதாசிரியர் கலை மணியிடம் உதவி இயக்குனராக பணியாற்றிய இவர் ஒரு ஓவியரும் கூட.

கிச்சாஸ் ஒளிப்பதிவு செய்ய லெனின் – வி.டி. விஜயன் படத் தொகுப்பையும், நடனத்தை அசோக்ராஜாவும், சண்டைப் பயிற்சியை பம்மல் ரவியும் தயாரிப்பு மேற்பா ர்வையை அசே ாக்கும ாரும், தயாரிப்பு நிர்வாகத்தை அம்சராஜும் கவனிக்கிறார்கள். மோகன்ராஜ், கல்யாணகுமார், ஆர்.பி. ராஜ், பி.ஜி. சேகர் ஆகியோர் இணைந்து தயாரிக்கும் "கிச்சா" படத்தின் படப்பிடிப்பு சென்னை, கும்பகோணம், மலேசியாவில் நடக்கிறது.




இப் பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 10.04.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது